Registered as a Newspaper in Srilanka

# தீபம்

தமிழின் முதல்தர
வார இதழ்
www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 91 • 07.05.2017

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா
உடனே அழையுங்கள்
076 82 555 67 / 60
தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



## மேதினத்தில் என்ன நடந்தது?
### ஆள்பிடிக்க பட்டபாடுகள்

## ஆட்களை பார்த்ததும் மகிந்த குளிர்ந்து விட்டார்
### அனுபவங்களை எழுதுகிறார் முன்னாள் எம்.பி சந்திரகுமார்

## இப்படித்தான் மகளை வளர்த்தார் பிரபாகரன்

# பின்னாலுள்ள கை யாருடையது?

### கண்ணை மூடுகிறதா பணம்?




VIKKI LEARNERS

எமது சேவை உங்களுக்கானது
உங்களுக்கு அருகாமையில் நாம்
எமது புதிய கிளை தற்போது சுன்னாகம் நகரில்.

வடபுலத்தில் தரமான சாரதி ஆக இன்றே
எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.




அரச
அங்கீகாரம்
பெற்ற சாரதி
பயிற்சி
பாடசாலை



தலைமை காரியாலயம்
136/1 பரமேஸ்வரா சந்தி
பலாலி ரோடு

No125/1 kks road
Chunnagam.
Phone:
0778308390,
021722 3201



NO 1 TOPAZ

TOPAZ
No. 01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்



மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்

We are specialist in in
Wedding suits, Wedding Sarees , Party Sarees,
Wedding Frocks, Party Frocks and all kinds of Items

TOPZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645

TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
Email : topazagn@gmail.com

TOPZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933




Archy
hot food
ஆச்சி ஹாட் பூட்

யாழ்பாணத்தில் அதி உயர்தர
மற்றும் அதிகளவிலான
உணவினை உற்பத்தி செய்யும்
ஒரே ஒரு நிறுவனம்.

அரச அங்கீகாரம் பெற்ற உணவு
உற்பத்தியாளர்கள்.

மிகவும் பிரமாண்டமான கைதடி இல் உள்ள ஆச்சி உணவு தொழிசாலையில் இருந்து மிகவும் சுகாதாரா
முறையில் தயாரிக்கப்பட உணவுகள் யாழின் அனைத்து ஆச்சி ஹாட் பூட் கிளைகளிலும் கிடைக்கிறது.

எந்த ஒரு இரசாயன
கலப்பும் அற்ற முறையில்
கைதடி தோட்டங்களில்
விளைவிக்கப்பட மரக்கறிகளே
பயன்படுத்தபடுகிறது.







நீங்களும் ஒரு முறை எமது கைதடி இல் உள்ள தொழிசாலை உடன் கூடிய ரெஸ்டாரெண்ட்க்கு
(restaurant) வருகை தந்து அனைத்தையும் பார்வையிடுவதோடு உண்டும் மகிழலாம்.

Food factory and restaurant: கண்டி வீதி கைதடி கிழக்கு கைதடி
Archy restaurant: 147 பலாலி வீதி திருநெல்வேலி.
Phone :021 222 5001 ,021 205 7455

உங்கள் தேவைக்கு
ஏற்ப அனைத்து வகை
உணவுகளும் ஓடர் செய்து
பெற்று கொள்ளலாம்

Hot line :
0774688286



## மகிந்த வீட்டு கிளி பறந்தது!

காலிமுகத்திடலில் மகிந்தவின் மேதினத்தில் சுதந்திரக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐம்பது பேர்வரையில் சென்றிருந்தனர். கடந்த பாராளுமன்ற தேர்தலில் இவர்கள் சுதந்திரக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியடைந்தவர்கள். இவர்களை கட்சிக்குள் தக்கவைக்கும் மைத்திரியின் முயற்சி இதுவரை வெற்றியளிக்கவில்லை. ஆனால் மைத்திரி சத்தமில்லாமல் ஒரு காரியம் செய்துள்ளார். மகிந்தவின் முகாமில் இருந்த ஒரு தொகுதி உறுப்பினர்களை வளைத்து எடுத்துள்ளார். கடந்த அரசில் முக்கியஸ்தர்களாக இருந்த இவர்களிற்கு, 2015 பாராளுமன்ற தேர்தலில் ஆசனம் வழங்கப்படாதவர்களும் அடக்கம்.

மகிந்த ராஜபக்சவின் குடும்ப உறுப்பினரான நிருபமா ராஜபக்ச (முன்னாள் பிரதியமைச்சர்) கண்டியில் மைத்திரியின் கூட்டத்தில் மேடையேறினார். அவருக்கு 3வது வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் இராஜாங்க அமைச்சர் பதவியை அண்மையில் துறந்த பிரியங்கர ஜயரத்னவும் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தார். முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரட்ன, முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, முன்னாள் பிரதியமைச்சர் தயாசித்த திசேரா மற்றும் விக்டர் அன்ரனி ஆகியோரும் வருகை தந்திருந்தனர். இவர்களில் ஜயரட்ன தவிர்ந்த மற்றையவர்கள் கடந்த தேர்தலில் மகிந்தவிற்கு ஆதரவாக பிரசாரம் செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## முதல் பிறந்தநாளுக்கு நாலு கோடி பரிசு!

முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவின் நடவடிக்கையொன்று சமூகவலைத்தளங்களில் பலவிதமான அபிப்பிராயங்களை உருவாக்கி வருகிறது. தனது பேத்தியின் பிறந்தநாளின்போது 4கோடி ரூபா பெறுமதியான பென்ஸ் கார் பரிசளித்துள்ளார். தனது மகளின் மகளது முதலாவது பிறந்ததினத்தின்போதே கார் பரிசளித்துள்ளார்.

## ஊர் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடித்த அமைச்சர்!

படிப்பவர்களின் வயிறு பற்றியெறியும் செய்தி இது. தனது அமைச்சு பதவியை தக்கவைக்க, நாட்டிலுள்ள முக்கிய சமயத்தலைவர்கள் சிலருக்கு கார்களை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார். இந்த கார்கள் அமைச்சு நிதியிலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்த அமைச்சரின் செயற்பாடுகள், அவரை மாற்றுவதென மைத்திரி எடுத்த முடிவு தொடர்வாக அண்மைய இதழ்களில் தீபம் செய்தி வெளியிட்டிருந்தது.

அமைச்சரவை மாற்றத்தில் தனது தலை உருளாமல் பார்த்து கொள்ள முக்கிய சமயத்தலைவர்களின் உதவியை அமைச்சர் நாடியுள்ளார். அவர்களிற்கு பரிசளிக்க ஐந்து கார்களை கொள்வனவு செய்திருந்தார். புதியரக வொல்வோ ரக கார்களே இவை. ஒவ்வொன்றும் மூன்றரை கோடி ரூபா பெறுமதியானவை.எனினும், மல்வத்து மகாநாயக்க தேரர் இந்த அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளவில்லையென தெரிய வருகிறது. தனது அமைச்சு பதவியை காப்பாற்றவும், தனது புதிய முதலீட்டு திட்டம் வெற்றிபெறுவதற்கான ஆசீர்வாதத்தை பெறுவதற்காகவுமே இந்த அன்பளிப்புக்களை வழங்கியதாக தெரிய வருகிறது. இந்தக்கார்கள் அமைச்சு நிதியிலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

தனது அமைச்சு பதவியில் மாற்றம் செய்தால் இன்னொரு முக்கிய அமைச்சை கோரியிருப்பதுடன், அது கிடைக்காத பட்சத்தில் பாராளுமன்ற பின்வரிசையில் அமரப்போவதாக கட்சித்தலைமைக்கு இவர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஆயிரம் பட்டதாரிகளிற்கு உடனடி வேலைவாய்ப்பு!



வடக்கிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் ஆயிரம் பேரை உடனடியாக அரசசேவையில் இணைத்துக்கொள்ளப் படவுள்ளனர். தமிழ்தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகள் யாழில் தொடர் போராட்டங்களை நடத்தினார்கள். கடந்த மார்ச் மாதம் 10ம் திகதி போராட்டக்காரர்களை அழைத்து சென்று பிரதமருடன் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்திருந்தார் சுமந்திரன். இந்த பேச்சின் போது, திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை ஆராய்ந்து, அவற்றை பூரணப்படுத்த முயல்வதாகவும், அதற்கு 3 வார காலஅவகாசம் தேவையெனவும் பிரதமர் கூறியிருந்தார்.

இதையடுத்து, வடகில் வெற்றிடமாக இருந்த பணியிடங்கள் ஆயிரம் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கு பட்டதாரிகளை நியமனம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. நியமனங்களை வழங்கும்போது, பல்கலைகழகத்திலிருந்து வெளியேறிய காலவரிசையை கவனத்தில் கொள்ளும்படி வலியுறுத்தியுள்ளதாகவும், அதை பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

ஏனையவர்களிற்கு அவர்களின் தகைமையின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.இதுதவிர, பட்டதாரிகளிற்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிநெறியொன்றும் யாழில் ஆரம்பிக்கப் படவுள்ளது. இந்த பயிற்சி நெறியின் மூலம் தனியார்துறையில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

தீபம் வழங்கும் மாபெரும் பரிசு திட்டம்.
தீபம் வாங்கினால் பெறுமதிமிக்க பரிசுகள் காத்திருக்கின்றன.
ஒவ்வொரு மாதமும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 5 வாசகர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள்.
விக்கி learners வழங்கும் 2500 ரூபா பெறுமதியான கட்டண கழிவினை வெல்வதற்கு அரியசந்தர்ப்பம்.

நீங்களும் எமது பரிசு மழையில் இணையலாம்.

முறை 1. கூப்பனை நிரப்பி எமது முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கையளிக்கலாம்.

முறை 2. கூப்பனை நிரப்பி எமது பத்திரிகை முகவர் இடம் கொடுக்கலாம்.

முறை 3. கூப்பனை நிரப்பி எமது facebook.com/deepamweekly/ பக்கத்திற்கு அனுப்பலாம்

குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் வாசகர்கள் பெயர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் எமது பத்திரிகையில் வெளியிடப்படும்.

Issue Number 91.

Full Name :....................

Address :....................

Nic :....................

Phone Number :....................

## புத்தர்சிலையால் ஹக்கீமிற்கு நிம்மதி!

அம்பாறை மாவட்டம் இறக்காமம் மாயக்கல்லி மலை விவகாரத்தால் முஸ்லிம் காங்கிரஸிற்கு கிடைத்த அனுகூலம் தேசியப்பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினர் பிரச்சினை தற்காலிகமாக மறக்கப்பட்டிருப்பது.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச் சேனை பிரதேசத்துக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மிக விரைவில் வழங்கப்படும் என்ற எதிர் பார்ப்பு கட்சிக்குள் கிளப்பி விடப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் அது இன்னமும் நடக்கவில்லை. தற்காலிகமாக தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப் பினர் நியமனம் பெற்றதாக கூறப்படும் எம்.எச்.எம்.சல்மான் இருபது மாதங் களிற்கு மேலாக அந்த பதவியை வகித்து வருகிறார். எனினும், அவருக்கு வழங்கப் பட்ட தேசியப்பட்டியல் நியமனத்தை மீளப்பெறுவதில் கட்சி தலைமை சிக்கலை சந்திப்பதாக உள்கட்சி தகவல்கள் கூறுகின்றன.

அட்டாளைச்சேனைக்கு தேசியப்பட்டி யல் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழும் சமயங்களில், பசீர் சேகுதாவூத் மற்றும் ஹசனலி ஆகியோர் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப் பினர் பதவிகளை கேட்கிறார்கள் என்று கூறுவது காங்கிரஸ் தலைமையின் வழக்க மாக இருந்தது. எனினும், தற்போது அப்படி காரணம் கூறும் வாய்ப்பில் லாத நிலையுள்ளது. எனினும், அட்டாளை சேனைக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிவிட்டது.

இன்னும் சிறிதுகாலம் இந்த அமைதி நீடித்தால் அட்டாளைச்சேனைக்கான தேசியப்பட்டியல் நியமனம் கிடைக்காது என கட்சியின் உயர்பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.



## பொதுபலசேனா ஆதரவாளரும் மைத்திரியுடன்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மஹியங் களை அமைப்பாளராக பொதுபல சேனா அமைப்பின் தீவிர ஆதரவாளர் நியமிக்கப்பட்டுள்ளது முஸ்லீம்கள் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பொதுபலசேனாவை மஹியங்கனைக்கு அழைத்து வருவதில் தீவிரமாக செயற்பட்ட இவர், அங்கு இனவாத சுவரொட்டிகளை ஒட்டியவர் என குறிப்பிடப்படுகிறது. இவர் மீது பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாக மஹியங்கணை வட்டறக்க விஜித தேரர் அண்மையில் குற்றம் சுமத்தியதும் குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக மஹியங் கனை யில் முஸ்லீம் சிங்கள உறவு சீர்கெட்ட நிலையிலேயே இருக்கிறது. முஸ்லீம்களிற்கு எதிரான வெறுப்புணர்வு பிரசாரங்கள் அந்த பகுதியில் அதிகரித்து செல்லும் நிலையில், தீவிர இனவாத அமைப்பான பொதுபலசேனவின் ஆதரவாளரை பிரதேச அமைப்பாளராக நியமித்தது பொருத்தமற்ற செயல் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நியமனம் பிரதேசத்தின் ஐக்கியத்தை மேலும் சீர்குலைப்பதாகவும் அமையலாம் எனவும் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## மனைவிக்கும் கள்ளக்காதலனிற்கும் பரிசளித்த கணவன்!

தனது மனைவிக்கு கள்ளக்காதல் இருப்பதை அறிந்து, இரகசியமாக நாட்டுக்கு வந்த கணவனின் நெஞ்சை நெகிழச்செய்யும் சம்பவம் பற்றிய செய்தியொன்று வெளியாகியுள்ளது. மஹியங்கனையில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

குறித்த நபரிற்கு எட்டு வருடங்களின் முன் திருமணம் நடந்துள்ளது. 5, 3 வயதுகளில் குழந்தைகளும் உள்ளனர். குடும்பநிலையை கருத்தில் கொண்டு, மத்திய கிழக்கு நாடொன்றிற்கு பணிக்கு சென்றுள்ளார். அவர் நாட்டைவிட்டு சென்று சில மாதங்களிலேயே மனைவிக்கு, உள்ளூரில் கள்ளக்காதலன் ஒருவன் கிடைத்துள்ளான். கணவன் இல்லாத நிலையில் கள்ளக்காதலனை வீட்டில் தங்கவைத்துள்ளாள் அந்த மனைவி. இதை நண்பர்கள் மூலம் அறிந்த கணவன், தனது தாய் இறந்துவிட்டதாக பணிபுரியும் நிறுவனத்தில் பொய்யான ஆவணங்களை சமர்ப்பித்து இரகசியமாக நாட்டிற்கு திரும்பியுள்ளார். வீட்டுக்கு அருகில் உள்ள நண்பர்களின் வீட்டில் இரகசியமாக தங்கியிருந்து, மனைவியின் கள்ளக்காதலன் தனது வீட்டிலுள்ள சமயம் பார்த்து சென்றுள்ளார். கணவன் திடீரென வந்ததால் வெலவெலத்து, போனார் மனைவி. அறைக்குள் உறக்கத்திலிருந்த கள்ளக்காதலனை அழைத்து வந்து, மனைவியுடன் கைகோர்த்து "சந்தோசமாக வாழுங்கள்" என கண்ணீருடன் வாழ்த்தியுள்ளார். பின்னர் உறக்கத்திலிருந்த பிள்ளைகளை உச்சிமுகர்ந்து "எனது சீதனமாக தருகிறேன். பத்திரமாக வளர்த்து, கொள்ளுங்கள்" என கேட்டுக்கொண்டதுடன், வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த உடை, பரிசுப்பொருட்களையும் கொடுத்து, விட்டு சென்றுள்ளார்.

## அம்பாறை வீரர்களிற்கு அதிக பதக்கம்!

ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகாண கராத்தே சுற்றுப்போட்டி, அண்மையில் சம்மாந்துறை உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகான சம்மேளன தலைவர் முகம்மத் இக்பால் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் இருநூறு வீரர்கள் கலந்துகொண்டனர்.

இதில் அம்பாறை மாவட்ட வீரர்கள் அதிக பதக்கங்களை பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியின் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற வீரர்கள் தேசிய போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய கராத்தே போட்டி எதிர்வரும் இம்மாதம் 25 ஆம் திகதி முதல், 28 ஆம் திகதி வரை கொழும்பு, சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற உள்ளது.




## வாழைச்சேனையில் ஆர்ப்பாட்டம்!

வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான காணி மோசடி செய்யப்பட்டமை தொடர்பாகவும், அக்காணியில் அமைக்கப்பட்டு வரும் கட்டடத்தை நிறுத்துமாறும் கோரியும் கடந்த 03ம் திகதி ஆர்பாட்டப் பேரணி நடந்துள்ளது. ஆலய நிருவாகம் ஏற்பாடு செய்த பேரணியில் கிராம அபிவிருத்திச் சங்கம், இளைஞர் விளையாட்டுக் கழகம், மாதர் சங்கம் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான பேரணி வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதி வழியாக வாழைச்சேனை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகம் வரை சென்றது.

## கிழக்கு முதலமைச்சரின் நிறுவனம் பற்றிய விசாரணை!

சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசிற்கு சொந்தமான 110 இலட்சம் ரூபாவிற்கு அதிக பெறுமதியுடைய காணியொன்றை கிழக்கு முதலமைச்சர் நசீர் அஹமட்டின் யுனிட்டி பில்டர்ஸ் நிறுவனம் மோசடியான முறையில் கையகப்படுத்தியுள்ளதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்தவாரம் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு மோசடி தடுப்பு பிரிவு நீதிமன்றத்தில் அறிவித்தனர். ஆவணங்களை திரிவுபடுத்தி இந்தக்காணி மோசடி செய்யப்பட்டதாக சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் செயற்பாட்டாளரான ஊடகவியலாளர் துவான் நசீர் இந்த முறைப்பாட்டை செய்திருந்தார். இந்த முறைப்பாடு தொடர்பில் குறித்த ஆவணங்கள் மற்றும் வங்கிக்கணக்கு விபரங்களை பெற்றுக்கொண்டு மேலதிக விசாரணை நடத்தி வருவதாக மோசடி தடுப்பு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

தேவையான ஆவணங்களை பெற்று விசாரணையை துரிதமாக மேற்கொண்டு முன்னேற்ற அறிக்கையை தாக்கல் செய்யுமாறு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன கொழும்பு மோசடி தடுப்புபிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.



# பேஸ்புக்கிற்கு வெளியிலிருக்கும் கடல்

மியான்மரை சேர்ந்த அகதிகள் 30 பேர் இலங்கை கடற்பரப்பில் தத்தளித்து கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் தங்க வைக்கப் பட்டிருந்த அவர்கள் தற்போது மீரிஹான தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மியான்மரில் ஒடுக்கப்படும் ரோஹிங்யா முஸ்லீம்களே இவர்கள். மியான்மரில் இருந்து தப்பிவந்து, இந்தியாவில் கடந்த நான்கு வருடங்களாக தங்கியிருந்தவர்கள், இந்தியாவில் வாழ முடியாத நிலையில் புதிய வதிவிடம் தேடி கடலில் இறங்கி தத்தளித்து இலங்கை வந்துள்ளனர். சமகால உலக மனச்சாட்சிகளில் ஒன்று ரோஹிங்யா இனம். இன்று உலகில் அதிகம் வதைக்கப்படும் இனங்களில் ஒன்று. அரசியல் உரிமை மட்டுமல்லாமல் வாழும் உரிமைகூட மறுக்கப்பட்டவர்கள். மியான்மரின் பௌத்த பெரும்பான்மையினரால் அடிப்படை வாழ்வுரிமைகூட மறுக்கப்பட்ட ரோஹிங்கியாக்களின் அவலத்திற்கு சாட்சிகள் அடிக்கடி வீடியோவாகவும் வெளியாகிக் கொண்டிருக்கிறது.

ஒருகாலத்தில் மியான்மரின் அதிகாரம் மேற்குலகத்திற்கு உவப்பானதாக இருக்கவில்லை. அப்போது உலகம் ரோஹிங்கியாக்கள் பற்றி பேசிக்கொண்டது. மேற்கால் ஊட்டி வளர்க்கப்பட்டு ஜனநாயக முகமாக்கப்பட்ட ஆங் சான் சூகி கூட ரோஹிங்கியா விவகாரத்தில் மூச்சும் விட்டதில்லை. உவப்பான ஆட்சி அங்கு அமைந்ததன் பின்னர் ரோஹிங்கியாக்களின் நிலை மிக மோசமாகிவிட்டது. அங்கு வாழ முடியாமல் கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்தி அயல்நாடுகளிற்கு அவர்கள் தப்பிச்செல்கிறார்கள். இப்படி வெளியேறி இந்தியாவில் தங்கியிருந்த 30 பேரே இப்பொழுது மீரிஹான முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தியா அகதி களை எப்படி பராமரிக்கும் என்பதற்கு வாழும் சாட்சிகளாக ஈழத்தமிழர்கள் ஏராளம் பேர் உள்ளனர். நம்மவர்களிற்காக உருவாக்கப்பட்ட திறந்தவெளி சிறைச்சாலைகள் இன்றும் உள்ளன. இந்தியாவில் இருக்க முடியாமல் இன்னொரு வளமான வாழ்க் கையை தேடி புறப்பட்டவர்களின் எதிர்காலம் இப்பொழுது கேள்விக்குறியாக உள்ளது.

இவர்களில் சிலர் இலங்கையில் வாழ ஆசைப்படுகிறார்கள். ஆனால் அந்த செய்தி திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது. தீவிரமான பௌத்த அமைப்புக்களின் தலையிடி ஏற்கனவே இருந்து கொண்டிருக்கும் நிலையில் புதிதாக எதற்கு தலையிடி என அதிகாரத்தில் இருப்பவர்கள் நினைக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் அந்த அகதிகள் வைக்கப்பட்டிருந்தபோது, அருகிலிருந்த பள்ளியொன்றின் பாங்கொலியை கேட்டு, பழக்கப்பட்ட இடத்தில் இருப்பதை போலிருக்கும் உணர்வேற்படுவதால் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்க அவர்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தியுமிருந்தனர். சொந்தநாட்டில் வாழ முடியாமல் தப்பியோடி வந்த ரோஹிங்கியாக்களிற்கு அடைக்கலம் கொடுப்பதே மனிதாபிமானம். அந்த அகதிகளில் பலர் ஐரோப்பிய நாடுகள் அல்லது மத்திய கிழக்கு நாடுகளை குறிவைப்பதாக கூறுகிறார்கள். சிலர் இலங்கையில் வாழ ஆசைப்படுகிறார்கள். இலங்கையில் வாழ ஆசைப்படுபவர்களை, முறையான சர்வதேச நடைமுறையின்படி இலங்கையில் குடியமர்த்தலாம்.

உலகத்தில் மிகமோசமாக ஒடுக்கப்படும் இனத்தவர் தப்பி ஓடிவரும்போது, அவர்களை கண்டுகொள்ளாமலிருப்பது மனிதத்தன்மையல்ல. மியான்மர் பௌத்தநாடு. ரோஹிங்கியாக்களிற்கு எதிரான கடுமையான நிலைப்பாடுடைய அசீன் விராது என்ற இனவாத பௌத்தபிக்கு பொதுபலசேனவுடன் நெருங்கிய தொடர்பிலுள்ளவர். பொதுபலசேனவின் செங்கம்பள விரிப்பு அழைப்பில் இலங் கைக்கு வந்தும் சென்றவர். இப்படி இரண்டு அரசுகளிற்கும், இனங்களிற்குமிடையில் பிணைப்பு உள்ள சமயத்தில் ரோஹிங்கியாக்களை அரசு கவனத்தில் கொள்ளாது. அரசுகள் கவனத்தில் கொள்ளவில்லையென்றால், இப்படியான விவகாரங்கள் கவனிக்காமலேயே விடுபட்டு விடுமா? நாட்டில் எத்தனை முஸ்லீம்கட்சிகள் உள்ளன? அவர்களில் யாரும் அகதிகளாக வந்த ரோஹிங்கியாக்களிற்காக குரல் கொடுக்க முடியாமல் போனது ஏன்? இதை பற்றி பேசினால், பௌத்த இனவாத அமைப்புக்கள் விழித்துக் கொள்ளும் என்ற அச்சமா? இப்படி அச்சமிருப்பின், எதற்கு இந்த கட்சிகள் முஸ்லீம் என்ற அடைமொழியை முன்னால் வைத்துள்ளனர்? பேசாமல் ஒற்றை மத ஏகபோகத்தை ஏற்றுக்கொள்ளும் விதமான அடையாளங்களை சுமக்கலாமே!

இதில் கவனிக்கத்தக்க இன்னொரு விடயமும் உள்ளது. அந்த 30 அகதிகளும் யாழ்ப்பாணத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த சமயத்தில் தமிழர்களின் எந்த அரசியல், சிவில், மனிதஉரிமை அமைப்புக்களும் சென்று பார்க்கவில்லை. சிறிய முஸ்லீம் அமைப்புக்கள் சிலவும் சட்டத்தரணிகளுமே சென்று பார்த்திருந்தனர். தற்போது தமிழர்கள் மத்தியில் உள்ள அரசியல், சிவில், மனிதஉரிமை செயற்பாட்டாளர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் அதை வருமானமீட்டும் தொழிலாக பார்ப்பவர்கள். அர்ப்பணிப்பாக செய்வதில்லை.

அதனால் அவர்களால் தெளிவான, சரியான முடிவுகளை எடுக்க முடிவதில்லை. தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை வெறும் தேர்தல் வாக்களிப்பு அரசியலாக்க மட்டும் மாற்றுபவர்களாகவே இவர்கள் உள்ளனர். அர்ப்பணிப்பு, தியாகம், போராட்ட வாழ்க்கை எதுவுமில்லாத இவர்களால் ஒடுக்கப்பட்ட இனத்தின் அரசியலை எப்படி நகர்த்துவதென தெரியாது. ஒடுக்கப்பட்ட இன்னொரு இனத்தின் வலியும் புரியாது.

மியான்மர் ஒரு பௌத்தநாடு என்பதால், இலங்கையை இகழ்வதாக கருதி, ரோஹிங்கியாக்களிற்கு இழைக்கப்படும் கொடுமைகளை சமூக ஊடகங்களில் பகிர்பவர்கள்தான் நமது இளம் தலைமுறையினர். ஆனால் நிஜத்தில் நமது வாசல்வரை வந்த ரோஹிங்கியாக்களை நாம் கணக்கெடுக்கவில்லை. ஒருவேளை உணவளிக்கவில்லை. அந்த அகதிகள் வந்து எமது கடலில் தத்தளித்தது, எமது பேஸ்புக்குகளில் ஏனோ எதிரொலிக்கவில்லை. எவ்வளவு பெரிய அவமானம் இது? இப்போது எம்மிடமுள்ளது ஒரேயொரு சந்தர்ப்பம்தான். இலங்கையில் வாழ ஆசைப்படும் ரோஹிங்கியாக்களை, தங்குவதற்கு அனுமதி கொடு என அரசை வலியுறுத்துவது மட்டுமே. செய்வோமா?

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிட தொகுதி)
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk



**சுகாஸ் கனகரட்ணம்**
**– தமிழ்தேசிய மக்கள் முன்னணி**

பொன்னம்பலத்தின் சைக்கிளையா இவர்கள் இன்னும் ஓடுகிறார்கள் என சம்பந்தன் ஐயா கேட்டிருந்தார். அவருக்கு ஒன்றை சொல்கிறோம். அன்று ஜி.ஜியின் சைக்கிளை ஓடினோம். பின்னர் குமாரின் சைக்கிளை ஓடினோம். இப்போது கஜேந்திரகுமாரின் சைக்கிளை ஓடுகிறோம். நாங்கள் மாறவில்லை. ஆனால் சைக்கிள் கொஞ்சம் காற்று போயிருக்கிறது. இன்று இளைஞர்கள் காற்றடித்துக் கொண்டிருக்கிறார்கள். அடுத்த தேர்தலில் தெரியும், சைக்கிள் ஓடுமா இல்லை பறக்குமா என. சம்பந்தன் ஐயாவிடம் நாங்கள் ஒன்றை கேட்கிறோம் நீங்கள் கட்டிக்கொண்டிருப்பது தந்தை செல்வாவின் வீடா? இல்லை. நேற்று மகிந்த ராஜபக்சவின் வீட்டை கட்டினீர்கள். இன்று மைத்திரி, ரணிலின் வீட்டை கட்டிக்கொண்டிருக்கிறீர்கள்.




**த.கணேசநாதன்**
**– வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர்**

தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைந்தால் அவர்களுக்கு திருமணம் நடக்காதென சொல்லும் ஒருகாலகட்டம் இருந்தது. ஆனால் இப்போது அது மாறிவிட்டது. அடுத்த மாதம் 1500 தமிழ் பொலிசார் உள்வாங்கப்பட்டவுள்ளனர். ஒரு உத்தியோகத்தருக்கு 55,000 லரை சம்பளம் வழங்கப்படவுள்ளது.




**அயூப் அஸ்மின்**
**– வடமாகாணசபை உறுப்பினர்**

சம்பந்தன் அடிக்கடி கூறுவார், வடக்கு கிழக்கு பாதுகாக்கப்பட வேண்டுமெனில் இரண்டு மாவட்டமும் இணைந்திருக்க வேண்டுமென. இங்குள்ள தமிழ், முஸ்லீம் மக்கள் இணைந்திருக்க வேண்டுமென தூரநோக்குடன் செயற்படுகிறார். ஆனால் முஸ்லீம் சமூகத்தின் காதுகளிற்கு அது இன்னும் சரியாக சென்றடையவில்லை, அதன் தாற்பரியங்களை புரியவில்லையென்றுதான் தோன்றுகிறது. மறிச்சுக்கட்டியில், இறக்காமத்தில் பிரச்சனைகள் உள்ளன. முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகள் என கூறும் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும், ஹக்கீமும் சம்பந்தனும் இணைந்து ஜனாதிபதியை சந்தித்த பின்னர்தான் தீர்வு கிடைத்துள்ளது.



**விமல் வீரவன்ச**
**– கூட்டு எதிரணி எம்.பி**

அரசாங்கம் எமக்கு மேதின கூட்டம் நடத்த வழங்கிய காலி முகத்திடல் 18 ஏக்கர் நிலப்பரப்புடையது. சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு வழங்கிய கெட்டம்பே மைதானம், ஜேவிபிக்கு வழங்கிய ஜேஆர்சி மைதானம், ஐக்கிய தேசியக்கட்சிக்கு வழங்கிய கெம்பல் மைதானங்களின் மொத்த பரப்பே 11 ஏக்கர்தான். இதைவைத்தே, அந்த மூன்று கூட்டங்களிற்கும் வந்தவர்களை விட, எமது கூட்டத்திற்கு வந்தவர்கள்தான் அதிகம் என்பதை புரிந்து கொள்ளலாம்.



**நாமல் ராஜபக்ச**
**– கூட்டு எதிரணி எம்.பி**

மகிந்த ராஜபக்சவை தண்டிக்கப் போவதாக சரத் பொன்சேகா கூறியுள்ளார். மகிந்த மீது அவர் கொண்டுள்ள வெறுப்பையே இந்த பேச்சு வெளிப்படுத்துகிறது. அமைச்சர் ராஜித சேனாரத்னவும் இதேபோன்ற கருத்தை சொல்லியுள்ளார். மகிந்தவின் புதல்வர்களாகிய நாங்கள் மூவர் இருக்கும்வரை அவரை ஒன்றும் செய்ய முடியாது. இதைவிட இலட்சக்கணக்காக மக்களும் பின்னாலுள்ளனர். இதை கடந்து அவரை தண்டிக்க முடியாது.

## பொலிற்றிக்கல் கிரிக்கெட்

### சிக்சர்

கடந்தவாரம் கண்டி கொட்டம்பே மைதானத்தில் சுதந்திரக்கட்சி மேதினம் நடந்தது. மேதினத்திற்கு மறுநாள் மைதானத்திற்கு வந்த மைத்திரி குப்பைகளை சேகரிக்க ஆரம்பித்தார். பிறகென்ன மைதானமே சுத்தமாகிவிட்டது!


### வைட் போல்

வடமாகாண எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா பெரிய வைட் வீசியிருக்கிறார். தொலைக்காட்சி விவாதமொன்றில் பேசிக் கொண்டிருந்தபோது, "ஆளுந்தரப்பு உறுப்பினர்களுடன் சந்திப்பு ஒன்றிற்கு சென்றிருந்தேன்" என கூற, இடைமறித்த நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், உங்களையும் ஆளுந்தரப்பாக அவர்கள் நினைக்கிறார்களா என இடைமறிக்க, "அட வைடா வீசிவிட்டேனே" என அசடுவழிந்தார்.

### டெட் போல்



கிரிக்கெட்டில் டெட் போல் (dead ball) என்று ஒன்று உண்டு. ஒரு பந்தை டெட் போலாக அறிவிக்க பல காரணங்கள் உண்டு. அதிலொன்று துடுப்பாட்டக்காரர் தயாரில்லாத போது வீசுவது. இப்படித்தான் கடந்தவாரம் காலிமுகத்திடலில் நடந்த மகிந்த அணி மேதினத்தில் பேசிய விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) "ஆசியாவில் சிறந்த தலைவன் உருவாகுவதை சர்வதேச சமூகம் விரும்பாது. அதனால்தான் எங்கள் வீரம்மிக்க தலைவன் மகிந்த ராஜபக்சவை தோற்கடித்தார்கள்" என கூறி, மகிந்தவையே மிரளவைத்தார். இப்படியொரு விசுவாசத்தை மகிந்தவே எதிர்பார்த்திருக்க மாட்டார்.



# தமிழரசுக்கட்சி.... இது அழகல்ல!

நம்மாழ்வார்

கடந்த வாரம் தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு கூட்டம் அம்பாறையில் நடந்தது. மத்தியகுழு கூட்டத்தில் அதிகம் விவாதிக்கப்பட்ட விடயங்களில் ஒன்று ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் அண்மைக்கால செயற்பாடுகள். தமிழரசுக்கட்சியை பகிரங்கமாக காரசாரமாக விமர்சிப்பது, தலைமை மாற்றம் பற்றி அடிக்கடி பேசுவது என்பன தம்மை அவமதிப்பதாக உணர்ந்த தமிழரசுக்கட்சிக்காரர்கள் அங்கு ஏகமாக கொதித்து, ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன்


ஸ்ரீநேசன்


தண்டாயுதபாணி


சீ.வி.கே.சிவஞானம்

போன்றவர்கள் அண்மைக்காலமாக தமிழரசுக்கட்சியை கடுமையாக விமர்சித்து வருகிறார்கள். இது, முந்தநாள் ஆரம்பித்த நிகழ்வல்ல. 2010 இல் இருந்து ஆரம்பித்து இன்று பெரு வளர்ச்சியடைந்துள்ளது. சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழரசுக்கட்சிக்கு பெரும் தலைவலியாக உள்ளார். சுரேஷை இலக்கு வைத்து தமிழரசுக்கட்சி பலவிதமாக காய்களை நகர்த்தி வந்திருக்கிறது. கடந்த தேர்தலில் சுரேஷ் வெற்றியடைய முடியாமல் போனதெல்லாம் தற்செயலான நிகழ்வுகள் அல்ல.

போகுமிடமெல்லாம் தமிழரசுக்கட்சியை விமர்சிப்பது, தலைமை மாற்றத்திற்கு முயற்சிப்பதென சுரேஷின் அண்மைய நடவடிக்கைகளால் கொதித்து போயிருக்கிறது தமிழரசுக்கட்சி. மத்தியகுழு கூட்டத்தில் இது எதிரொலித்தது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் நடவடிக்கைகளை கண்காணிப்பது, இதை எப்படி கையாள்வது போன்றவற்றை அறிக்கையாக சமர்ப்பிக்க மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. வடக்கு அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன், கிழக்கு அமைச்சர் தண்டாயுதபாணி ஆகியோரே குழுவின் அங்கத்தவர்கள்.

தமிழரசுக்கட்சி எதிர் சுரேஷ் மோதலின் இன்னொரு வடிவம்தான், இப்பொழுது தமிழரசுக்கட்சியின் இறுதி நடவடிக்கை. இந்த அறிக்கை எப்படியிருக்குமென்பதை ஊகிப்பதில் சிரமமில்லை. தாயும் பிள்ளையும் என்றபோதும் வாயும் வயிறும் வேறு வேறுதான் என்றொரு தமிழ் சொலவடையுண்டு. கூட்டமைப்பு என்றாலும் கட்சிகளாக பிரிந்து போட்டியிடும்போது "எங்க ஏரியா. உள்ள வராத" பாணியில் முட்டிமோதுவது வழக்கம். தனது பிரதேசத்தில் வேட்பாளரை நிறுத்தியது தொடர்பாக சுரேஷ் மீது வருத்தத்தில்


ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பினர்

உள்ளார் சீ.வி.கே. அதுபோல ஸ்ரீநேசனும் சிவசக்தி ஆனந்தனும் அண்மையில் ஒரு அறிக்கைப் போரிலும் ஈடுபட்டிருந்தனர். சுரேஷ் அணியுடன் ஆகாத இருவர் அந்த குழுவில் உள்ளனர்.

சரி தவறிற்கு அப்பால், ஈ.பி.ஆர்.எல்.எவ் நீண்ட போராட்ட பாரம்பரியமுள்ளது. நீண்ட போராட்ட வரலாற்றில் கூட்டமைப்பின் உருவாக்கம் ஒரு நிகழ்வு. விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்டது என்பதுதான் கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்ற அனைவருக்கும் பாவமன்னிப்பு வழங்கியது. அது சுரேஷிற்கும் பொருந்தும். சம்பந்தனிற்கும் பொருந்தும். மாவைக்கும் பொருந்தும். செல்வம் அடைக்கலநாதனிற்கும் பொருந்தும். இவர்கள் யாரிற்கும் புலிகள் புனிதநீர் தெளித்திருக்காவிட்டால், இப்பொழுது ஆனந்தசங்கரியை போல ஆயுளுக்கும் "நானே அறிக்கைவிட்டு, நானே படிக்கவேண்டும்" என்ற அரசியல் அஞ்ஞானவாசந்தான் வழங்கியிருக்கும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை மண்டையன்குழு என்ற அடைமொழியில் இகழும் ஒரு போக்கு தமிழரசுக் கட்சிக்காரர்கள், அவர்களை சார்ந்திருக்கும் ஊடகக்காரர்களிடம் உள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ் மீதான எதிர்ப்புணர்வு ஒருகாலத்தில் யாரிடமாவது இருந்திருக்குமெனில், அது புலிகள் சார்ந்த பார்வை. ஈ.பி.ஆர்.எல்.எவ் காரர்களிற்கு புலிகள் எதிரிகள். புலிகளிற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் எதிரிகள். இருதரப்பும் ஆயுதங்களால் மோதிக் கொண்டனர். புலிகளின் ஆதரவாளர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை எதிர்த்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆதரவாளர்கள் புலிகளை எதிர்த்தார்கள். இரண்டிலும் எண்ணிக்கைதான் வேறுபட்டது.

புலிகள் அப்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்புடன் மட்டும்தான் மோதினார்கள் என்றல்ல. ரெலோ, புளொட் மற்றும் லொட்டு லொசுக்குக்களாக ஏராளம் ஆயுத இயக்கங்கள் இருந்தன. அவர்களுடன் எல்லாம் மோதினார்கள். இது ஆயுத அரங்கு. ஆயுத அரங்கிற்கு வெளியிலும் மோதினார்கள். தமிழர்களின் ஜனநாயக முகமாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்காரர்கள் யாரும் இந்த மண்ணில் அரசியல் செய்ய வேண்டாமென கூட்டு விரட்டப்பட்டனர். வட்டுக்கோட்டை தீர்மானத்திலிருந்து மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலிற்கு வர நமது ஜனநாயகவாதிகளிற்கு வெறும் நான்கு வருடங்கள் போதுமாக இருந்தது. புலிகளின் பார்வையில் திருப்பிச் சுட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பும் ஒன்றுதான், வட்டுக்கோட்டை வாக்குகளுடன் மாவட்ட அதிகாரசபைக்கு வந்த தமிழர்விடுதலைக் கூட்டணியும் ஒன்றுதான்.

இளையவர்களிடம் ஏற்படும் பெயர்க் குழப்பத்திற்காக ஒரு தகவல். தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ் என்பன இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியை அமைத்தன. பின்னர் அது தமிழர் விடுதலைக்கூட்டணியாக பெயர் மாற்றம் பெற்றது. ஆனந்தசங்கரி தமிழ்தேசிய கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றபின்னர், தமிழரசுக்கட்சி என்ற பெயர் மீண்டும் பாவனைக்கு வந்தது. ஆட்கள் மாறவில்லை. பெயர் மட்டும் தூசி தட்டி எடுக்கப்பட்டது. விடயம் அவ்வளவுதான்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கும் ஒரு வரலாற்று பாத்திரம் உள்ளது. தமிழரசுக்கட்சிக்கும் ஒரு வரலாற்று பாத்திரம் உள்ளது. இரண்டு கட்சிகளிற்குமிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை தலைமைகள்தான் பேசித் தீர்த்து கொள்ள வேண்டும். ஸ்ரீநேசன் போன்றவர்கள் நீண்ட அரசியல் பாரம் பரியமுள்ளவர் அல்ல. இப்படியான விவகாரங்களை கையாள அவர் பொருத்த மற்றவர். சுரேஷ் விவகாரத்தில் அவரது அடிப்படை புரிதலே மிகப்பிழையானது.

சுரேஷ் தமிழரசுக்கட்சியை விமர்சிக்கிறார் என்பது உண்மைதான். அதை ஏன் செய்கிறார்? பொழுதுபோகாமல் வீட்டிலிருந்தபடி அவர் அதை செய்யவில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஒரு பங்காளி கட்சி தலைவர் என்ற அடிப்படையில் இதை செய்கிறார். கூட்டமைப்பின் முடிவுகளில் தான் கலந்து பேசப்படுவதில்லை என்ற விரக்தியில் பேசுகிறார். ஆக, சுரேஷின் குரலெனப்படுவது கூட்டமைப்பில் உள்ள ஒற்றைப்படைத்தன்மைக்கு எதிரான குரல். பன்மைத்துவத்தின் குரல். (சுரேஷின் பன்மைத்துவம் எப்படியானதென்பதை கடந்தவாரம், அதற்கு முதல்வார கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளேன். ஒரு பிரச்சனையும் அதன் நோக்குநிலைகளில் இருந்து பார்க்கும்போதும் வேறுபடும். தமிழரசுக்கட்சியின் தவறுகள் என்ற அடிப்படையில் மட்டும் பார்க்கும்போது, சுரேஷை பன்மைத்துவ குரலாக குறிப்பிட்டேன்)

தமிழ்தேசிய கூட்டமைப்பின் முடிவுகள் எப்படி எடுக்கப்படுகின்றன என்பது ஊருக்கு புதிய செய்தியல்ல. சம்பிரதாயத்திற்கு கட்சி தலைவர்களை கூப்பிட்டு பேசிவிட்டு, தனது முடிவுகளை சம்பந்தன் அறிவிக்கிறார். தமிழரசுக்கட்சியை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஜோதா அக்பர்

மேதின பலப்பரீட்சைகள் முடிந்து விட்டன. ஒவ்வொரு கட்சியும் தமக்கிருக்கும் மக்கள் ஆதரவை வெளிப் படுத்தும் போட்டிக்களமாகவே மே தினத்தை பாவிக்கின்றன. வடக்கு கிழக்கில் மட்டும் இது குறைவாக இருந்தது. ஏனெனில் இங்கு தலைகீழாக நின்றாலும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் பெரும்பான்மை ஆதரவை மாற்ற முடியாதென்பது மற்றைய கட்சிகளிற்கு தெரியும். கிழக்கில் முஸ்லீம் கட்சிகளிற்கு மேதினம் என்றாலே என்னவென்று தெரியாது. அதனால் மேதினம் வடக்கு கிழக்கில் பலப்பரீட்சையாக இருப்பதில்லை.

ஆனால் மலையகம் மற்றும் தெற்கு தேசிய கட்சிகளிற்கு மேதினம் வாழ்வா சாவா பிரச்சனை. ஒவ்வொரு மேதினத் திற்கு பின்னரும் வரவு செலவு கணக்கு பார்ப்பதற்கு முன்னர், மற்றைய கட்சிகளின் மேதினத்திற்கு எத்தனை பேர் வந்தனர் என்பதைதான் கணக்கு பார்ப்பார்கள்.

கட்சிகளின் கௌரவத்துடன் சம்பந்தப் பட்ட விவகாரமாகி விட்டதால் கூட்டத் திற்கு ஆள்திரட்ட சாம, தான, பேத, தண்ட உத்திகளையும் கட்சிகள் பயன்படுத்


மகிந்தவின் பேரணி

# மேதின ஸ்கோர் போர்ட்


தமிழ்தேசிய கூட்டமைப்பின் அம்பாறை பேரணி


ஐதேக பேரணி

தும். மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் சுதந்திரக்கட்சி, ஈ.பி.டி.பி என்பன சமுர்த்தி பயனாளிகளை ஒருவகை மிரட்டல் பாணியில் கூட்டத்திற்கு அள்ளி செல்வார்கள். இன்னும் சில பகுதிகளில் தலைக்கு இவ்வளவு என பணம் கொடுப்பார்கள். வடக்கிலேயே இந்த நிலையென்றால், தெற்கை பற்றி கற்பனை செய்து பாருங்கள். பணம், உணவு, மது என கூட்டத்தை கூட்டுவார்கள். இந்தமுறையும் அப்படித் தான்.

இம்முறை மேதினத்தில் "இது தானா சேர்ந்த கூட்டம்" என பேஸ்புக், ருவிற்றரில் அதிக மக்கள் கூட்ட படங்களை பிரசுரித்து புளகாங்கிதப்பட்டது மகிந்த அண்ட் கோ. உண்மையில் இந்த வருட மேதினத்தில் அவர்கள்தான் அதிக மக்களை கூட்டி னார்கள். காலி முகத்திடலில் நடந்த அவர் களின் மேதினத்தில் கூட்டம் நிறைந்ததா, நிறைக்கப்பட்டதா என்ற விவாதத்திற்கு அப்பால், "காலி முகத்திடலை நிறைத்து காட்டுங்கள் பார்க்கலாம்" என்ற அரச தரப்பின் சவாலை வெற்றிகொண்டுள்ளனர்.

காலி முகத்திடலில் மகிந்தவிற்கு கூடிய கூட்டத்தை பார்த்து அரசதரப்பு முகத்தில் ஈயாடாமல் உட்கார்ந்திருக்கிறது. மைத்திரி மகிந்த போட்டியில் சுதந்திரக்கட்சி இரண்டுபட்டுள்ள நிலையில், இம்முறை பலப்பரீட்சையில் மகிந்தவின் கையே ஓங்கியுள்ளது.

சுதந்திரக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத் தும் கூட்டு எதிரணியின் 50 இற்கும் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களும் காலி யில் மகிந்தவுடன் மேடையில் உட்கார்ந்தி ருந்தனர். ஆக, சுதந்திரக்கட்சியின் பெரும் பான்மை உறுப்பினர்கள் இன்னும் மகிந்த வின் முகாமில்தான் உள்ளனர். அவர்களை கட்டுக்குள் கொண்டுவரும் மைத்திரியின் முயற்சிகள் பலனளிக்கவில்லை.

இந்த மேதினத்தை மகிந்த முகாம் ஒரு உத்தியாக பயன்படுத்தியது. விரைவில் உள்ளூராட்சிசபை தேர்தல் அல்லது புதிய அரசியலமைப்பிற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடக்கவுள்ள சமயத்தில், பெருந்தொகை மக்களை கூட்டினால் தன் மீதான பிம்பத்தை தொடரலாம் என கருதினார். அத்துடன் மக்களை கூட்டி ஆதரவுதளத்தை தொடர்ந்து உயிரோட்ட மாக வைத்திருக்கவும் திட்டமிட்டார்.

அதிக செயற்பாட்டு திறன்மிக்கவர்கள் மகிந்த அணியில்தான் உள்ளனர் என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். இவர்களில் பலர் ஊழல் பெருச்சாளிகள், ஊரையே அடித்து தின்பவர்கள் என்பது கூடுதல் தகவல். ஆனால் தம்மிடமுள்ள நிர்வாகதிறனால் அதை பூசி மெழுகி அரசியல் செய்து கொண்டிருக்கின்றனர். பசில் ராஜபக்ச கச்சிதமாக நிர்வாக ஆற்றலுள்ள பேர்வழி. அதுபோல மகிந்தானந்த, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, றொகான் ரத்வத்த போன்றவர் களையும் குறிப்பிடலாம். இவர்களிற்கு தாராளமாக பணம் வழங்கப்பட்டது. பிறகென்ன, ஒவ்வொரு பிரதேசத்திலு மிருந்தும் ஏராளமானவர்கள் ஏற்றிவரப் பட்டனர்.

மகிந்தவின் மேதின பேரணி வீடியோக் களை நன்றாக கவனித்தவர்களிற்கு ஒரு உண்மை புலப்படும். அதில் மதுபோதையில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். உற்சாகம், ஆட்டம் பாட்டம், ரகளை, தள்ளாட்டம், மோதல், மயக்கம் என மதுபோதையின் ஒவ்வொரு கட்டத்தின் காட்சிகளையும் காணமுடிந்தது. ரூபாவாஹினி தொலைக்காட்சி இவற்றை கச்சித மாக படம்பிடித்திருந்தது. கிடைக்கும் தகவல்களின்படி அந்த பேரணியில் மதுவிநியோகம் தாராளமாக நடந்துள் ளது. அதுதவிர, தலைக்கு 5,000 ரூபா தான் விநியோகிக்கப்பட்டதாகவும் சமூக வலைத்தளங்களில் பரவலாக விமர்சிக்கப் பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

காலமுகத்திடல் அன்று நிலம்தெரியாமல் மனிததலைகளால் நிரம்பியிருந்தது. மகிந்த ராஜபக்ச முகாமில் சமூகஊடகங்களை கையாளும் குழு, ஊடககுழு என்பன சிறப்பாக இயங்கி வருகின்றன. ஏற்கனவே நிரம்பியிருந்த மைதானத்தை இன்னும் பிரமாண்டமாக காண்பிக்கும் புகைப்பட உத்திகளை பாவித்து, சமூக ஊடகங்களில் பீதியை கிளப்பினார்கள்.

ஒவ்வொரு நிகழ்வின் முடிவிலும் அரச புலனாய்வுத்துறை கூட்ட அறிக் கையை தயார் செய்வது வழக்கம். காலி முகத்திடலில் கூட்டம் பற்றி புலனாய்வுத் துறை தயார் செய்து மைத்திரியிடம் வழங்கிய அறிக்கையில், அன்று 100,000 இற்கு சற்று அதிகமானவர்கள் கலந்து கொண்டிருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சுதந்திரக்கட்சியின் மேதினம் கண்டி கெட்டம்பே மைதானத்தில் ஜனாதிபதி மைத்திரி தலைமையில் நடந்தது. இந்தகூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அரச புலனாய்வுதுறையின் அறிக்கைப்படி

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

---

சார்ந்து அரசியல் செய்யும் செல்வம் அடைக்கலநாதனிற்கு அது பிரச்சனை யில்லை. சுரேஷிற்கு பொறுக்க முடிய வில்லை. அவ்வளவுதான்.

2010ம் ஆண்டின்பின் கூட்டமைப்பின் முக்கிய முடிவுகளில் தமிழரசுக்கட்சிக்கு உவப்பில்லாத, பங்காளிக்கட்சிகளின் எந்த முடிவு நடைமுறைப்படுத்தப்பட்டது?


இந்த ஒரு கேள்வியே தமிழரசுக்கட்சியின் ஒற்றைப்படையான, ஜனநாயகமற்ற தன்மைக்கு பதில் சொல்லும். வடக்கு முதலமைச்சர் தேர்வு, வேட்பாளர் பங்கீடு, அமைச்சரவை அறிவிப்பு, நியமன உறுப்பினர் வழங்கல், கடந்த பொதுதேர்தல் வேட்பாளர் பங்கீடு, தேசியப்பட்டியல் நியமனம் எல்லாமே தமிழரசுக்கட்சியின் தனித்தமுடிவுதான். அங்கத்துவ கட்சிகளின் அபிப்பிராயம் எதுவுமே கணக்கில் கொள்ளப்படவில்லை.

மதியாதார் தலைவாசலை மிதியாதே என்றார் அவ்வை கிழவி. இந்த பின்னணி யில்தான் சுரேஷின் கலகத்தை புரிந்து கொள்ள வேண்டும். தனது தவறுகளை சுட்டிக்காட்டிய சுரேஷை களத்திலிருந்து அகற்றுவதென தமிழரசுக்கட்சி முடிவு செய்துள்ளது. தமிழ்தேசிய கூட்டமைப் பென்பது தமிழரசுக்கட்சியாக இருப்பதை நோக்கிய நகர்வின் ஒரு அங்கம்தான் சுரேஷை காய் வெட்டுவது. ஸ்ரீநேசனின் அரசியல் அனுபவத்தை விட, சுரேஷ் ஆரம்பித்த கலகத்திற்கு வயது அதிகம். அண்மையில் கூட்டமொன்றில் உரை யாற்றிய ஸ்ரீநேசன், கூட்டமைப்பின் உள்விவ காரங்களை வெளியில் பேசக்கூடா தென்றார். இது கட்சிகளின் கூட்டமைப்பு பற்றிய அடிப்படை புரிதலே இல்லாத பேச்சு. பெரும்பாலான தமிழரசுக்கட்சிக் காரர்களிடம் இப்படியான புரிதலே இருக்கிறது. அவர்களிற்கு பங்காளிகளாக இல்லாமல் அடிமைகளாக இருப்பவர்கள் தான் தேவை போலும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் மீதான கண்காணிப்பு அறிக்கை முயற்சியென்பது, எதை நோக்கிய தென்பதை சொல்ல வேண்டியதில்லை. உண்மையில் இது மிக தவறானது. இரண்டு கட்சிகளிற்கிடையிலான முரண்பாடு இது. கட்சி தலைமைகளே பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். தமிழரசுக்கட்சி இந்த இடத்தில் செய்ய வேண்டியது, ஈ.பி.ஆர்.எல்.எவ் மீதான கண்காணிப்பு அல்ல. இந்த முரண்பாட்டிற்கு காரணமாக அமைந்த தனது நடத்தை பற்றிய மீளாய்வே. பிரச்சனைகளின் விளைவுகளை அலசுவதால் பலனிருக்காது. பிரச்சனைகளைதானே அடையாளம் காண வேண்டும்!







# தாமதமாக வந்து சுட்டுக் கொன்ற அதிகாரிகள்!

## வவுனியா யானை மீட்பில் நடந்தது இதுதான்

வன்னிமது

வடக்கு, கிழக்கில் யுத்தம் நிலவிய காலப் பகுதிகளில் மக்கள் தமது வாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்ந்த போது, அங்கு யானைகள் வந்துபோகத் தொடங்கின. யுத்தத்துக்குப் பின்னர் மக்கள் மீள்குடியேறத் தொடங்கியபோது, அங்கு யானைகளின் அச்சுறுத்தல்களை மக்கள் எதிர்கொள்ளும் நிலை உருவாகின. மீள்குடியேறிய மக்களின் வீடுகள், சேனைப்பயிர்கள் போன்றவற்றினை அங்கு வழமையாக வந்துபோகும் யானைகள் சேதப்படுத்தின. இதன்போது, யானைகளுடன் மனிதன் முரண்படும் நிலைமைகள் தோன்ற ஆரம்பித்தது. பொதுவாக காடு என்பது ஒரு வேலியிடப்பட்ட மிருகக்காட்சி சாலை அல்ல. அங்கே காட்டு உயிர்களுக்கு கட்டளையிட்டு தடுத்து நிறுத்த முடியாது.

நம் காடுகளின் பரப்பளவு, ஒவ்வோர் ஆண்டும் குறைந்துகொண்டேபோகிறது. உணவுக்காகவும் நீருக்காகவும் காட்டு உயிர்கள் அல்லல்படுகின்றன. குறிப்பாக வில்பத்து போன்ற பல காடுகள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு காட்டு ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக அழிப்பது, வெறும் காடுகளை மட்டும் அல்ல யானைகளின் வாழ்விடங்களையும், வலசைப்பாதைகளையும், வழித்தடங்களையும் தான். யானைகளின் வலசைப் பாதைகள் என்பது, பல ஆயிரம் ஆண்டுகளாக யானைகளின் ஞாபக அடுக்குகளில் புதைந்து கிடக்கும் மரபார்ந்த நினைவுப் பாதை.

ஒரு காட்டு யானை, ஒவ்வொரு நாளும் சராசரியாக 200 கிலோ உணவையும், 150 லிட்டருக்கும் அதிகமான நீரையும் உட்கொள்ளும். அதை ஒரே இடத்தில் இருந்து பெற முடியாது. எனவே, அது காட்டின் பல பகுதிகளுக்கும் நடந்து கடந்து கண்டு அடையும். அப்படி ஒரு வாழ்விடத்தில் இருந்து இன்னொரு வாழ்விடத்துக்குச் செல்லும் இந்தப் பாதை யானைகளின் வழித்தடம் என அழைக்கப்படுகிறது. இந்த மரபுவழிப் பாதைகளை யானைகள் தலைமுறை தலைமுறையாக மறப்பதே இல்லை.

### வவுனியா சம்பவம்

காடுகள் அழிக்கப்படும் செயற்பாடுகளாலும், காலநிலை மாற்றங்களாலும் யானைகளின் உணவு, நீர் என்பவற்றை பெற அலையும் போது மனிதர்களின் வசிப்பிடம் நோக்கி வருகின்றன. அவ்வாறு வரும் யானைகள் மனிதனின் தேவைகளிற்காக பயன்படுத்தப்படும் கிணறு, குழிகளில் விழுந்து மாட்டிக்கொள்கின்றன. இவ்வாறு சிக்குகின்ற யானைகளை வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களும் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் மீட்டு மீண்டும் காட்டிற்குள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

**யானை வாகனத்தை தாக்குகின்ற போது வாகனம் அசைந்தமையினாலேயே குறிதவறியுள்ளது என்று எடுக்க முடியாது. ஏன் எனில் ஆயுத கையாளுதலை நன்கு பயிற்றப்பட்டே இதற்கான வேலைக்கு அதிகாரி நியமிக்கப்படுகின்றார்.**

ஆனால் வவுனியா ஓமந்தை கொம்பு வைத்தகுளத்தில் 17.04.2017 காலை 8.30 மணிக்கு கிணற்றில் விழுந்து கிடந்த இரண்டு யானைகள் மற்றும் இரண்டு குட்டிகளை மீட்க எடுத்த முயற்சியில் ஒரு யானையை சுட்டுக்கொன்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதில் முக்கியமான விடயம் என்னவெனில் காப்பாற்ற வந்தவர்களே இப்படி செய்தமையே.

16.04.2017 இரண்டு குட்டி யானைகளும் இரண்டு பெரிய யானைகளும் கிணற்றிள் வீழ்ந்திருந்தது. இந்நிலையில் இதுதொடர்பாக வவுனியா ஓமந்தை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வன விலங்கு ஜீவரசிகள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவலை வழங்கியிருந்தனர். தகவல் வழங்கப்பட்டு 4.00 மணியாகியும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சமூகமளிக்காமையினால் பொதுமக்களின் உதவியுடன் ஓமந்தை பொலிஸார் சுமார் 5 மணித்தியாளங்களாக போராடி தாய் யானை மற்றும் ஆண் யானையை விட்டு குட்டிகளை மட்டும் மீட்டேடுத்துள்ளனர். அத்துடன் தொடர்ச்சியாக இரவில் மீட்பு பணியினை தொடர முடியாமையினால் மறுநாள் காலை பொலிஸார், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், மக்கள் இணைந்து மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இதற்காக கனரக வாகனத்தை பயன்படுத்தி யானையினை மீட்பதற்கான பாதையினை அமைக்கும் வேலையினை செய்ய ஆரம்பித்தனர்.

அவ்வாறு செய்யும் போது இரு யானைகளும் முண்டியடித்து கொண்டு மேலே வர முயற்சித்ததுடன் ஒரு யானை முன்னேறி மேலே ஏறி வந்தது. அவ்வாறு மேலே வந்த யானை இயங்கிக் கொண்டிருந்த கனரக வாகனத்தினை தாக்க முற்பட்டது. இதனால் பொலிஸாரும், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளினாலும் யானையினை விரட்டுவதற்கான வெடி கொழுத்தி யானை மீது போடடனர். இவ்வாறு வெடி கொழுத்தி போட்ட பின் உக்கிரமடைந்த அவ் யானை வாகனத்தின் சாரதியின் பக்கம் சென்றது. இதனால் வெகுண்ட சாரதி விலக முயற்சித்துள்ளார். அப்போது அவர் அருகில் இருந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரி தற்காப்புக்காக வைத்திருந்த துப்பாக்கியினால் யானையின் தலையில் சுட்டுள்ளார். இதனால் யானை அவ்விடத்திலேயே சாய்ந்து பரிதாபமாக உயிரிழந்தது. அருகிவரும் ஆசிய யானைகளில் மிகப்பெரியது இலங்கை யானைகள் அவ்வாறு இருக்க இப்படி ஒரு நிகழ்வு வேண்டத்தகாததாகவே உள்ளது.

மேலும் அந்நேரத்தில் அதிகாரியின் செயற்பாடு ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஏன் எனில் யானைகள் குழியில் விழுந்த பின் வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தாமதமாக வந்துள்ளனர். இதனால் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் இணைந்து முயற்சித்து ஒரு வழியாக தாய் மற்றும் மற்றைய யானையை விடுத்து குட்டிகளை காப்பாற்றியுள்ளனர். குட்டிகளை காப்பற்ற எடுத்த முயற்சி பாராட்டக்கூடியதாக இருந்தாலும். எந்த மிருகமும் தன் குட்டிகளை பிரித்தால் அதித கோபம் கொண்டிருக்கும். அது மனிதனாகவே இருந்தாலும் கூட மேலும் யானைகள் வெளியே செல்ல முடியாமல் மாட்டிக்கொண்ட நிலை காரணமாகவும் இரு யானைகளும் கோபத்துடன் இருந்துள்ளது.

இவ்வாறான நிலையில்இருயானைகளும் ஒன்றன் பின் ஒன்றாக வர முயற்சித்து ஆன் யானை மேலே வரும் போது எதிரே இயங்கு நிலையில் இருந்த மண் அள்ளும் கனரக வாகனத்தை தாக்க முற்பட்டதாலேயே இவ்வாறு நடைபெற்றுள்ளது. இச்செயற்பாடு யானையின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக தற்காப்புக்காக சுடப்பட்டது என்றாலும் அதற்காக யானையின் தலையில் சுட வேண்டிய

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தேவை இல்லை. இதைவிடுத்து யானை வாகனத்தை தாக்குகின்ற போது வாகனம் அசைந்தமையினாலேயே குறிதவறியுள்ளது என்று எடுக்க முடியாது. ஏன் எனில் ஆயுத கையாளுதலை நன்கு பயிற்றப்பட்டே இதற்கான வேலைக்கு அதிகாரி நியமிக்கப்படுகின்றார்.

இதில் பலராலும் கூறப்பட்ட இன்னொரு விடயம். ஏன் சுடப்பட வேண்டும், மயக்க மருந்து போட்டிருக்கலாம் என்று. மயக்க மருந்து அடிப்பதானால் அதற்கான மருத்துவர் வரப்பட வேண்டும். அவ்வாறு வந்து குறித்த சம்பவத்தின் போது மயக்க மருந்தினை யானையின் மீது செலுத்தும் போது யானை நிலை தடுமாறி மீண்டும் குழியில் விழ வேண்டிய நிலைக்கே அவ்விடத்தில் சாத்தியம் அதிகமாக இருந்துள்ளது. இதனால் அவ் யானை இறப்பதற்கான சாத்தியக்கூறு அதிகமாக உள்ளது. இதனால் இச்செயன் முறை சாத்ததியமற்றது.

இதன் தொடரச்சியாக சம்மந்தப்பட்ட அதிகாரி அனுராதபுரத்திற்கு இடமாற்றம் செய்ததுடன், இதுதொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றத்தில் நடைபெறுகின்றது. இச்சம்பவத்தில் மிகவும் மனவருந்தத்தக்கவிடயம்என்னவெனில்வனஜீவராசிகளை பாதுகாக்க வேணடியவர்களே இவ்வாறு நடந்து கொண்டது தான்.

### மனித யானை மோதல்கள்

1997ஆம் ஆண்டில் 126 காட்டு யானைகள் கொல்லப்பட்டன. அதாவது ஒருவாரத்திற்கு சராசரி 2.4 யானைகள். தற்போதைய புள்ளிவிபரங்களின் அடிப்படையில், வருடந்தோறும் 6 சதவீதமான காட்டு வாழ் உயிரினங்கள் அழிவுக்குள்ளாகின்றன. ஒவ்வொரு வருடமும் நூற்றுக்குக் குறையாத யானைகள், மனிதர்களால் கொல்லப்படுவதாக பத்தாண்டுகளுக்கு முன்னரான கணக்கெடுப்பொன்று கூறியது. ஆனால், பின்னரான காலப்பகுதிகளில் அந்தக் கணக்கு இன்னும் அதிகமானது. 2010ஆம் ஆண்டு 227 யானைகளும் 2011ஆம் ஆண்டு மட்டும் 255 யானைகளும் மனிதர்களால் கொல்லப்பட்டதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 2011ஆம் ஆண்டு யானைகளால் 48 மனிதர்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால், 2012ஆம் ஆண்டு இந்தத் தொகை இன்னும் அதிகமானது. கிட்டத்தட்ட 300 யானைகள், மனிதர்களால் கொல்லப்பட்டன.

இலங்கையில் கடந்த 50 வருடங்களில் யானைகளின் தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தக் காலப்பகுதியில் மட்டும் 1,500 தொடக்கம் 3,000 யானைகள் வரையில் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பு ஒன்றின்படி 5,879 யானைகள் இருந்ததாகக் கூறப்பட்டது. இதன்படி பார்த்தால் 5,000 மனிதர்களுக்கு 01 யானை எனும் விகிதத்திலேயே இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை உள்ளன. 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் 12 ஆயிரம் தொடக்கம் 14 ஆயிரம் வரையிலான யானைகள் இருந்துள்ளன.

அநுராதபுரம், புத்தளம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவில் யானைகள் கொல்லப்படுவதாகக் கூறப்படுகிறது. உலகில் கணிசமான நாடுகளில் தந்தங்களுக்காக யானைகள் கொல்லப்படுகின்றன. ஆனால், இலங்கையில் தந்தங்களுக்காக யானைகள் கொல்லப்படுவது என்பது மிகவும் அரிதாகும். யானைகள் தமது நெல்வயல்களையும் பயிர்களையும் இருப்பிடங்களையும் சேதப்படுத்துகின்றபோது கோபம் கொள்ளும் மனிதன், யானைகள் மீது தாக்குதல் நடத்துகின்றான். துப்பாக்கியால் சுடுதல், விசம் வைத்தல் மற்றும் மின்சாரம் மூலம் யானைகளை, மனிதர்கள் கொல்கின்றார்கள். அண்மை காலங்களில் கூட வவுனியா இராமனூர் புளியங்குளத்தில் யானைக்கு மின்சாரம் பாய்ச்சி கொன்றமைக்காக ஒருவரினை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1989ஆம் ஆண்டில் சர்வதேச ரீதியில் யானைத் தந்த வியாபாரம் சட்டவிரோதமானதாக அறிவிக்கப்பட்டது. இருந்தும் கடந்த பத்து வருட காலப்பகுதியில் இச்சட்டவிரோத வியாபாரம் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. 19ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் யானைகள் சுமார் 65% வரை அழிவடைந்துள்ளது. தேசிய வன ஒதுக்கு பிரதேசங்கள் மற்றும் சிலவேளை தனிப்பட்ட காணிகளிலும் காணப்படுகின்ற வன விலங்குகள் மற்றும் தாவரங்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக 1937 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வனவிலங்குகள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், முக்கியமாக 2009 ஆம் ஆண்டிலே மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், என்பவற்றின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் இச்சட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 2001ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி 5 ஆயிரத்து 879 யானைகள் உள்ளன. அத்துடன், யானை மனித மோதலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்காக 2015 2016ஆம் ஆண்டில் மாத்திரம் 844 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. யானைகளின் பிறப்புகளும் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. 2012ஆம் ஆண்டு 300 யானைகள் மட்டுமே புதிதாகப் பிறந்துள்ளன. யானைகளின் ஆயுட்காலம் சுமார் 70 வருடங்களாகும். பெண் யானையொன்று 09 தொடக்கம் 12 வயதாகும்போது பாலுறுறவில் ஈடுபடக்கூடிய உடற்தகுதியைப் பெறுகிறது. யானையொன்றின் கர்ப்ப காலம் 22 மாதங்களாகும். பாலுட்டிகளில் அதிகமான கர்ப்ப காலத்தினைக் கொண்ட விலங்கு யானை என்றே கூறப்படுகிறது. மேலும் யானைகளுக்கு ஒரே பிரசவத்தில் ஒரு குட்டி மட்டுமே கிடைக்கிறது. ஒன்றுக்கு மேல் கிடைப்பது என்பது மிக மிக அரிதாகும். இவை தவிர, 04 வருடங்களுக்கு ஒரு தடவைதான் யானைகள் குட்டி ஈனும். யானைகளின் இனப்பெருக்கம் குறைந்தளவில் காணப்படுவதற்கு இவையும் காரணங்களாகும்.

இதுஇவ்வாறு இருக்கையில் ரயலில் அடிபட்டு இறக்கின்றமை கவலையான விடயமாகும். குறிப்பாக வவுனியா பறய நாலங்குளத்தில் அண்மையில் யானையொன்று ரயிலில் மோதி இறந்துள்ளதுடன், அதன் வயிற்றில் இருந்த குட்டியும் இறந்துள்ள சம்பவமும் இடம் பெற்றுள்ளது. இலங்கையின் உள்நாட்டு போரின் போர்க் காலத்தில் வன்னி மண்னில் குறிப்பாக வவுனியாவில் யானைகளின் தாக்கம் மிக மிக குறைவாகவே காணப்பட்டன. உள்நாட்டு போர் முடிவடைந்து மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின் அதிகளவான யானைத்தாக்கத்தை மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

இதற்குபலகாரணங்கள்கூறப்பட்டாலும் கடந்த காலங்களில் இருந்து தற்போது வரை தென்னிலங்கையில் இருந்து யானைகள் கொண்டு வந்து கொந்தக்காரங்குளம் போன்ற கிராமங்களை அண்டி பல தடவைகள் விடப்பட்டுள்ளன. இதனாலும் இப்பகுதிகளில் யானையினால் ஏற்படும் தாக்கம் அதிகரித்துள்ளதுடன், மனிதர்களிற்கும் யானைகளிற்குமான நேரடி மோதலை உண்டுபன்னியுள்ளது. வவுனியாவை பொறுத்த வரையில் காடுகளை அண்டிய பிரதேசங்களான, சேமமடு, இராமனூர்புளியங்குளம், நெடுங்கேணி, செட்டிக்குளம் போன்ற பல பிரதேசங்களில் இவை அதிகம் நிகழ்கின்றன. இதனை தடுக்க மின்சார வேலி அமைந்தாலே மனித யானை மோதலை தவிர்க்க முடியும். அத்துடன் காடுகளினூடாக ரயில் பயணிக்கும் போது வேகத்தை குறைத்தும் ஒலி எழுப்பியும் செல்வதன் மூலமாகவும் யானைகள் ரயிலுடன் மோதி இறப்பதில் இருந்து காக்க முடியும்.



4-ம் பக்க தொடர்ச்சி...

58,000. கிட்டத்தட்ட மகிந்தவின் கூட்டத்தில் பாதி. இதைவிட இன்னும் சற்று கூட்டம் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் பேரணி ஆரம்பிக்கும் சமயத்தில் திடீரென மழை பெய்ததால் கூட்ட எண்ணிக்கையில் பாதிப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் இருந்தும் அங்கு மக்கள் கொண்டு செல்லப்பட்டனர்.

ஐக்கியதேசியக்கட்சியின் மேதினம் கொழும்பின் கெம்பல் மைதானத்தில் நடந்தது. புலனாய்வுத்துறையின் தகவல்படி,


கிளிநொச்சி மேதின சர்ச்சை

இதில் 65,000 பேர் கலந்து கொண்டிருந்தனர். வடக்கு கிழக்கில் இருந்து ஆட்களை திரட்டுவதில் ஐக்கிய தேசியக்கட்சி அதிக ஆர்வம் காட்டியதாக தெரியவில்லை.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் மேதின நிகழ்வுகள் அம்பாறையிலும், கிளிநொச்சியிலும் நடந்தன. அம்பாறை நிகழ்வில் 1,500 பேர் கலந்து கொண்டதாக புலனாய்வு அறிக்கை கூறுகிறது. எல்லா பிரதேசங்களில் இருந்தும் அங்கு செல்ல வசதியாக வாகன வசதியை கூட்டமைப்பினர் செய்திருந்தனர்.


சுதந்திரகட்சியின் மேதினம்

அதுபோல கிளிநொச்சியில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழ்தேசிய கூட்டமைப்பு மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் என்பன இணைந்து இந்த மேதினத்தை ஏற்பாடு செய்தனர். எனினும், இந்த மேதினத்தையார் நடத்துவதென்பதில் முதல்நாளே ஒரு சர்ச்சை தோன்றியது. தாங்கள் நடத்துவதாக தமிழ்தேசிய கூட்டமைப்பு உரிமைகோர, அதை மறுத்து காணாமல் போனவர்களின் உறவுகள் உரிமைகோரினார்கள். இது சர்ச்சையாக, தமிழ்தேசிய கூட்டமைப்பின் மேதினத்தில் இருந்து விலகுவதாக ஊடகங்களிடம் அறிவித்தார் அந்த அமைப்பின் தலைவி கலாதேவி. பின்னர் சற்றுநேரத்தில் ஊடகங்களை தொடர்பு கொண்டு அதை மறுத்தார். மறுநாள் மேதின பேரணியில் ஒரு இழுபறி நிகழ்ந்தது. யாருடைய பதாகையை முன்னால் கொண்டு செல்வதென்ற சர்ச்சையாகி இழுபறியாகி, பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் அமைப்பினர் பதாகையை முன்னால் கொண்டு சென்றனர். இந்த நிகழ்வில் 200 இற்குட்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா வீரபுரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் மேதின பேரணி நடந்தது. சுமார் 120 வரையானவர்கள் கலந்து கொண்டனர். வவுனியா எம்.பி சிவசக்தி ஆனந்தனின் ஆதரவுதளத்தை நம்பி வவுனியாவை தேர்வுசெய்தது ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆனால் இங்கு எதிர்பார்த்தளவு கூட்டம் வரவில்லை.

சாவகச்சேரியில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் மேதின நிகழ்வு நடந்தது. 100 இற்கும் குறைவானவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில், சம்பந்தன், சுமந்திரன் பற்றியே பேச்சாளர்கள் பேசினார்கள். சம்பந்தனும், சுமந்திரனுமா உழைப்பாளர்கள் என ஒரு முதியவர் முணுமுணுத்துக் கொண்டு போனார். சைக்கிள் போய்ஸ்ஞ் நோட்டிஸ் பொயின்ற்.

நிலவன்

1931இல்தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட தமிழ் சினிமா அதன் கலை வடிவத்தை ஏதோ ஒரு வடிவத்தில் தனது திரைப்படங்கள் மூலம் இற்றை வரைக்கும் பூர்த்தி செய்ய முயற்சி செய்து கொண்டு இருக்கின்றது. ஆனாலும் எல்லாத் திரைப்படங்களாலும் அக் கலை வடிவத்தைத் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்ய முடிவது இல்லை. வருடத்திற்கு இத்தனை என்று எத்தனையோ திரைப்படங்கள் வரிசைக்கிரமமாக வெளிவந்தாலும் கவனிக்கத்தக்க திரைப்படங்களாக ஒன்றிரண்டு திரைப் படங்களே அமைகின்றன. இந்த வரிசையில் தான் கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன் திரைப்படமும் 2000ஆம் ஆண்டு வெளிவந்து கவனிக்கத்தக்க படங்களுள் ஒன்றாகியது. Sense and sensibility நாவலின் திரைப்பட ஆக்கம் இது. அப்பாஸ், ஐஸ்வர்யா ராய், அஜித், தபு, மம்முட்டி, ஶ்ரீவித்யா, மணிவண்ணன் போன்றோரின் நடிப்பில் வெளிவந்த இத் திரைப்படம் (இயக்கம் ராஜீவ் மேனன், இசை ஏ.ஆர்.ரஹ்மான், வசனம் சுஜாதா) வசூல் ரீதியாக பெரு வெற்றி பெறாது விடினும் சிறந்த கதையமைப்பு மற்றும் இயல்பான காட்சிகள் மூலம் கவனிக்கத்தக்க படமாகியது.

திரும்பும் இடமெல்லாம் அழகை அறுவடை செய்யும் கமரா, முடிந்த வரைக்கும் இயல்பாக அமைக்கப்பட்டிருக்கும் கதாபாத்திரங்கள், பாத்திரங்களின் பின்னணியில் இழையோடும் இசைச் சாரல் என்று எல்லா விதத்திலும் பொருத்தமாகவே பின்னப்பட்டிருந்தது கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் திரைப்படம். போரில் காலை இழந்தும் இந்திய அரசு கண்டு கொள்ளாததால் இந்திய அரசின் மீது கோபத்தில் இருக்கும் மம்முட்டி, வணிகத்தில் சிறப்பாகத் திகழும் அப்பாஸ், இயக்குநராகியே தீர வேண்டும் என்று வெறியோடு உழைக்கும் அஜித், தனக்கென ஒரு ராஜகுமாரன் வருவான் என்று காத்திருக்கும் ஐஸ்வர்யா ராய், ராசியில்லாத பெண் என்று முத்திரை குத்தப்பட்ட தபு என்று இயல்பாக வடிவமைக்கப் பட்டிருக்கும் கதாபாத்திரங்களே படத்தின் கதையோட்டத்திற்கு உயிரூட்டமாய்



# திரைப் பார்வை
# கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

அமைந்தன. இயல்பான திரைப்படத்திற்கு தேவையான எல்லா விடயங்களும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அளவோடு சொல்லப் பட்டிருந்தமையானது ரசிகனுக்குப் பிடித்ததாக இருந்தது. ஸ்டார் லெவல் நடிகர்கள் படத்தில் இருந்தும் படத்தின் கதைக்கு ஏற்ற விதத்திலேயே அவர்களைப் பயன்படுத்தியதில் வெற்றி கண்டிருந்தார் படத்தின் இயக்குநர் ராஜீவ் மேனன்.

கிடைக்க வேண்டிய சொத்து கைக்கு வராமல் போனால் இரு சகோதரிகளின் காதல்கள் என்ன ஆகும்? என்ற கதைக் களத்திலேயே படம் பயணிக்கின்றது. தபுவைப் பெண் பார்க்க வரும் மாப்பிள்ளைகள் எல்லோரும் ஏதோ ஒரு கெட்டது நடக்கவே தபு அதிர்ஸ்டம் இல்லாதவர் என்று முத்திரை குத்தப்படுகின்றார்.

இந்த நிலையில் தபு வீட்டிற்கு வரும் அஜித்திற்குத் தபுவைப் பிடித்துப் போகவே தபுவைச் சுற்றிச் சுற்றிக் காதலிக்கின்றார். இன்னொரு புறம் தன்னைப் போலவே பாரதியை ரசிக்கும் அப்பாஸை உயிராய்க் காதலிக்கின்றார் ஐஸ்வர்யா ராய். ஆனால் அப்பாஸ் தனது வணிகத்தில் ஏற்பட்ட சரிவை ஈடு செய்வதற்காக வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்கின்றார். இதனால் மனமுடைந்து போகும் ஐஸ்வர்யா ராய் தன்னையே உயிருக்கு உயிராய்க் காதலிக்கும் மம்முட்டியையே திருமணம் செய்து கொள்கின்றார். இப்படி ஒரு இயல்பான கதையை கவிதை நயத்துடன் சொல்லிச் சென்றது கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் திரைப்படம். சுஜாதாவின் இயல்பான, எளிமையான கதை வசனம் படத்திற்கு மிகவும் பக்க பலமாக இருந்தது.

படத்தின் கதையை விட படத்தினைப் பட்டி தொட்டி எங்கும் எடுத்துச் சென்றது படத்தின் பாடல்கள் தான். கொஞ்சும் மைனாக்களே, கண்ணாமூச்சி ஏனடா?, கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன், என்ன சொல்லப் போகிறாய்?, மனதைத் திருடி விட்டாய் என்று படத்தின் ஐந்து பாடல்களும் குற்றாலச்சாரல் போல் எல்லோர் மனதையும் குளிர்வித்தன. நான்கு முறை சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருது பெற்ற சங்கர் மகாதேவனை என்ன சொல்லப் போகிறாய்? பாடலுக்காக முதல் முதலில் தேசிய விருது வாங்க வைத்திருந்தார் ஏ.ஆர்.ரஹ்மான். அதேபோல் சிறந்த துணை நடிகருக்கான பிலிம்பேர் விருதும் அஜித்திற்கு கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன் திரைப்படத்திற்காகக் கிடைத்தது. (கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன் திரைப்படத்தில் அஜித்தின் கதாபாத்திரத்திற்கு முதலில் தெரிவு செய்யப்பட்டவர் நடிகர் பிரசாந்த் என்பது இன்னொரு கொசுறு தகவல்).

பார்வை தொடரும்




# பேஸ்புக்கில் இருந்தபடி ஆபாசபடம் பார்க்கலாமா?

இண்டர்நெட்டில் ஆபாசப்படங்கள் பார்க்கும் போது உங்கள் முகநூல் அக்கவுண்ட் லொக்இன்'னில் இருந்தால் நீங்கள் டிராக் செய்யப்படுவீர்கள்!

உங்கள் முகநூல் அக்கவுண்டின் பேஸ்பூக் ப்ளக்டுஇன் பட்டன், லைக் பட்டன், ஷேர் பட்டன் போன்ற அம்சங்களில் இருந்து கொண்டு நீங்கள் ஆபாச வலைதளத்தில் இருந்தால் உங்கள் நடத்தை கண்காணிக்கப்படும்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு லைக் மற்றும் ஷேர் பட்டன்கள் அதனை பயன்படுத்தும் மக்களை கண்காணிக்காது என்று உறுதியளிக்கப்பட்டது ஆனால் இப்போது அது மாறிவிட்டது.

"விளம்பரங்களை இலக்குகளாக வைத்து மக்களின் சமூக விடயங்களை கண்காணிக்க மாட்டோம், மேலும் சேகரிக்கப்படும் தகவல்கள் எல்லாமே 90 நாட்களில் அழிக்கப்பட்டுவிடும். பணத்திற்காக விற்கப்படமாட்டாது" என்று 2001 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட உறுதிகள் தற்போது காணாமல் போய் உள்ளன.

தற்போது உங்களை 'ட்ராக்' செய்வது மட்டுமின்றி, நீங்கள் எந்த வலைதளத்தில் உள்ளீர்கள், எவ்வளவு அதிகமாக குறிப்பிட்ட வலைதளத்தில் உள்ளீர்கள் என்பதை வைத்து உங்கள் நடத்தையையும் சேர்த்து கண்காணிக்கின்றனர்.

சமீபத்தில் புதிய தனியுரிமை கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் "எங்களின் சேவையின் கீழ் உங்களுக்கு கிடைக்கும், நீங்கள் 'பார்வையிடும் மூன்றாம் தரப்பு வலைத்தளங்களின் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன" என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது நீங்கள் பார்வையிடும் இணையதளங்கள் மற்றும் அப்ஸ் பற்றிய தகவல், அந்தந்த வலைத்தளங்கள் மற்றும் அப்ஸ்களில் நீங்கள் பயன்படுத்தும் சேவைபற்றிய தகவல்கள், உடன் உங்களுக்கு சேவை வழங்கும் வலைத்தளங்களின் டெவெலப்பர் மற்றும் பப்ளிஷர் விவரங்கள் என அனைத்துமே சேகரிக்கப்படும்.

முக்கியமாக ஆபாச வலைத்தளங்கள் மட்டும் கண்காணிக்கபடுவதில்லை, நாம் அணுகும் அனைத்து வகையான வலைத்தளங்கள் மற்றும் அப்ஸ்களும் கண்காணிக்கப்படுகிறது என்பது குறிப்பித்தக்கது. நிறுவனத்தின் ப்ரைவசி பொலிசிகள் இவ்வளவு சீக்கிரம் நிலையை மாற்றிக் கொள்கின்றன என்பது சற்று தொந்தரவாக இருக்கிறது என்பது ஒருபக்கம் இருக்க மறுபக்கம் நுகர்வோர்கள் மற்றும் பயனாளிகள் அனைவரும் தெளிவாக செயல்பட வேண்டியதும் நிதர்சனம்தான்.

# புதிய ஹொண்டா அக்டிவா-ஐ ஸ்கூட்டர்!

பிஎஸ்4 தர இஞ்சின், ஆட்டோ மெடிக் ஹெட் லைட்டுடன், புதிய டிசைன் பரிபாலனைகளுடன் மேம்படுத் தப்பட்ட புதிய 2017 அக்டிவா ஐ ஸ்கூட்டரை விற்பனைக்கு அறிமுகம் செய்துள்ளது ஹொண்டா மோட்டார்சைக்கிள் ஸ்கூட்டர் இந்தியா நிறுவனம். பெண்களை கவரும் வகையில் மிகவும் ஸ்லீக்கான வகையில் எடை குறைவாகவும், கொம்பெக்ட் டிசைனிலும் கவர்ச்சிகரமான தோற்றத்துடன், புதிதாக டூயல் டோன் பெயிண்டிங்கில் இந்த ஸ்கூட்டர் அறிமுகமாகியுள்ளது. இதில் 110சிசி இஞ்சின் உள்ளது.



ஆட்டோமெடிக் ஹெட்லைட், டியூப்லெஸ் டயர்கள், ஈக்குவலைசருடன் கூடிய காம்பி பிரேக்கிங் சிஸ்டம் ஆகியவை இடம்பெற்றுள்ளது. இருக்கைக்கு கீழ் உள்ள சேமிப்பு வசதி 18 லிட்டர்கள் அளவு கொண்டதாக இருப்பதால் அதிக பொருட்களை இதில் சிரமமின்றி வைத்துக்கொள்ளலாம். புதிய கிராஃபிக்ஸ், பாடி கலர் ரியர் வியூ கண்ணாடிகள், ரீடிசைன் செய்யப்பட்ட பின்பிற விளக்கு ஆகியவையும் உள்ளன.

இருக்கைக்கு கீழ் உள்ள சேமிப்பு வசதி பகுதியில் மொபைல் சார்ஜிங் யூனிட் கிடைக்கிறது. இதனால் வண்டியை ஓட்டும் போதே மொபைலை சார்ஜ் செய்து கொள்ளலாம். இதில் ஒற்றை சிலிண்டர் கொண்ட 109சிசி ஏர் கூல்டு பிஎஸ் தர இஞ்சின் உள்ளது. இது அதிகபட்சமாக 8 ஹச்பி ஆற்றலையும், 8.94 என்எம் டார்க்கையும் வழங்குகிறது. இதில் விமேடிக் ஆட்டோமேடிக் கியர் பொக்ஸ் உள்ளது.

இது அதிகபட்சமாக மணிக்கு 83 கிமீ வேகத்தில் செல்லக்கூடியதாகும். இதில் 5.3 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெட்டோல் ராங்க் உள்ளது. லிட்டருக்கு 60 கிமீ லைலேஜ் தருவதாக நிறுவனம் கூறுகிறது. இதன் விலை சுமார் 1,25,00 (வரி நீங்கலாக) இருக்கும் என தெரிகிறது. 110சிசி செக்மெண்டில் உள்ள சுசுகி லெட்ஸ், டிவிஎஸ் ஸ்கூட்டி ஸெஸ்ட் மற்றும் ஹீரோ பிளெஷர் ஆகிய மொடல்களுடன் போட்டியில் உள்ளது.




புனர்வாழ்வு முகாமில் தமிழினி

# தமிழினி

## ஒருமுனை உரையாடல்

சாந்தி


சிறையில் வாழும் பெண்களது தனிமை, துயரம், கண்ணீர் யாவையும் நீயொருத்தியே மொழிபெயர்த்தவள். வரிசையில் நின்று உணவு பெறுதல் முதல் அடிபட்டு தண்ணீர் எடுப்பது காக்கா குளியல் வரையும் நீ சொல்லும் கதைகள் ஒவ்வொன்றும் சிறைக்கதவுகளின் பின்னால் புதைந்திருக்கும் கோரமான உலகின் அறிமுகத்தைத் தந்தது.

அடிக்கடி அம்மாவுக்காய் அழுவாய். உன்னோடு வாழ்ந்து மடிந்தவர்களுக்காய் மனமுருகிக் கண்ணீர் விட்டழுவாய். உன்னை உயிரோடு தப்புவித்து பழிசுமக்க வைத்த காலத்தைச் சபிப்பாய். ஆறுதல் சொல்ல முடியாது மறுமுனையில் சேர்ந்து அழும் போது, மீண்டும் ஆறுதல் தரும் அம்மாவாகிச் சிரிப்பாய்.

அந்தக் கொடிய நாட்களில் உன்னோடு துணையாய் வந்தது இரண்டு. ஒன்று பைபிள். மற்றது நானென்று அடிக்கடி சொல்வாய்.

இராணுவச் சீருடைதரித்து உலவிய தமிழினிக்கும் சேலையுடுத்தவும் பொட்டுவைக்கவும் பூவைத்து உலவவும் வாழ்வை ரசிக்கவும் வாழவும் ஆசைப்பட்ட காலம் அது.

“என்னமாதிரியக்கா. ஒளிவட்டம் ஏதும்



தெரியேல்லயோ?”

“போடியப்பா. காய்க்காலம் போயிட்டுது. இனியென்ன பழங்கள்தானே. எங்களையெல்லாம் கலியாணம் கட்ட இனி எவனடி வரப்போறான்.“

அக்காவின் பிடரியின் பின்னால் மொழி திரைப்படத்தில் பிரகாஸ்ராஜ்ஜிற்கு தெரிந்தது போல ஒரு ஒளிவட்டம் தோன்றும் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வேன்.

உனக்குள் ஒரு ராஜகுமாரன் இருந்தான். உனக்குள்ளும் மௌனமாய் ஒரு காதல் கோட்டை இருந்தது.

அவரைத் தொடர்பு கொண்டு உன் பற்றிச் சொன்னபோது, உன்னைப் பற்றி யோசிக்கும் நிலமையில் இல்லையென்பதை உன் ராஜகுமாரன் வருத்தத்தோடு அறியத் தந்தார். தனது தொடர்பு இல்லையென்று சொல்லச் சொன்னார்.

நீ அவரோடு பேச ஆசைப்பட்டதை அவருக்குத் தெரிவித்தேன். அவர் உன்னுடன் பேச விரும்பவில்லை என்ற உண்மையை இறுதிவரை உனக்கு மறைக்க நான் சொன்ன பொய்களெல்லாம் ஒருநாள் பொய்யாகிப் போனது.

“ஏன் பேச விருப்பமில்லையாமோ?”

“சீஞ் அப்பிடியில்லை. அவருக்கும் கனக்க பிரச்சனையள் தானே...கதைப்பார் கொஞ்சம் பொறுங்கோ.“

“சரி விடு ஆனால் எல்லாருக்கும் சொல்லி விடு நான் யாரையும் காட்டிக் குடுக்கேல்ல... யாருக்கும் துரோகம் செய்யேல்ல.”

அதற்குப் பிறகு உனது காதல் கோட்டை உன் கண்ணீரால் உடைந்து கரைந்தது.

உனக்குப் பயிற்சி தந்தவர்கள், உனக்கு பெயரிட்டவர்கள், உன்னோடு வாழ்ந்த பெரிய அக்காக்களில் பலர் வெளிநாடுகளில் இருந்தார்கள். உன்னைப்பற்றிய அவர்கள் பலரது கருத்து நீ காட்டிக் கொடுக்கிறாய். உனக்கு உதவாமல் தப்புவதற்காக அவர்கள் சொன்ன பழியே நீ துரோகியாகக் காரணம்.

நீ நேசித்தவர்களே உன்னை துரோகியாக எண்ணி ஊகங்களால் உன்னை காயப்படுத்திய கதைகள் ஏராளம். சிலரை விசாரித்தாய். அவர்களுடன் பேச ஆசைப்பட்டாய். உனக்காக அவர்களையெல்லாம் தேடித் தொடர்பு கொண்டேன்.

தொடர்பில் இருந்த பலர், தங்களுடன் தொடர்பாடலில் இருப்பதை உனக்கு சொல்ல வேண்டாமென்றார்கள். கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தி வெளிநாடு வந்தவர்கள் உன்னை வெறுத்தார்கள். யாரும் உன்னைப் புரிந்து கொள்ளவில்லை.

நீ பேச ஆசைப்பட்டவர்கள் யாரும் உன்னோடு பேச விரும்பவில்லை. உன்னை வேண்டாமென்றவர்கள் தொடர்பை நானும் துண்டித்துக் கொண்டேன். ஏனெனில் உனது கண்ணீரையும் துயரையும் தினம் தினம் கேட்டுக் கொண்டிருப்பவள் நான்.

இயக்கம் கலைத்துவிட்டவர்களும், தப்பியோடி வந்தவர்களும் உன்னைப் பற்றி விமர்சிக்கத் தொடங்கினார்கள். நீ அரசோடு சேர்ந்துவிட்டதாகவும் உன்னோடு நானும் அரசபுலனாய்வாளர்களின் ஆளெனவும் கதைகள் பரவத் தொடங்கியது.

நீ அதிகாரத்தில் இருந்த காலங்களில் செய்த தவறுகள் என நீண்ட பட்டியல் ஒன்றை சொல்லத் தொடங்கினார்கள். தவறுகளே செய்யாத மகாத்மாக்களாய் தங்களை நிறுவிய பலரின் தொடர்புகளை துண்டித்துக் கொண்டேன்.

உன்னை மீட்கும் வழிகளைத் தேடத் தொடங்கினேன். உன் அம்மா, தங்கை யோகா யாவரும் உனது விடுதலைக்கான கதவுகளைத் தட்டத் தொடங்கினோம். அம்மாவின் அலைவுகளின் பயனாக சட்டத்தரணி ஒழுங்கானார். உனது வழக்கு நடக்க ஆரம்பித்தது. புனர்வாழ்வு கிடைக்கும் என்பது ஊகமாகி அது உண்மையாகும் தருணம் நெருங்கியது.

“அம்மாவோடை இடைக்கிடை கதை. பாவம் மனிசி. நானொரு தேனீர் கூட மனிசிக்கு வைச்சுக் குடுத்ததில்லை. வெளியில போனதும் மனிசிக்கு உழைச்சுக் குடுக்க வேணும். மனிசியை நல்லா வைச்சுப் பாக்க வேணும். இனியெண்டாலும் என்ரை குடும்பத்தை நான் தாங்க வேணும். எப்பிடியெண்டாலும் என்னை வெளிநாடு எடுத்துவிடு. நான் வந்து உழைச்சு கடனைத் தருவன். உன்னை தான் நம்பிறன்.”

இதுதான் உனது பெரிய கனவாக இருந்தது.

உனது விடுதலையின் பின்னர் அம்மாவுக்காகவும் உன் குடும்பத்தின் உயர்வுக்காகவும் வாழ ஆசைப்பட்டாய்.

அடிக்கடி உன்னை வருத்தும் வயிற்றுவலியும், உடற்சோர்வும் தொடர்ந்து வதைக்கும் ஊடகங்களின் செய்திகளும் உன் நிம்மதியை பறித்துக் கொண்டிருந்தது.

நீ நீதிமன்று போய் சிறைச்சாலைக்கு வந்துவிடுவாய். அன்றைய நீதிபதியின் முடிவை எதிர்பார்த்திருக்கும் எனக்கும் உன் அம்மாவுக்கும் பலதடவைகள் ஏமாற்றம் தான் மிஞ்சும். வெலிக்கடை சிறைக்கம்பிகளின் பின்னால் நீ அன்றைய முடிவோடு வந்து களைத்திருப்பாய்.

உனது பெயரையும் உனது படத்தையும் ஊடகங்கள் வைத்து செய்யும் வியாபாரம் மட்டும் லட்சக்கணக்கான வாசகர்களின் கவனத்தைப் பெற்றிருக்கும். அந்தச் செய்திகளை உனக்கு வாசித்துக் காட்டும் போது நீ அழுவாய். ஊடகங்களாலும், உண்மைபுரியாதவர்களாலும் நீ மனவுளைச்சல்படும் தருணங்களை யாராலும் புரிந்து கொள்ளவே முடியாது போனது.

இன்று நாளையென உனது விடுதலையின் நாட்கள் எண்ணப்பட்டு ஒருநாள் நீ புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட காலம் வந்தது. அந்தச் செய்தியை நீயே அறியத்தந்தாய். வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கு நீ அனுப்பப்படுவதற்கு நாள் குறிக்கப்பட்டது. முகம் பார்க்கவே முடியாத நெருக்கம் மிகுந்த கம்பிகளை விட்டு வெளியேறும் நாளை எதிர்பார்த்திருந்தாய்.

புனர்வாழ்வுக்குச் செல்லவிருந்த உனக்கான அடிப்படை தேவைகளை பூர்த்தியாக்க தேவைப்பட்டது பதினெட்டாயிரம் ரூபாய்கள். அதை பெறுவதற்கு சிலரிடம் உதவி கேட்டபோது நம்பியவர்களே மறுத்தார்கள். இறுதியில் அந்தப்பணத்தை நானே தயார் செய்து அனுப்பிய போது, ‘உனக்கு எப்பிடி நான் இதையெல்லாம் திருப்பிச் செய்வன்?” என அழுதாய்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்

SKY ROSE CHIDAMBARAM COVERING

ஸ்கை ரோஸ் சிதம்பரம் கவரிங்

அனைத்து வொரண்டிங் கவரிங் நகைகளை இங்கே பெற்றுக்கொள்ளலாம்

No: 1 Hospital Road, Jaffna. Call: 0771536914

# எல்லாம் முடிய என்னைப்பார்த்து 'இப்ப சந்தோசமா' என்றார் மகிந்த!

## சந்திரகுமார் எழுதுகிறார்



**1980** ஆம் ஆண்டுக் காலப்பகுதி. அப்போது வடபகுதியில், வவுனியாப் பிரதேசத்தில் காந்தியம் அமைப்பு தீவிரமாக செயற்பட்டு கொண்டிருந்தது. மலையகப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களை குடியிருத்தி, வடக்கின் எல்லையோரக் கிராமங்களைப் பாதுகாப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது காந்தியம். நானும் சக மாணவர்களும் காந்தியம் அமைப்புடன் இணைந்து செயற்பட்டோம். அப்போது எனக்கு 16 வயது.

பின்னர் உயர்தர கல்வி பயிலும் காலகட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ்இன் ஈழமாணவர் பொதுமன்றத்துடன் இணைந்து செயற்படத் தொடங்கினேன். 1982 இல் ஈழமாணவர் பொதுமன்றத்தில் ஈழுமையாக ஈடுபட்டு, பாடசாலை பகிஷ்கரிப்பு, ஹர்த்தால், மாணவர் போராட்டங்களில் ஈடுபட தொடங்கினேன்.

பின்னர் 1983 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் இராணுவப்பிரிவின் பயிற்சிக்காக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டேன். நாங்கள் 140 பேர் இந்தியாவின் இமாலய பிரதேசத்தில் பயிற்சி பெற்றோம். பயிற்சியின் பின்னர் 1984 ஏப்ரல் அளவில் இலங்கைக்கு திரும்பி வந்தோம்.

இங்கே வந்தபின், வவுனியா இராணுவப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டேன். அப்போது நாங்கள் பெரிய ஆயுதபலமுள்ள இயக்கமாக இருக்கவில்லை. இருக்கும் ஆயுதங்களை வைத்து இராணுவத்திற்கு எதிராக பதுங்கித்தாக்குதல்களை நடத்தினோம். அப்படியான மோதல் ஒன்றில் நானும் காயமடைந்தேன். காலிலும், தோளிலும் ஏற்பட்ட காயத்தால் கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன்.

இதன்பின் 1986 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைமைக்குள் முரண்பாடு எழுந்தது. நாட்டில் நின்று போராடிய போராளிகள், இந்தியாவைத் தளமாக கொண்டியங்கியங்கிய தலைமைக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடுதான் உடைவிற்கு காரணம். பத்மநாபா, டக்ளஸ் தேவானந்தா தலைமையில் என ஈ.பி.ஆர்.எல்.எவ் இரண்டாகப் பிளவடைந்தது. இந்தக்காலப் பகுதியில் சக இயங்கங்களிற்கிடையில் மோதலும் ஏற்பட்டது. உயிரச்சுறுத்தலான நிலைமையால் நாங்கள் இந்தியா சென்றுவிட்டோம்.

> மக்கள் பிரதிநிதிகள், பொதுவாழ்வில் உள்ளவர்களின் அறியப்படாத பக்கங்களை புரட்டும் பகுதி இது. வாழ்வில் நடந்த, அடிக்கடி நினைக்கும், மெய்சிலிர்க்கும் நிகழ்வுகளை இந்த பகுதியில் ஒவ்வொரு வாரமும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளார்கள் அவர்கள். மனதின் மூலைக்குள் மறைத்து வைத்திருந்த சம்பவங்களை முதன்முறையாக அவர்கள் அச்சில் பேசவுள்ளனர். நீங்கள் இதுவரை கேட்காத கதைகள் இவை.

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின், பத்மநாபா அணியைத்தான் இந்தியா முன்னிலைப்படுத்தியது. இதனால் 1988 மாகாணசபை தேர்தலில் அவர்கள் அதிகாரத்தைப் பெற்றனர்.

1988 இல், நான் திரும்பி கொழும்புக்கு வந்தேன். அக்காலப்பகுதியில் ஈ.பி.டி.பியை ஒரு அரசியல்கட்சியாக பதிவுசெய்யும் முயற்சி நடந்தது. அதை நான்தான் பொறுப்பாக நின்று செய்தேன். 1990 இல் பதிவு நடவடிக்கைகள் முழுமையடைந்தன.

1994 இல் நான் பாராளுமன்ற உறுப்பினரானேன். தமிழர் பகுதிகளில் நடக்கும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தைத் தடுக்க கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அதிகமாக எனக்குள் இருந்ததால், திருகோணமலையிலிருந்து செயற்பட முடிவெடுத்தேன். அந்தச்சமயத்தில் எல்லைக்கிராமங்களான திரியாய், புல்மோட்டை, கந்தளாய், தம்பலகாமம், சேருவில பகுதிகளில் இருந்த தமிழ்மக்கள் விரட்டப்பட்டு பாதுகாப்பிற்காக நகரத்தை நோக்கி வரத் தொடங்கினர். பின்னர் நகரத்தையும் ஆக்கிரமித்து சிங்கள குடியேற்றங்கள் நடக்கதொடங்கின. திருகோணமலை நகரம் தமிழர்களின் முக்கிய நகரம். இதை இழப்பது தாயகக் கோட்பாட்டை சிதைப்பதாகிவிடும். நகரை காப்பாற்ற வேண்டுமெனச் செயற்படத் தொடங்கினேன்.

திருகோணமலை நகரத்தில் இருந்த கோயில்காணிகள்தான் சிங்கள குடியேற்றங்களிற்கு வாய்ப்பாக அமைந்தது. கோயில் காணிகளை குறிவைத்து சிங்களவர்கள் குடியேற்றங்களைச் செய்தனர். இதைத் தடுக்க, கோயில் காணிகளில் தமிழ் மக்களை குடியிருத்த ஆரம்பித்தேன். அதுபோல லிங்கநகரில் இராணுவத்தின் பிடியிலிருந்த அரசகாணியில் ஒரு தமிழ்க் குடியேற்றத்தை உருவாக்கினோம்.

உப்புவெளிப் பிரதேசத்தில் ஆனந்தபுரி, நித்தியபுரி, தேவநகர் பகுதிகளிலும் குடியேற்றங்களைச் செய்தோம். அப்போது திருகோணமலையில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கிய வடக்குகிழக்கு மாகாண சபை அதிகாரிகளின் எமது குடியேற்ற வேலைகளை மேற்கொண்டோம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கிட்டத்தட்ட இரண்டாயிரம் குடும்பங்களிற்கு அதிகமாக திருகோணமலையில் குடியேற்றியுள்ளோம்.

இன்று திருகோணமலையின் கணிசமான உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரம் தமிழர்களிடம் இல்லை. திருகோணமலை நகரசபை, திருகோணமலை நகரமும் பட்டனமும் பிரதேசசபை ஆகியவற்றின் அதிகாரம் தமிழர்களிடம் எஞ்சியுள்ளதற்கு காரணம், அன்று நாம் செய்த குடியேற்றங்கள்தான். அந்த வாக்காளர்கள்தான் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இப்போது காப்பாற்றி வருகிறார்கள்.

எனது இந்த நடவடிக்கைகள் அங்குள்ள சிங்களவர்களில் ஒரு பகுதியினரிடம் எதிர்ப்பை ஏற்படுத்தியது. திருகோணமலையின் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் மற்றும் கந்தளாயிலிருந்த எம்.டி.எஸ்.குணவர்த்தன (காணியமைச்சராக இருந்து கடந்த வருடம் காலமானார்), பிக்குகள் எனக்கெதிராக செயற்பட்டு வந்தனர். எனது அப்பா வடக்கு கிழக்கு மாகாண உதவிக்காணி ஆணையாளராக இருந்தார். அவருடைய ஆலோசனைகளும் உதவிகளும் அரசகாணிகளில் தமிழ் மக்களை குடியிருத்துவதற்கு உதவியாக இருந்தன. அவர் எனக்குப் பெரும் உதவியாக இருந்தார்.

1998 இல் ஒரு சம்பவம் நடந்தது. அப்போது திருகோணமலை மாவட்ட செயலகத்தில் காணி உத்தியோகத்தராக பீரிஸ் என்பவர் இருந்தார். திருகோணமலையிலுள்ள அரசகாணிகள், கோயில் காணிகளை அடையாளம் கண்டு, சிங்கள குடியேற்றங்கள் செய்வதற்கு பின்னணியில் இருந்தவர் அவர்தான். பீரிஸின் செயற்பாடுகள் பற்றி ஒருமுறை பாராளுமன்றத்தில் நான் பேசினேன். இது நடந்து ஒருவாரத்திற்குள் புலிகள் பீரிஸைச் சுட்டுவிட்டனர். இந்த கொலையை நான்தான் நடத்தியதாக சிங்களப் பத்திரிகைகள் குறிப்பிட்டன.

இதையடுத்து, அனுராதபுர சந்தியிலிருந்து எனது அலுவலகத்தை நோக்கி பெரிய ஊர்வலமொன்றை பிக்குகள், சுதந்திரக்கட்சி அமைப்பாளர் சேர்ந்து நடத்தினார்கள்.

இதற்கு அடுத்தடுத்த வாரம் 1998 ஒக்ரோபர் 10. குடியமர்த்திய மக்களிற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகளிற்காக ஒவ்வொரு நாளும் எனது அலுவலகத்தில் இருந்து ஐந்தாறு இளைஞர்கள் போவார்கள். என்.சி றோட்டில் ஒரு இராணுவ காவலரண் இருந்தது. இவர்கள் போய்வருவதை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஒவ்வொருநாளும் பார்த்து கொண்டுதான் இருப்பார்கள். அன்று இளைஞர்களை மறித்து, அடையாள அட்டையை வாங்கி கசக்கி எறிந்துவிட்டு, சுடத் தயாரானார்கள். நிலைமையைப் புரிந்து கொண்ட இளைஞர்கள் சைக்கிளைப் போட்டுவிட்டு அலுவலகத்திற்கு ஓடிவந்துவிட்டனர். இராணுவம் சுட்டபடி அவர்களைத் துரத்தி வந்தது.

"புலிகளைப் பிடித்தோம். அவர்கள் தப்பிப்போய் சந்திரகுமாரின் அலுவலகத்திற்குள் புகுந்து விட்டனர்" என்று இராணுவம் மற்ற இடங்களிற்கு தகவல் கொடுக்க, எனது அலுவலகத்தை முப்படையினருடன, பொலிசாருமாகச் சேர்ந்து சுற்றிவளைத்து விட்டனர். எமது பாதுகாப்பிற்காக உயரமான மதில் கட்டியிருந்தோம்.


சிறிதுநேரத்தில் நாலாபக்கத்திலிருந்தும் அலுவலகத்தை நோக்கி தாக்குதலை ஆரம்பித்தனர் முப்படையினர். கைக் குண்டு எறிந்து துப்பாக்கியால் சுட்டனர். அலுவலக கண்ணாடிகள், ஓடுகள் உடைந்து விழுந்தன. நான் தரையில் படுத்திருந்தபடி, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "எனக்கு ஏதும் நடந்தால் நீங்கள்தான் பொறுப்பு" என சொன்னேன். அவர் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து நிலைமையை கட்டுப்படுத்தினார். திருகோணமலை நகரத்திற்குள் நடந்த பெரிய தாக்குதல்களில் ஒன்று இது.

"செம்மணிப் புதை குழி விவகாரம் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை அமைப்புகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துகளை அரசு அலட்சியம் செய்கிறது" என்ற தலைப்பில் 01. டிசம்பர் 1998 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றினேன். இதுவும் எனக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது.

இப்படியான பல நெருக்கடிகள் எனக்கு தொடர்ச்சியாக ஏற்பட்டதால் 2000 இல் நாட்டை விட்டு வெளியேறி பிரித்தானியாவில் வாழ்ந்தேன். அங்கிருந்தாலும் எனது அரசியல் செயற்பாடுகள் தொடர்ந்தபடிதான் இருந்தது. பின்னர் யுத்தம் முடிந்ததும் இலங்கைக்குத் திரும்பி வந்தேன். அப்பொழுது வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் செட்டிக்குளம் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். கொழும்பிலுள்ள வர்த்தக சங்கங்களுடன் பேசி 35 வரையான லொறிகளில் அத்தியாவசியப் பொருட்களை கொண்டுசென்று வழங்கினோம். அந்த மக்கள் பட்ட துயரத்தை பார்த்த அந்த சமயத்தில் முடிவெடுத்தேன், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலேயே பணியாற்றுவதென. கிளிநொச்சி எனது சொந்த மாவட்டமும் கூட. அதனால் கிளிநொச்சியிலிருந்து பணியாற்ற முடிவெடுத்தேன்.

2010 பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வென்றதும், பாராளுமன்றகுழுக்களின் பிரதிதலைவர் என்ற பதவி கிடைத்தது. சாதாரண எம்.பியாக இருந்து மக்கள் பணி செய்வதைவிட, இது எனக்கு கூடுதல் அனுகூலத்தை தந்தது.

**"எனக்குத் தெரியும் கிளிநொச்சியில் என்ன செய்கிறாய் என. உன்னைச் சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் எல்.ரீ.ரீயில் இருந்தவர்கள். இந்தக் காணி விசயமாகத் தயவுசெய்து இனி என்னுடன் கதைக்ககூடாது" என கோத்தபாய கோபமாகச் சொன்னார்.**



கிளிநொச்சியில் மீள்குடியேற்றத்தை ஆரம்பித்தபோது பூச்சிய நிலையிலேயே எல்லாம் இருந்தன. உட்கட்டுமானம், மக்களுக்கான அடிப்படைத் தேவைகள், வாழ்வாதாரம் என எல்லாவற்றையும் ஆரம்பத்திலிருந்தே செய்ய வேண்டியிருந்தது. நன்றாகத் திட்டமிட்டு ஐந்து வருடத்தில் இன்றைய கிளிநொச்சியை உருவாக்கினோம். பின்தங்கிய பகுதிகளை இலக்கு வைத்து அவற்றை முன்னிலைப்படுத்தி அபிவிருத்தி வேலைகளைச் செய்தோம் இது மிகப்பெரிய திருப்தி எனக்கு.


இதைவிட குறிப்பிட வேண்டிய இன்னொரு விடயமுண்டு. விடுதலைப் புலிகள் ஒரு பல்கலைகழகம் அமைக்கும் நோக்கத்துடன் சில கட்டிடங்களை அறிவியல் நகர்ப்பகுதியில் அமைத்திருந்தனர். யுத்தம் முடிந்ததும் இராணுவம் அதை எடுத்துக்கொண்டு விட்டது. ஏறக்குறைய 600 ஏக்கர் நிலம். அந்தக் காணியை விடுவித்து, பொறியில் பீடத்தையும் விவசாயபீடத்தையும் அமைக்க வேண்டுமென அரசிடம் வலியுறுத்த தொடங்கியிருந்தோம். அப்போது எஸ்.பி.திசாநாயக்க உயர்கல்வி அமைச்சராக இருந்தார். அவர் யாழ்ப்பாணம் வந்தபோது, அவரைக் கிளிநொச்சிக்கு அழைத்து சென்று அந்தக் காணியைக் காண்பிக்க முயன்றேன். ஆனால் எங்கள் இருவரையும் இராணுவம் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

ஒருமுறை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவைச் சந்தித்தபோது, கூடவே கோத்தபாயவும் இருந்தார். இந்தக் காணியைப்பற்றிப் பேசினோம். "கோத்தபாய அந்த காணியை விடமாட்டார். அவருக்கு அது தேவையாம். அதில் இராணுவ அக்கடமி ஒன்றை ஆரம்பிக்கப் போகிறாராம்" என மகிந்த சொன்னார். எஸ்.பியும் முயன்றும் முடியவில்லை. அந்தக் காணியை விடுவிக்க அரசிற்கு விருப்பமிருக்கவில்லை.

"எனக்குத் தெரியும் கிளிநொச்சியில் என்ன செய்கிறாய் என. உன்னைச் சுற்றியிருப்பவர்கள் எல்லோரும் எல்.ரீ.ரீயில் இருந்தவர்கள். இந்தக் காணி விசயமாகத் தயவுசெய்து இனி என்னுடன் கதைக்ககூடாது" என கோத்தபாய கோபமாகச் சொன்னார்.

அந்த சமயத்தில் கொக்காவில் கோபுரத்தை திறக்க மகிந்த ராஜபக்ச வந்தார். அந்த கூட்டத்தை பெரியளவில் நான் ஏற்பாடு செய்திருந்தேன். அங்கு வந்த மகிந்த, நிறைய சனம் திரண்டிருந்ததைப் பார்த்ததும் பூரித்துப் போனார். கிளிநொச்சிக்கு என்ன வேண்டும் என என்னிடம் கேட்டார். "யாழ்ப்பாண பல்கலைகழகத்திற்கு பொறியியல்பீடம் தேவை. விவசாய பீடத்துக்கும் காணி தேவை. அறிவியல் நகர் காணியை ஆமியிடமிருந்து எடுத்து, அங்கு அமைக்கலாம்" என்றேன். மேடையில் ஏறிய மகிந்த, பொறியியல்பீட அறிவிப்பையும், அறிவியல் நகர விடுவிப்பையும் அறிவித்தார். அடுத்தநாளே இராணுவம் இடத்தை விட்டு அகலத் தொடங்கியது.

இப்பொழுது அறிவியல் நகரில் பொறியியல்பீடம் உருவாக்கப்பட்டுள்ளது. விவசாய பீடமும் செயற்படுகிறது. இது ஒரு சாதனைதான். 1972 இல் இருந்து யாழ்ப்பாண பல்கலைகழகத்திற்கு பொறியியல்பீடம் தேவையென்ற கோரிக்கை இருந்து வந்தது. அதை நிறைவேற்றினேன். மகிந்தவை வெள்ளையடிப்பதற்காக இதைச் சொல்ல



வில்லை. எமக்கு தேவையானதை நெருக்கடியான நிலையிலும் எப்படிப் பெற்றோம் என்பதையே குறிப்பிடுகிறேன்.

கிளிநொச்சி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு, வறிய நிலையிலுள்ள மக்களையும் இடம்பெயர்ந்து வந்தவர்களையும் அதிகமாகக் கொண்ட மாவட்டம். அதனால் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பு, அபிவிருத்தி இரண்டிற்கும் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனச் செயற்பட்டேன். பின்தங்கிய நிலையில் இருந்த இடங்களில் புதிய பாடசாலைகளை உருவாக்கினேன். அம்பாள்குளம் விவேகானந்த வித்தியாலயம், மலையாளபுரம் திருவள்ளுவர் பாடசாலை, மற்றும் கிருஸ்ணபுரம், சிவபுரம் போன்ற இடங்களிலும் புதிய பாடசாலைகளை உருவாக்கினோம். அனைத்துப் பாடசாலைகளுக்கும் தேவையான பௌதீக வளங்களை நிறைவு செய்வதற்கும் பல பாடசாலைகளை தரம் உயர்த்துவதற்கும் உழைத்திருக்கிறேன்.

தொடர்ச்சி அடுத்த இதழ்...





ஒலுமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையை தரமுயர்த்துவது சம்பந்தமான கணிப்பீடு அண்மையில் நடந்தது. வடமாகாண கல்வியமைச்சர் குருகுலராஜா பாடசாலைக்கு விஜயம் செய்ததுடன், அயல் கிராமங்களையும் பார்வையிட்டுள்ளார். 450 மாணவர்களுடன் இயங்கிவரும் இந்தபாடசாலையை தரமுயர்த்த ஒருசில அதிகாரிகள் இடையூறாக இருப்பதாக பிரதேச மக்கள் குற்றம்சுமத்துவது குறிப்பிடத்தக்கது.



## மன்னிப்பு கேட்ட சுசித்ரா!

தனக்கு ஏற்பட்ட நிலை எதிரிகளுக்கு கூட ஏற்படக்கூடாதென கூறியுள்ளார் பாடகி சுசித்ரா. சமீபத்தின் முன்னணி நடிக, நடிகையரின் ஆபாசப்படங்களில் சுசித்ராவின் ருவிற்றர் பக்கத்தில் வெளியானது. சுசித்ரா வெளியிடுகிறார் என ஒரு தரப்பு சொல்ல, சுசித்ரா அதை மறுக்க ஒருவாரம் பரபரப்பாகவே கழிந்தது. இதற்குள் சுசித்ரா மனநலம் பாதிக்கப்பட்டு விட்டார் என அவரது கணவர் கூறினார். இதன்பின் கிட்டத்தட்ட இரண்டு மாதமாக சுசித்ரா பற்றிய தகவல்களே இல்லை. இப்போது சுசித்ரா பேசியுள்ளார். "இந்த படங்கள் வெளியானதற்கு நான் பொறுப்பாளியல்ல. என்றாலும் என்னால் ஆறுதல் பெற முடியவில்லை. அனைவரையும் சிரமத்திற்குள்ளாக்கிய வேதனையில் உள்ளேன். என மனநிலை பற்றி கணவர் கூறியதை சரிசெய்து வருகிறேன். என்னால் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்பு வேண்டுகிறேன்" என்றுள்ளார்.

## மூன்று வேடங்களில் விஷால்!

1975 இல் எம்.ஜி.ஆர் நடித்தபடம் நாளை நமதே. இந்த தலைப்பில் விஷால் புதிய படத்தில் நடிக்கவுள்ளார். இதில் அவர் மூன்று வேடங்களில் நடிக்கிறாராம். துப்பறிவாளன், இரும்புத்திரை படங்களில் பிஸியாக நடித்துவரும் விஷால், விரைவில் நாளை நமதே படத்தை தொடங்கவுள்ளார். சுதீஷ்தான் நகைச்சுவை ஏரியாவை கவனிக்கிறார். கவர்ச்சிக்கு ஒன்று, கண்ணியத்திற்கு ஒன்று என இரண்டு நாயகிகளாம்.

## சிலம்ப சமந்தா!

நாகசைதன்யாவுடன் திருமணம் நிச்சயமானபின் சமந்தா மாறுபட்ட வேடங்களில் நடிக்க ஆர்வாமாக உள்ளார். தற்போது அவர் ஒப்பந்தமாகியுள்ள சாவித்ரி, அநீதிகதைகள், விஜய் 61 படங்களில் மாறுபட்ட பாத்திரங்களில் நடிக்கிறார். இதுதவிர, சிவகார்த்திகேயன் படத்தில் சிலம்பாட்ட வீரங்கனையாக நடிக்கிறார். அந்தப்படம் இன்னும் தொடங்கவில்லை. என்றாலும் கடந்த பத்து மாதங்களாக சிலம்பாட்ட பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். இந்தநிலையில் ஏப்ரல் 28 சமந்தா பிறந்தநாளில் வாழ்த்து சொன்ன படத்தை தயாரிக்கும் 24 ஏஎம் ஸ்ருடியோஸ் நிறுவனம், கடந்த பத்து மாதங்களாக சிலம்பாட்ட பயிற்சிபெற்றுவரும் சமந்தாவிற்கு நன்றி என கூறி, சமந்தா சிலம்பாட்ட பயிற்சிபெறும் படத்தை வெளியிட்டுள்ளது.

## இதற்கும் காரணம் தனுஷா?

நடிகைகளின் விவகாரத்தில் தனுஷை இணைத்துப் பேசுவது வழக்கமாகிவிட்டது. அமலாபால் விவாகரத்தானபோது தனுஷின் பெயர் அடிபட்டது. இப்பொழுது டிடி விடயத்திலும் தனுஷின் பெயர் அடிபடுகிறது. டிடி அண்மையில்தான் திருமணம் செய்தார். அதற்குள் அவர்களிற்குள் பிரச்சனை, விவாகரத்தாக போகிறார்கள் என்ற கதை உலாவத்தொடங்கியுள்ளது. டிடி இதை மறுக்கவில்லை. அண்மையில்தான் சுசி லீக்ஸ் மூலம் டிடிதனுஷ் நெருக்கமாக இருக்கும் படம் வெளியானது. அதன் பின்னர்தான் டிடி குடும்பத்திற்குள் விரிசல் எனப்படுகிறது.

## நீச்சல்குளத்தில் உலகஅழகி!

புதுமுக இயக்குனர் தாஜ் இயக்கும் படம் போங்கு. சதுரங்க வேட்டை நட்டி நாயகனாக நடிக்கிறார். இதில் நாயகி ரூஹி சிங். 2014 இல் உலகஅழகியாக தேர்வானவர். ராஜஸ்தானை சேர்ந்த இவர் கலண்டர் கேர்ள்ஸ் படத்தின் மூலம் அறிமுகமானவர். கோடை வெய்யில் வாட்டிவதைக்கும் இந்த சீசனில் அம்மணி முற்றும் திறந்த முனிவராக நீச்சல்குளத்தில் போய் உட்கார்ந்துவிட்டார். நீச்சலுடையில் குளத்தில் உட்கார்ந்திருக்கும் படங்களை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

## மாதவனின் முடிவு

முன்னணி இயக்குனர்கள் கதை சொல்லப் போனாலே மாதவன் இழுத்தடிப்பார். நிறைய கேள்விகள் கேட்டு திணறடிக்கவும் செய்வார். அப்படிப்பட்ட மாதவன், இளைஞர்கள் ஏழுபேர் இயக்கும் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். ஐடி துறையில் பணியாற்றும் இவர்கள், வேலையை உதறிவிட்டு சினிமாவிற்கு வந்துள்ளனர். 3 இடியட்ஸ் படத்தில் என்ஜினியரிங் வேலையை விட்டு, போட்டோகிராபிக்கு வரும் இளைஞர்களை பார்த்த பின்னர்தான் இந்த முடிவை அவர்கள் எடுத்தார்களாம்!



# டூரிங் டாக்கீஸ்



## சீரியலில் நாங்கள்தான் ஹீரோ!

சீரியல்களில் நடிகைகள்தான் ஆல் இன் ஆல் என்றுள்ளார் சின்னத்திரை நடிகை திவ்யா. சுமங்கலி சீரியல் நாயகியான இவர், மேலும் கூறும்போது "சுமங்கலி சீரியலில் அனு என்ற பாத்திரத்தில் நடிக்கிறேன். சவால்களை எதிர்கொள்ளும் வேடமென்பதால் மக்களிடம் வரவேற்பை பெற்றுள்ளேன். சினிமாவில் நடிகர்கள்தான் ஹீரோக்களாக இருப்பார்கள். ஆனால் சீரியல்களில் நடிகைகள்தான் ஹீரோக்கள். பல படங்களில் நடித்த பிறகுதான் சினிமாவில் பிரபலமாகலாம். ஆனால் சீரியலில் நல்ல வேடமென்றால் ஒரு தொடரிலேயே பிரபலமாகிவிடலாம். சுமங்கலி சீரியலில் மாதம் 15 நாள் நடிக்கிறேன். மிச்சமுள்ள நாளில் விளம்பரங்களில் நடிக்கிறேன். இன்னும் 2 வருடங்களிற்கு வேறுசீரியல்களில் நடிக்ககூடாதென ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அதனால் வரும் வாய்ப்புக்களளை தவிர்த்து வருகிறேன்" என்றார்.

## ராமானுஜம் சீரியல் வில்லனின் அனுபவம்!

பானுபிரியா நடித்த வாழ்க்கை தொடரில் அவரது தம்பியாக நடித்தவர் உசைன். பின்னர் ருக்கு ருக்குமணியில் ஊர்வசி தம்பியாகவும், அபிராமியில் கௌதமி தம்பியாகவும் நடித்தவர். ரோமாபுரி பாண்டியன், தென்பாண்டி சிங்கம் உள்ளிட்ட பல தொடர்களிலும் நடித்தவர், ராமனுஜம் தொடரில் நெகடிவ் ரோலில் நடித்தார். அதிக நெகடிவ் ரோலில் நடித்தாலும், தனக்கு மக்கள் மத்தியில் நல்ல பெயர் இருப்பதாக கூறுகிறார். வில்லன் என்றாலும் நகைச்சுவை கலந்திருந்தால் மக்கள் ரசிப்பார்களாம். ராமனுஜம் தொடரில், ராமானுஜரை கொல்ல முயலும் கைலாசம் என்ற நெகடிவ் ரோலில் நடித்தாலும், மக்கள் ரசித்ததற்கு காரணம் அதுதான் என்கிறார்.

## விஜய் டிவியின் அடுத்த நட்சத்திரம்!

விஜய் டிவியில் நட்சத்திர தொகுப்பாளினியாக டிடிக்கு இணையாக இருப்பவர் நட்சத்திரா. டிடியை போலவே புகழ்மிக்கவராக விஜய் டிவி அவரை உருவாக்கி வருகிறது. தற்போது இசைநிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிவரும் நட்சத்திராவுக்கு சினிமாவில் ஒரு கண் உள்ளதாம். சினிமாவிற்கு தயார்படுத்த இப்போது குறும்படங்களில் நடிக்கிறார். அவர் நடித்த சில குறும்படங்கள் பெரு வரவேற்பை பெற்றிருக்கின்றன. நல்ல கதையெனில் சம்பளமே வாங்காமல் நடிக்கிறார். சினிமா வாய்ப்பு இப்போதே வர ஆரம்பித்தாலும், இன்னும் சிறிதுகாலத்தின் பின்னர்தான் ஏற்பாராம்.

## கல்யாணி ரெடி!

சினிமா சின்னத்திரையில் குழந்தை நட்சத்திரமாக நடிக்கத் தொடங்கியவர் கல்யாணி. பின்னர் சீரியர் நாயகி, தொகுப்பாளினி என முகம் காட்டினார். இந்த நிலையில் கடந்த வருடம் திருமணம் செய்து கொண்டு பெங்களூரில் செட்டிலாகிவிட்டார். இப்போது மீண்டும் நடிக்க வந்துள்ளார். இதுபற்றி அவர் கூறும்போது "விஜய் டிவியில் ஆண்டாள் அழகர் தொடரில் நடித்துத பிறகு திருமணம் நடந்தது. ஒரு வருட இடைவெளியின் பின் சின்னத்திரைக்கு மீண்டும் வரவுள்ளேன். பலர் கதை சொன்னார்கள். ஆனால் நான் அவசரப்பட்டு ஒத்துக்கொள்ளவில்லை. மீண்டும் நடிப்பை ஆரம்பிக்கும் போது நல்ல கதைகளை தெரிவு செய்ய வேண்டும். சிறிய வேடங்களாக இல்லாமல் லீட் ரோல்களாக இருக்க வேண்டும். அதேபோல நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கவுள்ளேன்" என்றார்.

# எதனோலின் பின்னாலுள்ள கை யாருடையது?

**கல்குடா எதனோல் தொழிற்சாலையின் பின்னணி அரசியலும்**

**பாதாளம்வரை பாய்கிறதா பணம்?... மக்கள் பிரதிநிதிகளின் மௌனம் ஏன்?**

**திலக்ஸ் ரெட்ணம்**

கிழக்கு மாகாணமே கொந்தளித்து கொண்டிருக்கிறது கல்குடா எதனோல் தொழிற்சாலையை முன்வைத்து. எதனோல் தொழிற்சாலை வந்தால் கிழக்கிற்கே சவக்குழி வெட்டியவர்களாகி விடுவோம் என ஒரு தரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். “எதனோல் ஒன்றும் குடிக்கும் சமாச்சாரம் இல்லை. கிடைக்கும் அபிவிருத்தியை எதற்கு கைவிட வேண்டும்“ என வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள் மற்றைய தரப்பினர். அரசியல்வாதிகள், பொதுஅமைப்புக்கள், ஊடகங்கள் வரிசையில் புதிதாக முளைத்த துறைசார் வல்லுனர்கள் என ஆளாளுக்கு ஒவ்வொரு கருத்து சொல்ல, குழப்பத்தில் இருக்கிறார்கள் மக்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கும்புறுமுலை வெம்பு பிரதேசத்தில் 19 ஏக்கர் பரப்பில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது மெண்டிஸ் நிறுவனத்தின் எதனோல் உற்பத்தி தொழிற்சாலை. வழக்கம்போல சமூக வலைத்தளங்களில்தான் முதல் எதிர்ப்பு கிளம்பியது. பின்னர் அரசியல் வாதிகள், பொதுஅமைப்புக்கள் என எதிர்ப்பு பரவி, ஆர்ப்பாட்டங்கள் வரை சென்றுள்ளது.



### பின்னணி

எதனோல் தொழிற்சாலைக்கு அதிகள வான எதிர்ப்புதான் இருக்கிறது. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பினரிடம் தொழிற் சாலை பற்றிய ஒருமித்த கருத்து இல்லை. சீ.யோகேஸ்வரன் தொழிற்சாலைக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை கொண்டுள்ளார். ஆனால்கிழக்குஅமைச்சர் துரைரட்ணசிங்கம், மாகாணசபை உறுப்பினர்கள் வெள்ளிமலை, ஜனா ஆகியோர் தொழிற்சாலை அமைவதை ஆதரிக்கிறார்கள்.

இந்த களேபரங்களிற்குள் புதிதாக ஒரு குறூப் முளைத்தது. “சத்தியமாக நாங்களும் ரௌடிகள்தான்“ என வடிவேலு அடித்து சத்தியம் செய்வதைபோல, மக்களிற்காகத்தான் நாங்கள் சிந்திக்கி றோம், இப்படியொரு அபிவிருத்தி திட்டத் தைதான் எதிர்பார்த்திருந்தோம், இப்போது தான் கிடைத்துள்ளது என கிளம்பி வந்துள்ளார்கள் துறைசார் வல்லுனர்களின் சங்கம் என்ற அமைப்பினர். “இதுவரை எங்கப்பா இருந்தீர்கள்?“ என கேட்டால், “இப்படியொரு திட்டத்திற்காக காத்துக் கொண்டு வெளிநாட்டில் இருந்தோம்“ என சிரிப்பு காட்டுகிறார்கள். எதனோல் தொழிற்சாலை வேண்டும் என அவர்கள் காட்டும் அளவிற்கு மிஞ்சிய அக்கறையே, “மண்டை மேலுள்ள கொண்டையை மறைக்க முடியலயே“ என்ற விமர்சனத்தை பரவலாக பெற்றிருக்கிறது.

தொழிற்சாலைக்கு ஆதரவான அபிப்பி ராயத்தை உருவாக்க இவர்கள் அதிக முயற்சி எடுக்கிறார்கள். அண்மையில் மூடிய அறைக்குள் தமிழ்தேசிய கூட்ட மைப்பின் இன்னாள், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர்கள், முகாண சபை உறுப்பினர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார்கள். எதனோல் தொழிற் சாலையால் மாவட்டத்திற்கு கிடைக்கும் நன்மைகளை புரிய வைப்பதே இந்த கூட்டத்தின் நோக்கமாம். ஆரம்பத்தி லிருந்தே எதனோல் தொழிற்சாலைக்கு எதிரான நிலைப்பாடுடைய வியாழேந் திரன், யோகேஸ்வரன் இருவரும்தான் கூட்டத்திற்கு செல்லவில்லை. மற்றை யவர்கள் கூட்டத்திற்கு போய்வந்து, “எதனோல் தொழிற்சாலையில் நன்மை களை அறிந்து வந்து“ சத்தமில்லாமல் இருக்கிறார்கள்.

எதனோல் தொழிற்சாலைக்கு முஸ்லீம் அரசியல்வாதிகள், முஸ்லீம் மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருவதையும் குறிப்பிட வேண்டும். “நான் இருக்கும்வரை எதனோல் தொழிற்சாலையை வர விட மாட்டேன்“ என கிழக்கு முதல்வர் நசீர் அஹமட் கூறியிருக்கிறார்.

தொழிற்சாலை சர்ச்சை கிளம்பிய போது, அங்கு சென்ற ஊடகவியலாளர்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தப் பட்டிருந்தது. “இந்த தொழிற்சாலையின் பின்னணியில் பேரினவாத நிகழ்ச்சி நிரல் இருக்கிறது. பேரினவாத கட்சியின் பிரதேச அமைப்பாளர்தான் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தினார்“ என்பது முஸ்லீம் அரசியல்வாதிகளின் பொதுவான கருத்து.

### சாதக, பாதகங்கள்

தொழிற்சாலையினால் ஏற்படும் சாதக, பாதக அம்சங்கள் என இருதரப்பாலும் பட்டியல்படுத்துவதை கவனித்தால், பாதகங்கள்தான் அதிகம் என்கிறார்கள் மக்கள். சுற்றுசூழல் பாதிப்பு, நிலக்கீழ் நீர்வளம் பாதிப்பு, உணவு பற்றாக்குறை, கலாசார பிறழ்வு ஏற்படும் என ஒரு பட்டியலை வாசிக்கிறார்கள் எதனோல் தொழிற்சாலை எதிர்ப்பாளர்கள்.

எதனோல் தொழிற்சாலையினால் அந்த பிரதேசத்தின் நீர்வளம் மாசுபடுத்தப் படும்போது, எத்தனை அடி தோண்டி னாலும் சுத்தமான நீர் கிடைக்காமல் போகலாம் என எச்சரிக்கை மணி அடிக்கிறார்கள் அவர்கள். எதனோல் தொழிற்சாலை பகுதிக்கு அண்மையில் ஒரு ஐஸ்கட்டி இயங்கி வருகிறது. தமது கிணறுகளில் படிப்படியாகவற்றிக்கொண்டு செல்வது குறிப்பிடத்தக்கது.

எதனோல் தொழிற்சாலை சுற்றுச்சூழலை கெடுக்கும் என ஒரே வார்த்தையில் முடிக்கிறார்கள் ஒரு பகுதி வல்லுனர்கள். தொழிற்சாலையிலிருந்து வெளியிடப்படும் நச்சுப்புகை, திண்ம திரவக்கழிவுகளால் ஏற்படும் பாதிப்புக்களை கணக்கிட முடியாதென்கிறார்கள். எனினும், எதனோல் தொழிற்சாலை நிர்வாகம் இதை மறுக்கிறது. திண்மக்கழிவுகளை கால்நடை உணவாகவும், திரவக்கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்போவதாகவும் கூறுகிறார்கள். இதை செய்யாத தொழிற் சாலைகளிற்கு அனுமதி கிடைக்காதென்பது தொழிற்துறை அனுமதியின் ஆரம்பகட்ட விதியென்கிறார்கள்.

எதனோல் உற்பத்தியின் மூலப் பொருளாக நெல், சோளம் பயன்படுத் தப்படும். இது இரண்டு விதமான விளைவுகளையும் ஏற்படுத்தும். தொழிற் சாலை ஆரம்பித்த சிறிதுகாலத்திலேயே உணவுத்தட்டுப்பாடு ஏற்படலாம். பெருமுதலாளிகளான தொழிற்சாலை நிர்வாகம் நெல், சோளத்தை என்ன விலை கொடுத்தும் வாங்கும் திறனுள்ளவர்கள். அந்த சந்தை மதிப்பையும் கணக்கில் கொண்டே இவற்றின் பெறுமதி உயரும். பெறுமதி உயர்வு ஏழை மக்களின் பொருளாதாரத்தை கணக்கில் கொள்ளாது.

நெல்லை பெருமளவில் எதனோல் தொழிற்சாலை கொள்வனவு செய்ய, ஒரு கட்டத்தில் அரிசியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். இந்த சுமையை மக்கள் சுமக்க வேண்டியிருக்கும். இதேவேளை, விவசாயிகள் நெல்லை மொத்தமாக தொழிற்சாலைக்கு கொடுக்க வாய்ப்புள்ளது. அவர்களிற்கு இதில் இலாபம் கிடைக்கும். இது நெல் பயிரிடுபவர்களிற்கு செழிப்பான எதிர் காலத்தை உண்டாக்கும். நெல் பயிரிடுபவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்தும். மேட்டுநில பயிர்ச்செய்கையான சோள உற்பத்தியின் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் உயரும். ஆனால், மட்டக்களப்பு, பொலனறுவை பகுதிகளில் சிங்கள, முஸ்லீம் மக்களில் பலர் அரிசிஆலைகளை நம்பி வாழ்பவர்கள். இதன்மூலம் மாதாந்தம் கோடிக்கணக்கில் இலாபம் சம்பாதிக்கும் பெருமுதலாளிகள் உள்ளனர். நெல் கிடைக்காவிட்டால் நெல் ஆலைகளை நம்பியவர்களின் பாதிப்பு ஒருபுறம். பெருமுதலாளிகள் இதை அனு மதிப்பார்களா என்ற கேள்வி மறுபுறம்.

### பாசிக்குடாவிற்கு ஒரு நியாயம் கல்குடாவிற்கு ஒரு நியாயம்

இந்த தொழிற்சாலையின் மூலம் மட்டக் களப்பில் மதுபாவனை அதிகரிக்கும் என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியா தென்கிறார்கள் தொழிற்சாலை ஆதரவா ளர்கள். எதனோல் என்பது மதுபான உற்பத்திக்கான மூலப்பொருள். இதை நேரடியாக அருந்த முடியாது. மதுபான தொழிற்சாலைக்கு அனுப்பி, மதுபானமாக்கிய பின்னரே அருந்தலாம். எனினும், இலங்கையில் தாராளமாக எதனோல் உற்பத்தி செய்யலாம் என்ற நிலையேற்பட்டால், வெளிநாட்டு இறக்குமதியில் தங்கிராத சூழல் ஏற்பட்டு நாடளாவிய ரீதியில் மதுவின் விலை குறையும் அபாயம் உள்ளது. அது மட்டக்களப்பில் மட்டுமல்ல நாடெங்கும் மதுபாவனையை தாராளமாக்கும்.

இந்த தொழிற்சாலையில் மூலம் 150200 வரையான பிரதேச இளைஞர்,யுவதிகளிற்கு வேலைவாய்ப்பு உள்ளதென நிர்வாகம் அறிவித்துள்ளது. தொழிற்சாலையை ஆதரிப்பவர்களின் பிரதானவாதமும் வேலைவாய்ப்புதான். ஆனால், காலூன்றும் வரை வேலைவாய்ப்பு என்ற கவர்ச்சி கோசத்தை பாவிக்கும் தொழிற்சாலைகள், பின்னாளில் அதைகைவிடுவது உலகெங்கும் உள்ள வழக்கம். ஏனெனில், இது ஒரு சட்ட ஏற்பாடு அல்ல. கண்காணிக்கவும் அமைப்புக்கள் கிடையாது. ஏனெனில், இந்த வேலைவாய்ப்புக்கள் அனேக மானவை தொழில்நுட்ப அறிவுடன் சம்பந்தப்பட்டவை. அடிமாட்டு வேலைக்கு குறிப்பிட்ட தொழிலாளர்களை இணைப்பார்களே தவிர, அதிகமாக எதிர்பார்க்க முடியாது.

கல்குடா தொழிற்சாலையை முஸ்லீம் தரப்பில் கடுமையாக எதிர்ப்பதை வேறு கண்ணோட்டத்தில் பார்ப்பவர்களும் உள்ளனர். தொழிற்சாலையின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பிரதேச மக்கள் வளம்பெற்று, அந்தப்பகுதி முன்னேற்றம் அடைந்துவிடலாம், தமது பிரதேசத்திற்கு இந்த வாய்ப்பு கிடைக்க வில்லையென்பதால் எதிர்க்கிறார்கள் என்று தமிழ் முஸ்லீம் உறவில் திரி கொளுத்தவும் சிலர் முயல்கிறார்கள்.

எதனோல் தொழிற்சாலையால் கலாசாரம் பிறழ்வுகள் ஏற்படும் என்ற வாதத்தை மறுப்பவர்கள், மட்டக்களப்பில் உள்ள சுற்றுலாதலங்களான பாசிக்குடா, கல்லடி பிரதேசங்களில் நடப்பது கலாசார காவலர்களின் கண்ணில் தெரிவதில்லையா என்று திருப்பி கேட்கிறார்கள்.

### புலிகேசி அரசியல் செய்யும் தமிழ் பிரதிநிதிகள்

மட்டக்களப்பில் 64 மதுபான விற்பனை நிலையங்களை வைத்துக்கொண்டு, எதனோல் உற்பத்தி தொழிற்சாலையை மட்டும் எதிர்ப்பதில் என்ன பலன் என்ற நியாயமான கேள்வியையும், தொழிற்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

நிந்தவூர் சலீம்



# அம்பாறை மாவட்டத்தில் களை கட்டிய மேதின நிகழ்வுகள்!

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் இம்முறை மேதின நிகழ்வுகள் பெரும்களை கட்டியிருந்ததுடன், உணர்வுபூர்வமான எழுச்சியுடனும் நடைபெற்றன. மேதின ஊர்வலங்கள், மேதினக் கூட்டங்களென மக்கள் பெரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கடந்த பல்லாண்டு காலமாக கல்முனை நகரில் மேதின ஊர்வலத்தையும், மேதினக் கூட்டத்தையும் நடத்தி வரும் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் அதன் இணைநிறுவனங்களுடன் இணைந்து இம்முறையும் சிறப்பாக மேதின நிகழ்வுகளை நடத்தியது. சங்கத்தலைவரும், தொழிற் சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெற்ற மேதின ஊர்வலத்திலும், கல்முனை வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.




இதில் விசேடமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்தும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதேபோல், ஒன்றிணைந்த தொழிற் சங்கங்களின் மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் இலங்கை மகா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்முனை ஐக்கிய சதுக்கத்தில் இடம்பெற்றது.

இதேவேளை முதன்முறையாக மூவின ஊடகவியலாளர்களும் கலந்து கொண்ட மேதின ஊர்வலமும், மேதின கூட்டமும் அம்பாறை நகரில் நடைபெற்றது. அகில இலங்கை ஊடகவியலாளர் சம்மேளனம், சம்மேளனத் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான வசந்த சந்திரபால தலைமையில் நடைபெற்ற மேதின ஊர்வலத்திலும், அம்பாறை நகர மண்டபத்தில் நடைபெற்ற மேதினக் கூட்டத்திலும் அதிக அளவிலான ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

குறிப்பாக ஹம்பாந்தோட்டை, மொனறாகல, பொலனறுவ, மாத்தளை, மட்டக்களப்பு, அம்பாறையைச் சேர்ந்த சம்மேளன சிங்கள, முஸ்லிம், தமிழ் ஊடகவியலாளர்கள் இந்த மேதின நிகழ்வுகளில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

மேற்படி மேதின நிகழ்வுகளுக்கெல்லாம் உச்சமாக அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மேதின நிகழ்வுகள் அமைந்திருந்தன. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இம்முறை கிழக்குவாழ் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக அம்பாறை மாவட்ட மக்களுக்கு கௌரவமளிக்கும் வகையில் அக்கரைப்பற்று பகுதியில் மேதின நிகழ்வுகளை நடத்த முடிவு செய்தது.

தமிழ்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு அம்பாறை பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மேதின நிகழ்வுகளை திகாமடுள்ள மாவட்டக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கவனித்துக் கொண்டார். இந்த மேதின ஊர்வலம் அக்கரைப்பற்று மருதடிப் பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகி, மேதினக்கூட்டம் நடைபெற்ற ஆலையடி வேம்பு தர்மசங்கரி மைதானம் வரை இடம்பெற்றது.

தொழிலாளர்கள், பொதுமக்கள், ஏனைய உழைக்கும் வர்க்கத்தினர் உணர்வுபூர்வமாக இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டதுடன் வரலாறு காணாத அளவில் தமிழ் மக்கள் திரண்டு கூட்டமைப்பின் மேதினக்கூட்டத்திலும் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன், தமிழரசுக்கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, கூட்டமைப்பின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உட்பட கூட்டமைப்பின் அங்கம் வகிக்கும் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்த மேதின நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

இந்த மேதினக்கூட்டத்திற்கு தலைமை வகித்த பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தலைமை உரையாற்றுகையில் மிக உணர்ச்சிபடக் காணப்பட்டார். 'வரவிருக்கும் அரசியலமைப்பு தீர்வுத்திட்டத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்புகள், சம உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும். அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்களை உள்ளடக்கிய தீர்வுத்திட்டம் வர வேண்டும். மீறி அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்புகள் கேள்விக்குறியாகி பாதிக்கப்படுவோமானால் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கத்தயங்கேன்' என சூளுரைத்து உரையாற்றினார் கவீந்திரன் கோடீஸ்வரன்!

எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் கூட்டத்தில் பிரதான உரையாற்றினார்.

'வடகிழக்கில் தமிழர்களை முஸ்லிம்களும், முஸ்லிம்களை தமிழர்களும் ஏமாற்றி வாழ முடியாது, ஒன்றுபட்டே வாழவேண்டுமென' அழுத்திக் கூறிய சம்பந்தன் ஐயா, முஸ்லிம் தலைமைகளும், தமிழ்த்தலைமைகளும் கூடிப்பேச முன் வரவேண்டுமென்ற பகிரங்க அழைப்பையும் தமது உரையின் போது விடுத்தார்.

மேலும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், குழுக்களின் பிரதித்தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரதும் இந்த மேதின உரைகள் கலந்து கொண்ட மக்களை உணர்ச்சி மயத்தில் ஆழ்த்தியது.

மேலும் இந்த மேதினக்கூட்டம் நிறைவு பெற்றதும் மேடையை விட்டிறங்கிய சம்பந்தன் ஐயா, மாவை, சுமந்திரன் போன்றோர் மக்கள் திரளை நோக்கிச் சென்று மக்களுடன் அளவளாவிய சம்பவம் இந்த மேதின நிகழ்வுகளுக்கு முத்திரை பதித்தது.

மொத்தத்தில் அம்பாறை மாவட்டம் என்றென்றும் பெருமைப்படத்தக்க வகையில், வரலாற்றில் தடம் பதித்ததாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இந்த மேதின நிகழ்வுகள் அமைந்தன.

---

சாலை எதிர்ப்பாளர்கள் எதிர்கொண்டாக வேண்டும். மதுவிற்கு எதிரான ஒவ்வொரு போராட்டமும் பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் காலடியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தை மூட வழிதெரியாதவர்கள், அரச பின்னணியுடைய எதனோல் தொழிற்சாலையை மூட முடியுமா?


கிழக்கில் தமிழர் பகுதிகளில் தொழிற்துறை வளர்ச்சியென்பதே கிடையாது. வாழைச்சேனை காகிதஆலை, ஓட்டு தொழிற்சாலை, அரிசிஆலைகள் என இருந்தவை எல்லாம் மூடப்பட்டு விட்டது. நமது பகுதி இப்படியே இருக்க முடியாது தான். ஆனால் சூழலையும், மக்களையும் அழிக்காத தொழிற்துறையைத்தானே வரவேற்கலாம். மூடப்பட்ட தொழிற்சாலைகளை முதலீட்டாளர்களை கண்டுபிடித்து இயங்க வைப்பதுதானே சமூகத்தில் அக்கறையுள்ளவர்களின் பணியாக இருக்க முடியும். இதைவிட்டு, துறைசார் வல்லுனர்கள் என்ற பெயரில் திடீரென கிளம்பி வந்து, எதனோல் தொழிற்சாலைக்கு வக்காளத்து வாங்குபவர்களின் நேர்மையை எப்படி சந்தேகிக்காமல் இருக்க முடியும்? இத்தனை பிரச்சனைகள் நடந்தபோது கண்ணை மூடிக்கொண்டு இருந்தவர்கள், இப்போது வந்து கூவுகிறார்கள். தமது வங்கிக் கணக்கை நிறைக்க ஊர் வயிற்றில் அடிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

மத்திய, மாகாண அரசுகள் இதுவரை கிழக்கு தமிழ் பகுதிகளில் எந்த தொழிற்துறையை உருவாக்கியுள்ளது? மக்கள் நல திட்டங்கள் எதையும் செய்யாதவர்கள், எதனோல் போன்ற ஆபத்தான திட்டங்களிற்குத்தான் தமிழர் பகுதிகளை தேர்வு செய்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? நாமும், நமது மக்கள் பிரதிநிதிகளும் இளித்தவாயர்கள் என நினைக்கிறார்கள். இதுவே ஒரு முஸ்லீம் பிரதேசத்தில் அமைக்க திட்டமிடப்பட்டிருந்தால் எவ்வளவு பெரிய போர்க்களமாகியிருக்கும். ஆனால் நம்மவர்கள் பிரிந்து நின்று பட்டிமன்றம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்குள் துறைசார் வல்லுனர்கள் என்ற கும்பல் வேறு. பணம் பாதாளம்வரை பாயும் என்பார்கள். தொழிற்சாலைக்கு எதிரான அபிப்பிராயத்தை இல்லாமல் செய்ய விளையாட்டு கழகங்கள், பொது அமைப்புக்கள் சிலவற்றிற்கு "கவனிப்பு" நடந்ததாக சொல்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போதுதான், துறைசார் வல்லுனர்களின் திடீர் சமூக அக்கறை சந்தேகத்தை ஏற்படுத்தியது என்கிறார்கள் மக்கள்.

மது நாட்டுக்கும் வீடு கேடு என்கிறார் ஜனாதிபதி. மக்களும் அதைத்தான் சொல்கிறார்கள். இப்படியிருக்க, உங்களிற்கு வேலைவாய்ப்பு தரப்போகிறோம் என வலுக்கட்டாயமாக தொழிற்சாலையை நிறுவுவதன் பின்னணி என்ன? எதனோலின் பின்னாலுள்ள வலுவான கரங்கள் எவை?

தமிழ்மக்கள்பிரதிநிதிகள் இந்தஇடத்தில் செய்ய வேண்டியது, ஒற்றுமையாக இயங்குவது. தொழிற்சாலையால் ஏதாவது ஆபத்துக்கள் இருக்கிறதா என்பதை முறையாக நிபுணத்துவம் மிக்கவர்கள் மூலம் ஆராய வேண்டும். தொழில் வாய்ப்பு என்ற ஒற்றைவார்த்தையில் தொங்கிக் கொண்டிருப்பது முட்டாள்தனம். பிரதேசப் பொடிக்காரர்களிற்கு தொழில் வாய்ப்பு என்று கொலைசெய்ய நாலுபேரை நியமிப்பதெல்லாம் புலிகேசி பாணி அரசியல்.

மதுவற்ற நாட்டை உருவாக்கப்போவதாக ஜனாதிபதி பிரகடனம் செய்துள்ளார். ஜனாதிபதி சொன்ன நாட்டிற்குள் வடக்கு, கிழக்கு வரவில்லையா? அல்லது, மதுவைத்தான் சொன்னேன், எதனோலை சொல்லவில்லை என்பாரா?



குடநக்கீரன்
உளவள ஆலோசகர்

# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்

**திவ்யதர்சினி (வயது 20)**
**புத்தூர்**

***எனது பெரியம்மா, திருமணம் முடிக்காமல் எங்களுடன்தான் வாழ்ந்து வருகிறார். அவர் நீண்டகாலமாக மனநோய் சிகிச்சை பெறுவர். அவரைப் போலவே எனது அம்மாவுக்கும் இவ்வாறு சில சிக்கல்களின் பின் மனநோய் சிகிச்சையும் பெறுகிறார். இப்போது பலர் கூறுகிறார்கள், இது ஒரு பரம்பரை வியாதி என்று. எனது பயம் என்னவென்றால் எதிர்காலத்தில் எனக்கும் மனநோய் வருமென்று சிலர் கூறுகின்றார்கள். உண்மையில் மனநோய் ஒரு பரம்பரை வியாதியா? மனநோய் என்பது பரம்பரையில் யாருக்காவது இருந்தால் தான் வருமா?***

*பதில்:* இல்லை, மனநோய் அல்லது உளநோய். யாருக்கும் வரலாம். குறிப்பாக பாரிய உளநெருக்கீடு, தாங்க முடியாத நீண்ட நாள் துயரம். இழப்பு, தொடர் ஏமாற்றம் போன்ற பல்வேறு காரணிகளினுள் சிக்குப் படக்கூடிய எவருக்கும் இந் நிலை வரலாம். தற்கொலை என்பது ஒரு மனநோயின் வெளிப்பாடுதான். அப்படிப் பார்த்தால் தற்கொலை செய்து கொண்ட அனைவரினதும் பரம்பரையில் உளநோயாளிகள் இருக்க வேண்டுமா?

இறுதிக்கட்ட யுத்தத்தில் சிக்குப்பட்ட பலரும் இப்போது தற்கொலைக்குப் போவது பத்திரிகைகளில் பார்க்கின்றோம் அல்லவா? உண்மையில் உளவலிமை அற்ற எவரும் உளநோய்க்கு ஆளாகும் தன்மையே உள்ளது. கடும் துயரம், பாரிய இழப்பு, பிரிவு, சோகம், ஏமாற்றம் போன்ற பல்வேறு காரணிகளையும் எதிர்கொள்ளக்கூடிய உளவலிமை அற்றவர்கள் உளநோயாளியாக மாறுவது இயற்கையே.

ஆனாலும் பரம்பரையில் ஏற்கனவே உளநோயின் பாதிப்புள்ளவர்களுக்கு இப்படியான சூழற் காரணிகள் பின்புலங்கள் உருவாகும்போது இவர்கள் ஏனையவர்களை விட இலகுவாக உளநோய்க் காளாவார்கள் என்கிறது அறிவியல்.


**இராகவன் (வயது 26)**
**சாவெட்டி**


***சுய இன்பம் காண்பதால் ஞாபக சக்தி குறையும், உடல் பலவீனமடையும், பிற்காலத்தில் குடும்ப வாழ்வில் ஆண்மைக்குறைபாடு ஏற்படும் என்றெல்லாம் கூறுகின்றார்களே? உண்மையா? அப்படியெனின் அதற்கு ஏதாவது மருந்துண்டா?***

*பதில்:* இராகவன் எமது பிரதேசத்தில் கட்டிளமைப் பருவத்திலுள்ள தொண்ணூற்றைந்து வீதமான கட்டிளமைப் பருவத்தினர்களிடம் இருக்கும் பொதுவான ஐயப்பாடு இதுதான். உண்மையில் இலிங்க முதிர்ச்சியடைந்த ஒரு உயிரினத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை பாலுறவும், இனப் பெருக்கமும்தான். மனிதர்களான எமக்குப் பாலுறவை (உடலுறவையும் இனப் பெருக்கத்தையும்) வாழ்க்கைத் திட்டமிடலில் நாம் தள்ளி வைக்கின்றோம். ஆனால் அந்தத் தள்ளிவைக்கும் காலம் முழுவதும் பாலியல் தேவை தவிர்க்க முடியாத ஒன்றாகையால் சுயஇன்பம் காணுதல் என்ற பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இது பலநூறு வருடங்களாக மனிதர்களால் பேணப்பட்ட வரும் ஒரு பாலியல் செயற்பாடே. இதில் எதுவித அசாதாரண தன்மையும் இல்லை. மருத்துவரீதியாக சுய இன்பம் காண்பதால் நீங்கள் கூறிய ஞாபக சக்திக் குறைவோ, ஆண்மைக் குறைவோ, உடற் பலவீனமடைதலோ எதுவும் இருப்பதாக இல்லை.

நீங்கள் கூறியதெல்லாம் பிழையான தகவல்களின் அடிப்படையிலானவை. (miscoseption) மனப்பயம் போன்ற உளவியல் ரீதியானவையே. எனவே சுய இன்பம் காண்பதை அந்த நேரத்தோடு விட்டுவிடுங்கள் அதை எப்போதும் உங்கள் மனதில் சுமந்தபடி திரியாதீர்கள். வாழ்க்கை என்பது ஒரு உயர்ந்த இலக்கு நோக்கிய நீண்ட பயணம். இதில் சுய இன்பம், பாலியல் என்பவை சில களியாட்ட நிகழ்வுகள். நீங்கள் இக் களியாட்டங்களில் பயணத்தை தாமதப்படுத்தாமல் அவற்றின் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டு அதை அந்தளவிலேயே விட்டுவிட்டு உங்கள் இலக்கு நோக்கி பயணத்தைத் தொடருங்கள். இது தான் நான் உங்களுக்கு கூறும் மருந்து.



**பெண் பெயர்குறிப்பிடவில்லை (வயது 27)**
**அச்சுவேலி**

***ஆறு வருடங்களுக்கு முன் வெளி நாட்டில் உள்ள உறவுக்காரர் ஒருவரைத் திருமணம் செய்தேன். நான்கு மாதம் அவருடன் ஒன்றாக வாழ்ந்தேன். அவர் ஏற்கனவே திருமணமானவர் என்பது அதற்கு பின்தான் தெரிய வந்தது. அவருடன் வாழப்பிடிக்காமல் தனியாகவே வாழ்ந்து வருகிறேன். இப்போது எனக்கு வாழ்க்கையில் பிடிப்பு இல்லை. விரக்தியும் வேதனையும் கூடி சிலசமயங்களில் 2, 3 நாட்கள் கூட யாருடனும் பேசாமல் அறைக்குள் இருந்து விடுவேன். உறவினர்கள் தெரிந்த வைத்தியரிடம் அழைத்து சென்றபோது, உளவள சிகிச்சை பெறுமாறு வைத்தியர் கூறினார். இதற்கு எனக்கு பயமாக உள்ளது. உளவள சிகிச்சை என்றால் என்ன?***

*பதில்:* உளவள சிகிச்சை என்பதை ஆங்கிலத்தில் (counselling) என்பார்கள். தமிழில் இதற்கு உளவள சிகிச்சை, உளவளத்துறை, ஆற்றுப்படுத்தல் என பல்வேறு பதங்கள் உண்டு. ஆற்றுப்படுத்தல் என்பது தமிழனின் நீண்டகால வரலாற்றுப் பெருமை கொண்ட ஒரு விடயம். 2000 வருடங்களுக்கு முன்னான சங்ககாலத்தில் ஏராளமான இலக்கிய படைப்புக்கள் ஆற்றுப்படுத்தலின் நோக்கமாக உருவாகியவை.

திருமுருகாற்றுப்படை, சிறுபானாற்றுப்படை, பொருநராற்றுப்படை எனப் பல்வேறு சங்க இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலுக்கான ஆற்றுப்படுத்தலுக்காக எழுந்தவையே.

நவீன வாழக்கை முறையில், இந்த உளவளத்துறை என்பது ஒவ்வொரு மனிதனுடைய ஒரு முக்கிய பகுதியாக ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவசியமானதாகவும் ஆகிறது.

ஆற்றுப்படுத்தல் என்பது, ஒரு மனிதன் ஏதோ ஒரு பிரச்சினை காரணமாக உளவியல் ரீதியாக குழப்பமான மனநிலையில், அப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது மனதிற்குள் தத்தளித்துக்கொண்டு இருக்கும்போது (இதை மனவழுத்தம் எனக் கூறப்படும்) இப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வினை அந்நபர் எடுப்பதற்காக மனவளக்கலை பற்றி அனுபவமும் ஆற்றலும், உள்ள ஒருவர், அந்த நபருடன் சம்பாசிப்பதன் மூலம் அவருடைய பிரச்சினையில் அவர் சிக்குப்பட்டுக் கொண்டுள்ள காரணத்தை அவருக்கு காட்டி அப் பிரச்சினைக்கு அவரே தீர்வு கண்டு அதில் இருந்த அவர் வெளியே வர உதவும் செயலே ஆற்றுபடுத்தல் எனப்படுகிறது

உளவளத்துறை என்பது ஒரு விஞ்ஞானமா? மருத்துவமா? கலையா? எனப் பல்வேறு ஆய்வுகள் நடந்தபோதும், இது கலைப் பண்புகள் உள்ள விஞ்ஞானம் என்றே கூறப்படுகின்றது.

உண்மையில் இந்த ஆற்றுப்படுத்தல் என்பது, மன அழுத்தத்தில் இருப்பவருக்கு இப்படியான ஒரு உளவியல் வழிகாட்டி தேவை என்று அவரும் உணரும் போது அவரின் வேண்டுதலோடே செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் உளவியல் பிரச்சினையில் சிக்கிப்பட்டு இருப்பவருடன் சேர்ந்து கதைப்பதன் மூலமே ஆற்றுப்படுத்தல் மேற் கொள்ளப் படுகின்றது.

இதற்கு நிறைந்த உளவியல் அறிவும் அனுபவமும் மிக நுட்பமான திறன்களுக்கும் மிக அவசியமானவை. இதனாலேயே முன்னைய காலங்களில் மதப் பெரியார்களும் அனுபவம் மிக்க முதியோர்களும் இதனை மேற் கொண்டார்கள்.

ஆனால் இன்று எமது பிரதேசத்தில் உருவாகியிருக்கும் உள சமூக மேம்பாட்டு மையங்கள் பல மேற்கொள்ளும் ஆற்றுப் படுத்தலை பார்த்தால் உமது கேள்வியின் நியாயம் புரிகிறது. பல நிறுவனங்கள் தமது இருப்புக்காக இதை ஒரு தொழில்க் கல்வியாக்கி வருவது கவலைக்குரிய விடயமாகும்.

சொன்னால் நம்பமாட்டீர். சுனாமிக்கப் பிற்பட்ட காலத்தில் அனேக உளசமூக நிறுவனங்கள் உருவாகி பல மில்லியன் ரூபாய்கள் பயன்படுத்தியதுகூட இந்த counselling மூலம்தான். வேலையில்லாப் பிரச்சினை பூதாகரமாக உள்ள எமது பிரதேசத்தில் பல இளைஞர் யுவதிகளின் வாழ்வில் ஒளியேற்றியதும் இந்த counselling தான்.

எனவே உளவளசிகிச்சை பற்றிய எந்த சந்தேகமுமோ பயமோ இன்றி நல்ல ஒரு துணையாளரிடம் சென்று உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ளுங்கள்.



ஒரு பெண்ணிடம் வருகின்ற கவிதைகளின் தருணங்கள் அவளுடைய நெற்றிக் கண்ணாகவும் உயிரில் துளிர்க்கின்ற கண்ணீராகவும் அவளுக்கான சிறகுகளாகவும் சாளரங்களாகவும் மாற்று வடிவ உருக்களை கொண்டிருக்கின்றன.

அனார்.



## மரப்பட்டை நிற மேலாடையை விடுவிக்கும் சிறுமி

நரன்

விடிகாலையின் கண்மாய் கரையில்
நின்று
தன் மரப்பட்டை நிற மேலாடையின்
பட்டன்களை ஒவ்வொன்றாக விடுவிப்பாள் சிறுமி.
அவள் உடம்பிலிருந்து நிறைய கருஞ்சாம்பல்நிற
பறவைகள் அப்போது வெளியேறிச் செல்லும்
இரவு சிறுமி பட்டன்களை துளைக்குள்
செருகும்முன் வேறு சில பறவைகளை
அவை உடனழைத்துக்கொண்டு உள்ளேறுகின்றன.
இதற்கிடைப்பட்ட நேரத்தில் சிறுமி
கண்மாய் நீரில் தன் மேலங்கியை அலசுவாள்.
பறவைகளின் எச்சங்கள் போக அலசுவாள்.
கண்மாயெல்லாம் ஒருநாள்
கருஞ்சாம்பல் பறவைகள் செத்து மிதந்த பின்
நீரின் நடுவிலிருந்து ஒற்றை தாமரை நீருக்கு வெளியே
அது அவளின் தொப்புள்கொடியிலிருந்து கிளம்பி இருக்கக்கூடும்.
எப்போதாவது நீருக்குள்ளிருந்து துவைப்புக்கல் போன்றோ
தவளையின் சொரசொரப்பு முதுகு போன்றோ
ரெட்டை கறுப்பு நாகங்கள் ஜடையென
பின்னித்தெரியும் நேற்று பார்த்தேன்
அவளின் தோழியை தொண்டு கிழவியாய்
கரையில் அமர்ந்து 89 என்று சொல்லி முடித்தாள்.
சிறுமியாய் இருக்கையில் நீரில் மூழ்கி
100 எண்ணும்வரை அமிழ்ந்திருக்கும்
விளையாட்டை விளையாட வந்தார்களாம்.
அது வருடங்களா ?
நீருக்குள்ளிருந்து
ரெட்டை வெள்ளை நாகங்கள்
ஜடையென பின்னித் தெரிகிறது .




ஓஷோ நவா


தாடி மயிர்களைத் தடவுகையில்
தடித்த முட்கம்பி நடுவே
நீடித்த என் வாழ்வின்
மழுங்கிய முனைகள்
இதயத்தை அழுத்தின

மரத்தையும் மலையையும்
இடறும் யானை நான்
சிறு கம்பிக்கஞ்சி
கனவுகளின் கூர்முனைகளால் தாக்குண்டு
பழகிப்போன தாழ்வுச்சிக்கலில் குழம்பி
வலியழிந்து
சுருண்டு கிடந்தேன்.

இதயத்தின் நான்கு அறைகளும்
கல்லுண்டாய்வெளிக் குப்பைகள்போல
கலவை உணர்வுகளால்
நிறைந்து வழிந்தன.

அவற்றை வாரி
மீளமீள
நான் உள்ளே கொட்டிக்கிடந்தேன்


தயவுசெய்து என்னை மீட்டெடுங்கள்
என நான் ஓலமிட்டு
அழுது அழைக்கையில்
பலர் தம் குப்பைகளையும் என்மீது கொட்டினர்
வழிந்த என் குப்பைகளையும்
பிறர் உமிழ்ந்த குப்பைகளையும்
வாரிச் சுமந்தபடி
மெல்லமெல்ல
நான் ஒரு குப்பைத்தொட்டியாகத்
தேங்கிக் கிடக்கிறேன்...
தேங்கியவைகளைச்
சேதனப்பசளையாக்கி மீளவும்
விருட்சமாய்
முளைத்தெழுவேன்
என்ற நம்பிக்கையோடு



## தெளிவுரை

நடராஜா முரளிதரன்

அந்த அடர் வனம்
நடுநிசி ஓநாய்கள்
ஊளையிடும் கானகம்
மலைப்பாம்பாக எனது வாகனம்
ஊர்ந்து கொண்டிருந்தது.
வண்டியிலிருந்து இறங்கியதுமே
நாசித்துவாரங்களை ஊடறுத்துச் சென்றது
இமைய மலைச்சாரல் மூலிகையின்
புகைந்து கருகிய மணம்.
கொப்புகள் கொழுந்து விட்டெரிந்தன
கூடாரம் அருகே போகிகள் இருவரும்
புகை இன்பத்தில் கிறங்கிக் கிடந்து
சுருள் சுருளாய் வெளி விட்டுக்கொண்டிருந்தனர்
புகை வளையங்களை.
ஆயினும் தம்மிடத்தில் தங்கியிருந்த
பெண்களையும் பிள்ளைகளையும்
இன்னும் பிற சிந்தாந்திகளையும்
காட்டு விலங்குகளிடமிருந்து
காத்தல் என்பதும் அவர்களது இருத்தலில் ஒன்றாய்
இருந்தது.
இரு மயானத்து அரிச்சந்திரர்களும்
கொள்ளிக்கட்டைகளைப் புரட்டியும் கிளப்பியும்
முறித்தும் நெரித்தும்
தீயின் எழுகையால் ஒரு யாக வேள்வி
ஆட்டம் புரிவதான காட்சி அது
சந்திரமதிகளும் தேவதாசர்களும் ஆழ்துயிலில்
எழுப்பிய குறட்டை ஒலி
இருளிடை வெளியை இல்லாதொழித்தது.
கறுப்பு இருள் காவி வந்த அந்த மாய வாசனை
என் கப உச்சியை அடித்து உலுப்பியது.
அந்தரத்தில் பறக்க எனைக் கிளப்பியது
அத்தருணம் கொடும் இருளைக் கிழித்து
கிழக்கு மூலையில் பூத்தெழுந்தது ஓர் வால்
வெள்ளி
அந்த .... அதே வால் வெள்ளியின் அடிப்பாகத்தில்
வீற்றிருந்த எம் பெருமான் "ரூடோ" மூலிகையின்
வீரியத்தைப் பறைசாற்றி
அதனை சட்ட ஏற்றுகைப் பட்டியலில் இடுகிறேன்
என
மரபு சார் சடங்கு உடை மாந்தர்க்கு தெளிவுரை
ஆற்றலானார்



# கோவில்களில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள்?

கோவிலுக்குச்சென்றால் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று சில விதிமுறைகளை நம் முன்னோர்கள் வகுத்திருக்கிறார்கள். அவற்றில் சில:

1. நீராடாமல் கை கால்களை சுத்தம் செய்யாமல் செல்லக்கூடாது.
2. பகவானுக்கு நேர் எதிர் வழியில் செல்லாது பக்கத்து வழியில் செல்ல வேண்டும்.
3. விளக்கேற்றும் போதும், விளக்கில்லாத போதும், செல்லக்கூடாது.
4. புனித நீர்க்குடத்தை மூடாமலும், இறைவனின் நைவேத்தியத்தை மூடாமலும் வைக்கக்கூடாது.
5. வேறு காரியங்களுக்கு வாங்கிய பொருளை இறைவனுக்கு அர்பணிக்கக் கூடாது.
6. இறைவனின் மந்திர உபதேசம் பெறாமல் ஆராதனை செய்யக்கூடாது.
7. மணமில்லாத மலர்களை சமர்ப்பிக்க கூடாது.
8. கோவிலுள் குப்பை கொட்ட கூடாது.
9. கோவிலுள் ஓடுதல், சிரித்தல், அதிர்ந்து நடத்தல், சினந்து பேசுதல், தற்பெருமை பேசுதல், சமய ஏற்றத்தாழ்வு பேசுதல் கூடாது.
10. துளசியையும் மற்றைய பூக்களையும் நீர்கொண்டு அலம்பாமல் கோவிலுள் எடுத்துச் செல்ல கூடாது.
11. கோவிலுள் தீர்த்தம், சடாரி, துளசி, பிரசாதம் இவை பெறாமல் திரும்பக் கூடாது.
12. அர்ச்சகர்கள் தரும் குங்குமம் பிரசாதம் போன்றவற்றை கீழே சிந்தக் கூடாது. இறைவன் பிரசாதத்தை பிறர் கால்களில் படுமாறு கீழே போடுவது நல்லதல்ல.
13. ஆமணக்கு எண்ணையை திரியிட்டு கோவில்களில் விளக்கு ஏற்றக் கூடாது.

# இறைவனின் கட்டளைக்காகக் காத்திருந்த எம்பெருமானார்

அகபாவின் இரண்டாவது உடன்படிக்கைக்குப் பிறகு மக்காவில் முஸ்லிம்களில் நிலை மேலும் மோசமடைந்தது. ஒருவர் இஸ்லாமை ஏற்றுக் கொண்டார் என்று தெரிந்தாலே அவரைக் குறைஷிகள் துன்புறுத்தத் தொடங்கினர். இஸ்லாமை ஏற்றுக் கொண்டதோடு மட்டுமல்லாமல் நாடு துறந்து செல்கிறார்கள் என்று தெரிந்து கொண்டால் அவர்களைத் தடுத்து, குறைஷிகள் அவர்களுக்குப் பல கொடுமைகளை நிகழ்த்தினர்.

தங்களுடைய மார்க்கத்தைக் காப்பாற்றிக் கொள்ள மக்கள் தம் சொந்த மண்ணை விட்டு வெளியேறினர். போகுமிடத்தில் எதிர்கொள்ள வேண்டியவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இறைவனின் மீது நம்பிக்கை வைத்து, தாங்கள் சம்பாதித்த எல்லா உடைமைகளையும் விட்டுவிட்டு, சொந்த நாட்டைத் துறந்து சென்றனர்.

உமர் இப்னு கத்தாப் மற்றும் அய்யாஷ் இப்னு அபூ ரபீஆ இருவரும் மக்காவிலிருந்து வெளியேறி குபாவென்ற இடத்தில் தங்கியிருந்தனர். அதை அறிந்து கொண்ட இணை வைப்பாளரான அபூ ஜஹ்ல் அங்கு வந்து, தனது தாய் வழி சகோதரரான அய்யாஷிடம் "உன் தாய் உன்னைக் காணாமல் தவிக்கிறார். நீ வந்தால்தான் தன் தலை முடியைக் கட்டுவேன் என்று சபதமெடுத்துச் சத்தியம் செய்து, உன் வரவை எதிர்பார்த்து காத்திருக்கிறாள்" என்று கூறினார். அபூ ஜஹ்ல் சொன்னதை அப்படியே நம்பிய அய்யாஷ் தன்னைக் காணாமல் தவிக்கும் தாயிடம் திரும்பிச் செல்லத் தயாரானார். இதில் ஏதோ சதி திட்டமுள்ளது என்று உமர் (ரலி) அய்யாஷை எச்சரித்து தடுத்துப் பார்த்தார். ஆனால் அய்யாஷ், தன் தாய் மீதான பிரியத்தில் எதையும் சந்திக்கத் தயாரென்பது போல் அபூ ஜஹ்லுடன் சென்றுவிட்டார்.

போகும் வழியிலேயே அய்யாஷின் மீது அபூ ஜஹ்ல் பாய்ந்து, அவரைக் கட்டி வைத்து சித்தரவதைப்படுத்தினார். இணை வைக்கும் குறைஷிகள் அய்யாஷை மக்காவின் வீதிக்கு மீண்டும் கொண்டு வந்து "மக்களே, இஸ்லாமை ஏற்று 'ஹிஜ்ரா' அதாவது நாடு துறப்பவரின் நிலை இதுதான்" என்று மற்ற மக்காவாசிகளிடம் எச்சரிக்கை விடுத்தனர்.

அய்யாஷைப் போலவே ஹிஷாமும் குறைஷிகளின் பிடியில் சிக்கிக் கொண்டார். யாராவது ஹிஜ்ரா செய்கிறார் என்று தெரிந்தாலே அவர்களைப் பிடித்துத் துன்புறுத்தி வந்தனர் குறைஷிகள். இவ்வளவு தொந்தரவுகள் இருந்தும் முஸ்லிம்கள் ஒவ்வொருவராக நழுவி மதீனாவைச் சென்றடைந்தனர். இப்படியாக அகபாவின் இரண்டாவது உடன்படிக்கைக்குப் பிறகு பல முஸ்லிம்கள் மக்காவை விட்டு வெளியேறி மதீனாவிற்குச் சென்றனர். ஹபஷாவிற்குச் சென்றிருந்த முஸ்லிம்களும் மதீனாவிற்குத் திரும்பினர்.

உலகமெல்லாம் நபியவர்களைப் பொய்யர் எனக் கூறிய போது உண்மையாளர் என்று ஏற்றவர் அபூ பக்கர் (ரலி) அவர்கள். முஸ்லிம் சமுதாயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அபூ பக்கர் (ரலி) நேசித்த அளவுக்கு வேறு எவரும் நேசிக்க முடியாத அளவுக்கு நபியவர்களுக்கு நெருக்கமானவர். அதனால் அபூ பக்கர் ஹிஜ்ரா செய்யாமல் நபிகளாருடன் மக்காவில் இருந்தார்கள்.

இந்த நேசத்துடன் நெருக்கமான சொந்தமும் ஏற்பட வேண்டும் என்ற காரணத்தால் அபூ பக்கர்(ரலி), தம் மகள் ஆயிஷா (ரலி) அவர்களை மனமகிழ்வுடன் நபிகளாருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். நபி முஹம்மது (ஸல்) அவர்களுடன் அபூ பக்கர் (ரலி), அலீ (ரலி) மற்றும் சிலரே மக்காவில் இருந்தனர். அவர்களும் மக்காவைவிட்டு வெளியேற எல்லாத் தயாரிப்புகளுடனும் நபிகளாரின் கட்டளைக்காகக் காத்திருந்தனர்.

நபி (ஸல்) அவர்களும் ஹிஜ்ராவிற்குண்டான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்திருந்தார்கள்.

# இந்தவார ராசி பலன்கள்

## 07.05.2016 – 13.05.2016

மேஷம்: யோகாதிபதி சூரியன் உச்சமாக தொடர்வதால் முன்னேற்றமான பலன்கள் உண்டு. பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சியும், பணவரவும் உண்டு. பூர்வீகச் சொத்து சம்பந்தமாக நல்ல முடிவுகள் வரும். செவ்வாயின் பார்வை காரணமாக சுபவிஷயத்திற்கான அச்சாரம் போடுவீர்கள். புதனின் பார்வை காரணமாக அலைச்சல், பயணங்கள் இருக்கும். தாய்வழி உறவுகளால் செலவுகள் உண்டு. சுக்கிரன் சுப பலத்தில் இருப்பதால் இல்லறம் இனிக்கும். வீடு மாறுவதற்கான கால சூழ்நிலைகள் உள்ளது. தொழில், வியாபாரம் லாபகரமாக இருக்கும்.

ரிஷபம்: ராசியில் செவ்வாய் இருப்பதால் சாதக, பாதகங்கள் உண்டு. நண்பர்களிடையே அதிக நெருக்கம் வேண்டாம். கோவில் விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். சுக்கிரனின் பலம் காரணமாக ஏக்கங்கள், ஆசைகள் நிறைவேறும். பெண்கள் விரும்பிய ஆடை அணிகலன்களை வாங்கி மகிழ்வார்கள். பிள்ளைகள், பேரன், பேத்திகள் மூலம் மனவருத்தம் வந்து நீங்கும். சனியின் பார்வை காரணமாக கண், தொண்டை சம்பந்தமாக உபாதைகள் வரலாம். குடும்பத்தில் பழைய கதைகளை கிளறி சர்ச்சையை உண்டாக்க வேண்டாம். புதிய எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக் சாதனங்கள் வாங்குவீர்கள்.

மிதுனம்: ராசிநாதன் புதன் உச்ச சூரியனுடன் சேர்ந்து இருப்பதால் செல்வாக்கு, சொல்வாக்கு உயரும். சுக்கிரன் மூலம் பொன், பொருள் சேர்க்கை உண்டு. சுப விஷயமாக உறவினர் மூலம் நல்ல செய்தி வரும். தந்தையிடமிருந்து உதவி கிடைக்கும். சனியின் பார்வை காரணமாக திடீர் பயணங்கள் இருக்கும். தடைபட்ட கட்டிட வேலைகள் மீண்டும் தொடங்கும். கன்னிப் பெண்களின் ஆசைகள் நிறைவேறும். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய மருத்துவ ஆலோசனை பெறுவது நலம் தரும். வியாபாரம் சீராக இருக்கும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பார்த்த ஆர்டர் கைக்கு வந்து சேரும்.

கடகம்: சுக்கிரனின் அருள் காரணமாக ஆரோக்யம் நன்றாக இருக்கும். சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்புவார்கள். சூரியன் காரணமாக உத்யோகம் சாதகமாக இருக்கும். யோக தசை நடப்பவர்களுக்கு நான்கு சக்கர வண்டி வாங்கும் யோகம் உள்ளது. தாயார் உடல்நலம் காரணமாக மருத்துவச் செலவுகள் வரலாம். முடிந்தவரை உறவினர் விஷயங்களில் தலையிட வேண்டாம். நண்பர்களால் வீண் அலைச்சல், செலவுகள் உண்டு. தொழில் சாதகமாக இருக்கும். புதிய ஆர்டர்களை எதிர்பார்க்கலாம்.

சிம்மம்: குருவும், செவ்வாயும் நல்ல அமைப்பில் இருப்பதால் சங்கடங்கள் தீரும். புதிய முயற்சிகள் வெற்றியடையும். மகளின் கர்ப்ப சம்பந்தமாக இனிக்கும் செய்தி வரும். சுக்கிரனின் அருளால் விலையுயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். சனியின் பார்வை காரணமாக பயணத்தடை வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளால் மனவருத்தம் வந்து நீங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். புதன் பார்வை காரணமாக போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். கன்னிப் பெண்கள் வீண் பிடிவாதத்தை விட்டு விடுவது நல்லது. மனதிற்கு பிடித்த ஆலயங்களுக்குச் சென்று வருவீர்கள்.

கன்னி: புதனின் பலம் காரணமாக முயற்சிகள் வெற்றியடையும். சந்திரனின் சஞ்சாரம் காரணமாக திடீர் பயணங்கள் உண்டு. அலுவலகத்தில் உங்கள் கோரிக்கை நிறைவேறும். சுக்கிரனின் பலம் காரணமாக சுபநிகழ்ச்சிகளுக்கு அச்சாரம் போடுவீர்கள். குடும்பத்தைப் பிரிந்து வெளியூரில் இருந்தவர்கள் சொந்த ஊர் திரும்புவார்கள். மாமனார் உடல்நலம் பாதிக்கப்படலாம். புத்திர பாக்கியம் எதிர்பார்த்தவர்களுக்கு தித்திக்கும் செய்தி உண்டு. ஷேர் மற்றும் வட்டி வரவு மூலம் பணம் வரும். வியாபாரம் ஏற்றம் உண்டு. பணப்பிரச்னைகள் தீரும். வியாபார சம்பந்தமான பயணங்கள் லாபகரமாக இருக்கும்.

துலாம்: சுக்கிரன் உச்சத்தில் இருந்து ராசியை பார்ப்பதால் காரிய வெற்றி உண்டு. கன்னிப்பெண்கள் பெற்றோர்களின் பேச்சைக் கேட்பது மிகவும் அவசியம். கேது 5ல் தொடர்வதால் எதையாவது யோசித்துக் கொண்டே இருப்பீர்கள். கல்வி வகையில் செலவுகள் இருக்கும். சனிபகவானின் பார்வை காரணமாக பூர்வீகச் சொத்தில் நல்ல உடன்பாடு ஏற்படும். உத்யோகத்தில் வேலைச்சுமை, அலைச்சல், பயணங்கள் இருக்கும். வியாபாரம் கை கொடுக்கும். பண வரவு உண்டு. வேலையாட்கள் பிரச்னை சரியாகும்.



விருச்சிகம்: ராசிநாதன் செவ்வாயின் பார்வை காரணமாக கவலைகள் நீங்கும். பிள்ளைகள் திருமணம் சம்பந்தமாக முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். கேது 4ல் தொடர்வதால் அலைச்சல் இருக்கும். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய கவனத்துடன் இருப்பது அவசியம். சனியின் சஞ்சாரம் காரணமாக அவசியத்தேவைக்கு கடன் வாங்க நேரிடும். மனைவியின் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். பழைய வண்டியை மாற்றி புதுவண்டி வாங்குவீர்கள். வெளிமாநில புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

தனுசு: யோகாதிபதி செவ்வாயின் பார்வை காரணமாக எதையும் சமாளிப்பீர்கள். சூரியனின் அருள் காரணமாக திடீர் அதிர்ஷ்டம் உண்டு. தடைபட்ட கட்டிட வேலைகள் மீண்டும் தொடங்கும். சுக்கிரனின் பார்வை காரணமாக இடமாற்றத்திற்கு வாய்ப்புண்டு. தாயாரிடம் அனுசரணையாகப் போகவும். குழந்தைகள், பேரன், பேத்திகள் மூலம் செலவு இருக்கும். உத்யோகத்தில் சாதகமான காற்று வீசும். தொழில் சீராக இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். பணத்தட்டுப்பாடுகள் சரியாகும்.

மகரம்: சுகஸ்தானாதிபதி செவ்வாயின் பலம் காரணமாக மனசலனம் நீங்கும். நீங்கள் எதிர்பார்த்த செய்தி திங்கட்கிழமை வரும். சுக்கிரனின் சுபயோகம் காரணமாக சொத்து வாங்கும் பாக்கியம் உள்ளது. கணவன், மனைவி இடையே மனம் விட்டு பேசுவது நலம் தரும். சொந்த பந்தங்கள் விசேஷங்கள் காரணமாக செலவுகள் இருக்கும். நகை இரவல் கொடுப்பது, வாங்குவது இரண்டும் வேண்டாம். உத்யோகத்தில் சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைப்பதற்கு யோகம் உள்ளது. பிரசித்தி பெற்ற பரிகார ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

கும்பம்: புதன், உச்ச சூரியனுடன் சேர்ந்து சாதகமாக இருப்பதால் செல்வாக்கு உயரும். மாமன் வகை உறவுகளால் ஆதாயம் உண்டு. சொத்து வாங்குவது, விற்பது போன்றவற்றில் இருந்த தடைகள் நீங்கும். ராகு 7ல் தொடர்வதால் திடீர் பயணங்கள் உண்டு. குடும்ப சூழ்நிலைக்கேற்ப அனுசரித்துச் செல்லவும். உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்து நீங்கும். சுக்கிரன் வலுவாக இருப்பதால் கைமாத்து கொடுத்த பணம் வசூலாகும். உத்யோக சூழல் சாதகமாக இருக்கும். சம்பள உயர்வுடன் நீங்கள் விரும்பிய இடத்திற்கு மாற்றல் கிடைக்கும்.

மீனம்: செவ்வாயின் பார்வை யோகம் காரணமாக வருமானம் உயரும். கொடுக்கல், வாங்கல் சாதகமாக இருக்கும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். சுக்கிரன் ராசியில் தொடர்வதால் மனோதைரியம் கூடும். இல்லறம் இனிக்கும். பெண்கள் விரும்பிய ஆடை, அணிகலன்கள் வாங்குவார்கள். அநாவசிய செலவுகள் உண்டாகும். பிள்ளைகள் மூலம் ஏற்படும் சிறு சிறு வாக்குவாதங்களை பெரிதுபடுத்த வேண்டாம். உத்யோகத்தில் வேலைச்சுமை வந்து நீங்கும். வியாபாரம் சீராக இருக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். வேலையாட்களிடம் அதிகார தோரணையை தவிர்க்கவும்.

# தண்ணீர் பவுசர் ஓடிய பிரபாகரனின் மகள் துவாரகா!

## இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 28

பீஷ்மர்

விடுதலைப்புலிகளின் புலனாய்வு பிரிவின் பொறுப்பாளராக பொட்டம்மான் இருந்தார். புலிகளின் புலனாய்வுத்துறை பல பிரிவுகளாக விஸ்பரூபம் எடுத்திருந்தது. அவற்றை நிர்வகிப்பதுடன், புலிகளின் இரண்டாவது தலைவர் என்ற உத்தியோகப்பற்றற்ற பொறுப்பும் பொட்டம்மானிடம் இருந்தது. இதனால் அவரின் கீழ்செயற்பட்டவர்களை சற்று சுயாதீனமாக செயற்படும் விதமான பொறுப்புக்களை வழங்கினார் பிரபாகரன்.

இதை பிழையாக பயன்படுத்தினார் காந்தி. புலிகளின் உள்ளக புலனாய்வு பொறுப்பாளராக இருந்த காந்தியின் செயற்பாடுகள், எப்படி அவரது வீழ்ச்சி அமைந்தது என்பதை இந்த பகுதியின் பின்பகுதிகளில் பார்க்கலாம்.

உள்ளகப்புலனாய்வு பிரிவின் பொறுப்பு வன்னியை பாதுகாப்பது. வன்னிக்குள் நுழையும் புலனாய்வு செயற்பாட்டாளர்களை அடையாளம் காண்டு கைது செய்வது, முகவர்களை கைது செய்வது, வன்னிக்குள் நடக்கும் தாக்குதல்களை முறியடிப்பது, பாஸ் நடைமுறை, சிறைச்சாலை, விசாரணை என புலனாய்வுதுறையின் மிக முக்கிய செயற்பாடுகளை கையாண்டது.


பிரபாகரன் தம்பதி, துவாரகா, பாலசந்திரன்

பால்ராஜ் தனது பொறுப்பில் ஒப்படைக் கப்பட போகிறார் என்ற அறிவித்தல் வந்ததும், காந்தி ஒரு அதிர்ச்சி காரியம் செய்தார். முகாமின் அலுவலகம் இருந்த பகுதிக்கு அண்மையாக இரண்டு சிறையறைகள் கட்டினார். சீமெந்தால் ஆன அவை, பத்து அடி நீளமும், ஆறு அடி அகலமுமானது. அதற்குள்ளேயே மலசலகூடமும் அமைக்கப்பட்டிருந்தது.

இதற்கான கணக்கு விபரம் புலனாய்வு துறை நிர்வாக பகுதிக்கு அனுப்பப்பட்ட போது, பொட்டம்மானின் கவனத்திற்கு விடயம் போனது. அவர் உடனடியாக பிரபாகரனின் கவனத்திற்கு விடயத்தை கொண்டு சென்றார். பிரபாகரனிற்கு கோபம் வந்துவிட்டது. பிறகு காந்தியை அழைத்து கடுமையாக பேசி, அந்த கவுன்சிலிங்கை சிறைச்சாலைக்கு சற்று தொலைவில் இருந்த வீட்டில் வைத்து செய்ய வைத்தார்.


பிரபாகரனின் மனைவி மதிவதனி

இதன்பின் பால்ராஜூடன் வரதாவை இணைந்து வாழவைக்கலாம் என சில மூத்த போராளிகள் முயன்றனர். எனினும், வரதா மனரீதியாக அழமாக காயமடைந் திருந்தார். பால்ராஜ் தனது வாழ்க்கையில் மீண்டும் வருவது பற்றி அவரால் கற்பனை செய்ய முடியவில்லை. மீண்டும் வரதாவுடன் இணைவது குறித்து பால்ராஜ் எப்படியான நிலைப்பாட்டில் இருந்தார் என்பதை இந்த கட்டுரையாளரால் உறுதி செய்ய முடியவில்லை. அதனால் இந்த விவகாரத்தை இத்துடன் முடித்து கொள்ளலாம்.

நடந்த விவகாரங்கள் பால்ராஜை பெருமளவு பாதித்து விட்டது. உடல்ரீதி யாகவும், மனரீதியாகவும் அவர் பாதிக்கப் பட்டிருந்தார். நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற உடல் பிரச்சனைகளால் பாதிக்கப் பட்டிருந்தார். அதற்காக தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். எனினும், அவர் உடலில் அக்கன்ற கொள்ளவில்லை. மருத்துவ சிகிச்சை பெற்றாலும் மாத்திரை களை சீராக பாவிப்பதில்லை, உணவுக் கட்டுப்பாடு இல்லையென வைத்தியர்கள் முணுமுணுத்தார்கள்.

உடல்நிலை மோசமாகி சில தடவை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டி ருந்தார். எங்கிருந்தாலும், என்ன உடல் நிலையிலிருந்தாலும் போராட்டம் பற்றியே அவர் சிந்தித்து கொண்டிருந்தார். இதற்கு ஒரு சுவாரஸ்யமான உதாரணம் உள்ளது.

விடுதலைப்புலிகள் சுயநிர்ணய உரிமை பற்றி பேச ஆரம்பித்த சமயம். அன்ரன் பாலசிங்கம் வன்னிக்கு வரும் சமயங்களில் உள்ளக சுயநிர்ணயம், வெளியக சுயநிர்ணயம் பற்றி போராளிகளிற்கு வகுப்பெடுப்பார். அப்படியான ஒரு வகுப்பு குறிப்பிட்ட படையணிக்கு நடந்தது. அப்போது புதுக்குடியிருப்பில் இருந்த பொன்னம்பலம் வைத்தியசாலையில் பால்ராஜ் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்த பிரிவின் போராளிகள் சிலர் பால்ராஜை பார்க்க வைத்தியசாலைக்கு சென்றனர். உடல்நலமில்லாத பால்ராஜ் நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டிருப்பார் என்று தான் போன போராளிகள் நினைத்தனர்.

அவர்கள் போனபோது சிறிய குறிப்பு புத்தகத்தில் எதையோ குறித்தபடியிருந் தார். வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த காலத்திலும் புதுபுது யோசனை களை குறிப்பு புத்தகங்களில் எழுதியபடிதான் இருப்பார். செய்திகளை கவனித்து அமைப்பு செய்ய வேண்டிய நடவடிக்கைகளையும் குறித்து வைப்பார். இந்த போராளிகள் போனதும், சாதாரண சிரிப்புடன் வரவேற்ற பால்ராஜ், அவர்களை உட்காரச் சொல்லிவிட்டு, தலைமாட்டில் இருந்த ஒரு குறிப்பு புத்தகமொன்றை எடுத்து, உள்ளக சுயாட்சி பற்றி அவர்களிற்கு நடந்த வகுப்பை விமர்சிக்க ஆரம்பித்தார். பால்ராஜைஅறிந்தவர்களிற்கு தெரியும், அவரது பேச்சு பாணி. ஊரில் கிரந்தம் கதைப்பது என்பார்கள். அதை அவர் அடிக்கடி பாவிப்பார்.

“ம்ஞ் உள்ளக சுயநிர்ணம் பற்றியெல்லாம் கதைக்கிறியளாம்.. ம்.. இனியென்ன நீங்கள் எல்லாரும் உள்ளக சுயநிர்ணய உரிமையை எடுத்து சுதந்திரமாக இருக்கப்போறியள். இயக்கமும் ஆரம்பத்திலயிருந்து உள்ளக சுயநிர்ணயத்தைதானே கேட்டது. மாவீரர் எல்லாரும் அதுக்காகத்தானே வீரச்சாவடைந்தவை” என ஆரம்பித்து ஒரு கட்டத்தில் கோபத்துடன் சொன்னார் “இவையெல்லாம் என்ன விளையாடிக் கொண்டிருக்கினம். உள்ளக சுயாட்சி எடுக்கிறதுக்காகவா இத்தனை ஆயிரம் பொடியளை களத்தில சாகக் குடுத்தனான்“ என. இதை சொன்னபோது அவர் முகம் சிவந்து போயிருந்தது.

கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் அந்த போராளிகள் பால்ராஜூடன் இருந்தனர். இடையில் அவர்கள் வாய்திறந்து, உடம்பு எப்படி என ஒரு வார்த்தை கேட்க முடியவில்லை. பால்ராஜே பொரிந்து தள்ளினார். இதுதான் பால்ராஜின் இயல்பு.

ஆனால் துரதிஷ்டவசமாக அவரது திருமண பிரச்சனை பிரபாகரனுடனான உறவை சிதைத்துவிட்டது. தனிப்பட்ட வாழ்க்கைநெறி பிரதானமானதென நினைப்பவர் பிரபாகரன். தனிப்பட்ட வாழ்க்கையில் பிரச்சனையுடையவர்கள் யாருமே எந்தக்காலத்திலும் பிரபாகர னிற்கு அருகில் இருந்ததில்லை. அவரது இயக்க வாழ்க்கையின் ஆரம்பத்தில் உமாமகேஸ்வரனுடன் ஏற்பட்ட முரண் பாடும் இதுதான். உமாமகேஸ்வரனின் காதலை பிரச்சனையானதாக கருதினார். அதனால் உமாவை விட்டு விலகினார்.

மரபான விவகாரங்களில் பெரும் உடைப்பை செய்வதில் பிரபாகரனிற்கு உடன்பாடில்லை. குறிப்பாக திருமணம். அது ஒரு புனிதமான உறவு என்பதே அவரது நிலைப்பாடு. புலிகளின் முக்கியஸ்தராக இருந்தவர் தினேஷ் மாஸ்ரர். போர்ப்பயிற்சி ஆசிரியர்களை தயார் செய்வது, திட்டமிடுதல் போன்ற வற்றில் பொறுப்பானவராக இருந்தவர். அவரது திருமண வாழ்க்கை சீராக அமைய வில்லை. மகளிர் தளபதியாக இருந்த ஜானகியை திருமணம் செய்தார். இருவருக்குமிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்துவிட்டனர். ஜானகிக்கும் பிரபாகரனின் மனைவி மதிவதனிக்கு மிடையில் நெருக்கமான நட்பிருந்தது. இருவரையும் இணைத்து வைக்க பிரபாகரன் முயற்சித்தார். இப்படியான சமரச முயற்சிகளை பிரபாகரன் செய்த தாக இதற்கு முன் தகவல் இல்லை. ஜானகிக்கும் மதிவதனிக்கும் இடையில் இருந்த நெருக்கம் அதற்கு காரணமாக இருந்திருக்கலாம்.

ஆனால் அந்த சமரச முயற்சி வெற்றி பெறவில்லை. பிரபாகரன் அதற்கு பின்னர் தினேஷ் மாஸ்ரரை முக்கிய பொறுப்புக் களில் நியமித்ததுமில்லை, சந்தித்தது மில்லை.

பிரபாகரனின் இந்த இயல்பை பார்த்து, அவர் பழமைவாத சிந்தனை கொண்டவர் என யாராவது தவறாக சிந்திக்ககூடாது. பெண்களை உயர்வாக மதித்தார், தாழ்வாக மதித்தார் என்ற பேச்சிற்கே இடமில்லாமல், பெண்களை மனிதர்களாக மதித்தார். அவர்களின் வாழ்க்கையை அவர்களே தீர்மானிக்க வேண்டுமென்பதே பிரபாகரனின் நிலைப்பாடு. குடும்பம் என்ற அமைப்பிற்குள் இருவரும் இணைந்தால் பிரியக்கூடாதென நினைத்தாலும், தமக்கான எல்லையை மனைவிகளே தீர்மானிக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தார். அதுபோல மகள் துவாரகாவின் வாழ்க்கையிலும் தலையிட்டதில்லை.

இதற்கு ஒரு உதாரணம். 2007 இல் கிளிநொச்சியில் ஒரு ஆசிரியையிடம் பரதநாட்டியம் கற்றுக்கொள்ள ஆரம்பித் தார் துவாரகா. அதேநேரத்தில் புதுக்குடி யிருப்பில் இருந்த சோதியா படையணி போராளிகளிடம் 240 ட்ரக்ரர் ஓட்டி பழகினார். ட்ரக்ரர் ஓட்டி பழகியதும், அந்தபகுதியிலுள்ள முகாம் ஒன்றிற்கான தண்ணீர் பவுசரை அந்த ட்ரக்ரரில் கொழுவி. தானே ஓட்டிச் செல்வார். ட்ரக்ரர் ஓட்டுவதில் அவருக்கு அலாதி பிரியம் இருந்தது. (தொடரும்)



# அந்த விசயத்திலும் கொஞ்சம் பார்த்து நடவுங்கள்!

மிக அதிக ஆர்வத்தோடு செக்ஸில் ஈடுபடுபவர்களுக்கும் ஒரு கட்டத்தில் அதன் மேல் எந்த ஆர்வமும் இல்லாமல் போய்விடும். சிலருக்கு உடல்ரீதியாகவும், சிலருக்கு மனரீதியாகவும் ஆர்வம் குறைந்துவிடும். இந்தப் பிரச்னைக்கு `Sexual burnout condition' என்று பெயர்.

ஏதாவது ஒரு விஷயத்தில் அதீத ஆர்வமும், அதிக ஈடுபாடும் கொண்டிருந்தால் காலப்போக்கில் அதன் மீது சலிப்பு வந்துவிடும். இதை `Emotional fatique' என்று சொல்வோம். தாம்பத்திய உறவு என்பதே பாலியல் கவர்ச்சி சார்ந்துதான் இருக்கிறது. இந்தப் பிரச்சனை உள்ளவர்களுக்கு செக்ஸ் ஆர்வம் குறையும் போது, மனைவியின் மீதான அன்பும் குறைய ஆரம்பிக்கும்.


மனைவி சிறிய தவறு செய்தால் கூட அதை பெரிய விஷயமாக்கி சண்டை போடுவார்கள். மனைவியிடம் இருந்து தன்னை வலுக்கட்டாயமாக தனிமைப்படுத்திக் கொள்வார்கள். இந்தப் பிரச்சனையை எப்படி சமாளிப்பது? முதலில் ஆண்கள் விஷயத்தை புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உறவுக்கு சில நாட்கள் ஓய்வு கொடுக்கலாம். செக்ஸ் தவிர மனைவியிடம் சந்தோஷமாக இருக்க ஏராளமான விஷயங்கள் உள்ளன. மனநிலையை ரிலாக்ஸ் ஆக வைத்துக் கொள்ளுங்கள். சில நாட்கள் இவ்வித கட்டுப்பாட்டுடன் இருந்தால், இயல்பாகவே செக்ஸ் ஆசையானது ஒருநாள் கிளர்ந்தெழும்.

அதனால் கவலைப்பட தேவையில்லை. மனைவியும் இந்தப் பிரச்சனை கணவனிடம் இருப்பதை புரிந்து கொள்ள வேண்டும். இப்படியான நேரங்களில் கணவனை கட்டாயப்படுத்தக் கூடாது. ஆதரவாக செயல்பட வேண்டும். இந்த விஷயத்தில் விடும் சிறிய இடைவெளியானது, தாம்பத்திய உறவை பெரிய அளவில் பலப்படுத்தும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்பது போலத்தான் செக்ஸ் உறவும் அளவுக்கு அதிகமானால் சலித்து விடும். செக்ஸ் என்பது வெறும் உடல் சார்ந்த விஷயம் மட்டுமல்ல... மனமும் சார்ந்தது!





# உள்ளம் கவரும் டெம்பிள் ஜிமிக்கி



நவீன காலத்தில் நங்கையர் அணிகின்ற ஜிமிக்கி நகைகள் விதவிதமான டிசைன்களில் அணிவகுக்கின்றன. ஒவ்வொருவரும் தனக்கான ஜிமிக்கி தேர்ந்தெடுப்பதற்கு என அதிகம் மெனக்கெட வேண்டியது உள்ளது. ஏனெனில், ஒவ்வொரு ஜிமிக்கி கண்ணை கவரும் அற்புத டிசைன்.

### பல அடுக்குகளில் தொங்கும் ஜிமிக்கிகள் :

ஜிமிக்கி எனும்போது ஒரு கூடை அமைப்பு தொங்க விடப்படும். தற்போது அடுக்குகள் கொண் கூடை அமைப்பில் இரண்டு, மூன்று, நான்கு என கீழிறங்க இறங்க கூடை அமைப்பு சிறியதாக மாறி அதற்கும் கீழ் சிற மணி உருனை நடனமாடும்.

இதற்கு அடுத்து சிறு கோயில் மணிகள் அமைப்பில் அடுக்கடுக்காய் தொங்கவிடப்பட்டும் ஜிமிக்கி வருகின்றன.

அத்துடன் ஓசையெழுப்பும் மணி அமைப்பில் சற்று பெரியதாய் நடுவில் பந்து மணி உருளைகள் ஆடும் அமைப்பில் தொங்க விடப்பட்டிருக்கும்.

### பழங்கால தங்க நாணய அமைப்பு ஜிமிக்கிகள்:

இவை சற்று வித்தியாசமான அமைப்பில் உருவாகின்றன. காதுடன் பொருந்தும் மேல் பகுதி பழங்கால தங்க நாணய முத்திரை போன்று அச்சு அமைப்பில் அன்னம், மயில் உருவம் பதித்ததாய் இருக்கும். தொங்கும் குடை அமைப்பு ஏதும் டிசைன்கள் செய்யப்படாது வழவழப்பான குடை அமைப்பில் இருக்கும். அதன் கீழ் வண்ண மணிகள் ஓரப்பகுதி முழுவதும் தொங்க விடப்படும். இது, நவீனம் புகுத்தப்பட்ட பழங்கால ஜிமிக்கி வடிவமைப்பு.

### நீள் தோரண அமைப்பில் தொடங்கும் ஜிமிக்கிகள்:

குடை அமைப்புகள் இன்றி நீள் தோரண அமைப்பில் சில பூக்கள் வரிசையாய் தொங்க விடப்பட்டு நடுவில் மணியும், பியர் வடிவில் தோரணமும் அதன் கீழ் டிசைன் மணிகள் தொங்கவிடப்பட்டும், இதய வடிவில் நடுப்பகுதி அதற்கு கீழ் சிறு கூடை அமைப்பு தொங்குவது போன்றும் ஜிமிக்கிகள் வருகின்றன.

### அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த டெம்பிள் ஜிமிக்கிகள்:

பாரம்பரிய கோயில் சின்னங்கள் கலை நேர்த்தியுடன் செதுக்கப்பட்ட ஜிமிக்கிகள் வருகின்றன. இவை பாரம்பரியமும், கலாசார பின்னணி கொண்ட பொக்கிஷங்களாக உள்ளன. இதில் மகாலட்சுமி, யாளி, அன்னபட்சி, யானையுடன் மகாலட்சுமி, மயில் போன்றவை அழகுடன் செதுக்கப்பட்டுள்ளது. சில அன்ன பட்சிகள் தத்ரூபமாக தங்கத்தில் உருப்பெற்றும் உள்ளன. தொங்கும் மீன் அமைப்பு ஜிமிக்கிகள் ஆன்டிக் நகைகளாய் அணிவகுக்கின்றன.

இவை மட்டுமின்றி கோன் அமைப்பு, திராட்சை கொத்து அமைப்பு, சரவிளக்கு, தொங்கும் செயின் அமைப்பு என பல புதுமை வடிவங்களும் நாளுக்கு நாள் மக்களை புதிய ஜிமிக்கி வாங்க ஆர்வத்தை தூண்டுகின்றன.



# ஃபிரிட்ஜ் பராமரிப்பு!

- ஃபிரிட்ஜை காற்றோட்டம் உள்ள அறையில் மட்டுமே வைக்க வேண்டும். ஃபிரிட்ஜின் உள்ளே குறைந்த பொருட்களை வைத்தால் மின்சாரம் குறைவு என்பது தவறான கருத்தாகும்.
- ஃபிரிட்ஜில் உணவுப் பொருட்களை சூட்டோடு வைக்காமல் குளிர்ந்தபின் தான் வைக்க வேண்டும்.
- வாழைப் பழத்தை எக்காரணம் கொண்டும் ஃபிரிட்ஜில் வைக்கக் கூடாது.
- பொரித்த பப்படம், சிப்ஸ், பிஸ்கட் போன்றவை அதிகநாட்கள் மொறு மொறுப்பாக இருக்க வேண்டுமானால் அவற்றை ஒரு பாலிதீன் கவரில் போட்டு ஃபிரிட்ஜில் வைக்க வேண்டும்.
- ஃபிரிட்ஜின் உட்பகுதியை சுத்தம் செய்யும்போது கண்டிப்பாக சோப்புகளை உபயோகப்படுத்தக் கூடாது. இது, உட்சுவர்களை உடைக்கும். மாறாக சோடா உப்பு கலந்த வெந்நீரை உபயோகிக்கலாம்.
- ஃபிரிட்ஜின் பின்பக்கம் உள்ள கம்பி வலைகள் சுவரை ஒட்டி இருக்கக் கூடாது. அந்த வலையில் தண்ணீர் பட்க் கூடாது. ஃபிரிட்ஜின் பின்புறம் படியும் ஒட்டடையை மெதுவாக தென்னந் துடைப்பம் மூலம் அகற்ற வேண்டும்.
- ஃபிரிட்ஜை சமையலறையில் வைக்கக் கூடாது. புகைப்பட்டு ஃபிரிட்ஜின் நிறம் சீக்கிரத்தில் மங்கிவிடும்.
- ஃபிரிட்ஜின் காய்கறி ட்ரேயின் மீது ஒரு கெட்டித் துணி விரித்து பச்சைக் காய்கறிகளைப் பாதுகாத்தால் வெகு நாள் காய்கறிகள் அழுகிப் போகாமல் இருக்கும்.
- ஃபிரிட்ஜுக்கு கண்டிப்பாக நில இணைப்புகள் (Earth) கொடுக்க வேண்டும்.
- ஃபிரிட்ஜிலிருந்து துர்நாற்றம் வீசாமல் இருக்க அதனுள் எப்போதும் சிறிது புதினா இலையோ, அடுப்புக் கரித் துண்டுகளையோ அல்லது சாறு பிழிந்த எலுமிச்சம் பழ தோலையோ போட்டு வைக்கலாம்.
- அதிக ஸ்டார்கள் உள்ள ஃபிரிட்ஜை வாங்கினால் மின்சாரத்தை அதிக அளவு மிச்சப்படுத்தலாம்.

# சுத்தமான தேனை கண்டறிய எளிய வழிமுறை



**ஒன்று:** கண்ணாடி டம்ளரில் நிறைய தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் ஒரு சொட்டு தேனை விடவும். அது கரையாமல் கலங்காமல் அப்படியே அடியில் சென்று படிந்தால் ஒரிஜினலாம்.

**இரண்டு:** எவ்வளவு நாள் இருந்தாலும் எறும்பு மொய்க்காதாம்.

**மூன்று:** ஒரு சிறிய துண்டு நியூஸ் பேப்பரை எடுத்து அதன்மேல் இரண்டு சொட்டுத் தேனைவிட்டால் அது பேப்பரின் பின்புறம் ஊறி கசியாமல் இருந்தால் சுத்தமான தேனாம்.

**நான்கு:** பார்ப்பதற்கு தூய செந்நிறமாக இல்லாமல் சற்று இளமஞ்சள் நிறத்தில் இருக்கும். சிறிது தொட்டு நக்கினால் தித்திப்பு நாக்கில் நீண்ட நேரம் இருக்காது. கூடவே சுவைத்த பின் மஞ்சள், சிவப்பு என்று எந்தக் கலரும் நாக்கில் ஒட்டியிருக்காது!

இந்த நான்கு முறையுமே நல்ல தேனைக் கண்டுபிடிக்க நடைமுறைக்கு ஒத்துவரவில்லை என்றால், தூய தேனைக் கண்டுபிடிக்க இன்னுமொரு சோதனை முறை உண்டு:

1. நல்ல மணலில் ஓரிரு சொட்டு தேனை விடவும்.
2. ஒரு நிமிடம் காத்திருக்கவும்.
3. குனிந்து தேனை வாயால் ஊதவும்.

தேன் மட்டும் உருண்டோடினால் அது தூய தேனாம். மணலின் உள்ளே இறங்கி விடுவது போலி/கலப்படம்!

**தேன் மகிமை:** உடல் மெலிந்தவர்கள் தேனில் பேரீச்சம்பழத்தை ஊற வைத்து தினமும் சாப்பிட்டு வந்தால் சதை பிடிக்கும். அல்சர் நோய் குணமாக தினமும் சாப்பாட்டிற்கு முன் இரண்டு கரண்டி தேனைச் சாப்பிட்டு வர வேண்டும். அரை அவுன்ஸ் தேனுடன் அரை அவுன்ஸ் இஞ்சிச்சாறு கலந்து காலை நேரங்களில் தொடர்ந்து சாப்பிட்டு வர ரத்த சுத்தியும், ரத்த விருத்தியும் ஏற்படும்.

நரம்புத்தளர்ச்சியும் நீங்கி விடும். என்றும் இளமையுடன் இருக்க வேண்டுமென விரும்புபவர்கள் தினமும் தேனை அருந்த வேண்டும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்கள் தினசரி ஒரு ஸ்பூன் தேன் சாப்பிடலாம். தேனுடன் எலுமிச்சம் பழச்சாறு கலந்து அருந்தினால் வாந்தி, குமட்டல், ஜலதோஷம், தலைவலி குணமாகும். தேனும், முட்டையும், பாலும் கலந்து சாப்பிட்டு வந்தால் ஆஸ்துமா உபாதையிலிருந்து தப்பிக்கலாம். தேனும், வெந்நீரும் கலந்து அருந்தினால் பருத்த உடல் மெலியும்.

ஊளைச்சதை குறையும். உடல் உறுதி அடையும். சூடான நீரில் ஒரு தேக்கரண்டி இஞ்சிச்சாறு, எலுமிச்சைச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்தீர்களானால் நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், தும்மல் போன்றவற்றுக்கு நிவாரணம் அளிக்கும் மருந்து ரெடி. அடிக்கடி சளி பிடித்தால் இளஞ்சூடான பாலில் சிறிது மஞ்சள் தூள், ஒரு ஸ்பூன் தேன் கலந்து தினமும் பருகி வர நல்ல பலன் தெரியும். உடல் மெலிந்தவர்கள் தினமும் பாலில் தேன் கலந்து சாப்பிட்டு வர உடல்வாகு சீராகும்.



# மாதவிடாய் காலத்தில் தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டும்

பெண்கள் பொதுவாக வயதுக்கு வருவதை ஏதோ என்று நினைத்து தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு உடம்பும், மனதும் வேறுபட்டு காணப்படும். பெண்கள் வயதுக்கு வருவது தொடர்பாக நீங்கள் அனைவரும் இந்த வயதில் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பிறர் நம்மை தொடுவதில் நல்ல தொடுதல், கெட்ட தொடுதல் எது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். உறவினர்கள் யாரேனும் தவறான தொடுதல் செய்தால் அதனை ஆசிரியரிடமோ அல்லது அம்மாவிடமோ அவசியம் சொல்ல வேண்டும். பெண்கள் பருவமடையும்போது சில உடல் உறுப்புகள் வளர்ச்சி அடையும்.

உடலில் சில இடங்களில் உரோமங்கள் அதிகமாகும். இவற்றை கண்டு பயம் வேண்டாம். இது தானாக இயற்கையில் வளர்ச்சி அடையும்போது நடைபெறுபவை ஆகும். இதற்காக பயம் வேண்டாம். பெண்களுக்கு மாதவிடாய் காலங்களில் தேவையில்லாத சிந்தனைகள், தலைவலி வரலாம். யாரை பார்த்தாலும் கோபம் கூட சமயங்களில் அதிகமாக வரலாம்.

கெட்ட எண்ணங்கள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. இது போன்ற சமயங்களில் தண்ணீர் அதிகமாக எடுத்து கொள்ள வேண்டும். தண்ணீர் அதிகமாக குடித்தால் உடல் நலம் ஓரளவு உங்கள் கட்டுக்குள் வரும். தண்ணீர் அதிகம் குடித்தால் மாதவிடாய் காலங்களில் பல்வேறு நோய் தொற்றுகளை சரி செய்து கொள்ளலாம்.



# 'பின்னால்' மாற்றும் தேவையா?

உங்களுடைய பின் பகுதி மிகவும் பெரிதாக உள்ளது என்று கவலைபடுகின்றீர்களா? இதை சரி செய்ய பல வழிகள் உள்ளன. அதை தினந்தோறும் செய்யும் போது நிச்சயம் குறையும். கீழ் இடுப்பை குறைக்கும் உடற்பயிற்சிகளை நாம் தினமும் செய்ய வேண்டியது அவசியம். இதை செய்வதால் தசைகள் வலுவடைந்து நம்மை நல்ல வடிவத்திற்கும் கொண்டு வருகின்றன.


**ஸ்டெப்அப்ஸ் (Step-ups)** - படியில் ஏறி இறங்குவதுதான் இந்த பயிற்சியாகும். ஏறி ஏறி இறங்கும் போது அங்குள்ள தசைகள் குறைய துவங்குகின்றது.

**ஸ்குவார்ட்ஸ் (Squats)**- இதனால் உடம்பில் உள்ள ஒவ்வொருதசையின் பகுதியையும் வேலை செய்ய வைக்கிறோம். இது ஒரு சிறந்த அழகை உங்களுக்குகொண்டுவரும். இப்படிப்பட்ட அழகை தினசரி இரண்டு அல்லது மூன்று முறையாவது பயிற்சி செய்து தான் பெற முடியும்.

**ஓடுதல் (Running)**- மிக கடினமாக உடற்பயிற்சிகளை செய்ய விரும்பாதவர்கள் ஓடும் பயிற்சியை செய்ய முயற்சிக்கலாம். ஓடுவது கீழ் இடுப்பிற்கு ஒரு நல்ல பயிற்சியாகும் அது மட்டுமில்லாமல் மிக சிறந்த வகையில் உடலை டோனிங் செய்யவும் முடிகின்றது. மற்ற பயிற்சிகளை காட்டிலும் ஓடும் போது நிறைய கலோரிகள் குறைக்கப்படுகின்றன. இது கீழ் இடுப்பு மட்டுமில்லாமல் தொடைகளையும் குறைக்க உதவுகிறது. ஸ்டேடியம் அல்லது பார்க் ஆகிய இடங்களுக்கு சென்று ஓடும் பயிற்சியை செய்து வரலாம். அல்லது வீட்டில் டிரெட் மில் வாங்கி பயன்படுத்தலாம். அரை மணி நேர பயிற்சி 'பின்னால்' பெரும் மாற்றங்களை கொண்டு வரும்.

**லாஞ்சஸ் (Lunges)**- கால்களை விரித்து நடப்பதை போல் வைத்து எவ்வளவு விரித்து வைக்க முடியுமோ அவ்வளவு தூரம் விரித்து பின்னர் உட்காருவதை போல் ஒரு நிலைக்கு வர வேண்டும். இதை திரும்பத் திரும்ப ஒவ்வொரு காலுக்கும் செய்ய வேண்டும். இந்த பயிற்சியை செய்யும் போது பின் பகுதி குறைய நீங்கள் எடுக்கும் முயற்சி பலன் தருவதை நீங்களே உணருவீர்கள். இதை திரும்பத் திரும்ப பல செட்டுகளாக செய்தால் உங்களுக்கு வித்தியாசம் தெரிய வரும்.

**பட் ஸ்குவீசஸ் (Butt squeezes)**- பட் ஸ்குவீசர் பந்தை எடுத்து தினமும் அதில் பயிற்சி செய்வது அங்குள்ள கலோரிகளை குறைக்க உதவும். இது உடம்பின் கீழ் பகுதியை பயிற்சி செய்ய வைத்து குறைக்கும். தினமும் சிறிது நேரம் இப்பயிற்சியை மேற்கொண்டு வந்தால் மிகுந்த பலனை தரும். அது மட்டுமில்லாமல் சில நாட்களில் நீங்கள் நினைத்த அழகையும் பெற முடியும். மேல் கூறிய முறைகளைத் தவிர ஹைக்கிங், சைட் ஸ்டெப் ஸ்குவாட், ரிவர்ஸ் லாஞ்சஸ், ஒன்லெக்டு டெட்லிப்ஃட்ஸ் என பல்வேறு வகை முறைகளும் உண்டு. இவற்றில் ஏதேனும் ஒன்றையோ அல்லது பல வழிமுறைகளையோ பின்பற்றி உங்களுக்கேற்ற அமைப்பை பெற்றுக் கொள்ள முடியும்.





# கிளிட்டோரிஸ் : ஆபிரிக்காவிலிருந்து ஆசியா வரை..

ஸர்மிளா செய்யித்

பிறப்புறுப்புச் சிதைக்கப்பட்டு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் 200 மில்லியன் சிறுமிகள் மற்றும் பெண்களில் ஒருத்தி, பண்பாட்டுப் பழக்கம்இன்னும் புழக்கத்தில் இருக்கின்ற சமூகமொன்றினது உறுப்பினள் போன்ற இன்னும் என்னவாறான தகைமைகள் இதைப்பற்றிப் பேசுவதற்குத்தேவைப்படலாம்?

பெண் பிறப்பு உறுப்புச் சிதைப்பு (Female Genital Mutilation - FGM), பெண் விருத்தசேதனம் (Female Circumcision) ஆகிய சொல்லாடல்கள் சில ஆண்கள், மதவாதிகள், சமூக கலாசாரக் காவலர்களுக்கு அலர்ஜியாக இருக்கலாம். இன ஒடுக்குதல்களாலும், வறுமையினாலும் உழன்று கொண்டிருக்கும் ஆபிரிக்க மக்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்ட சாபம் என்பதாக இந்தக் கொடுமை பற்றி மனச்சாட்சியே இல்லாத அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆப்பிரிக்காவிலும் முஸ்லிம்கள் அல்லாத பழங்குடியினர்கள் மத்தியில் மட்டும்தான் இந்தப் பண்பாடு இருக்கின்றதென்பதாக மானிடத்திற்கு எதிரான அவர்களது மனங்கள் அமைதி கொள்ளலாம். இவர்கள் தங்களது சொந்தவீட்டுக்குள்ளும் அயலிலும் நடக்கின்ற மாபெரும் அநீதியைப் பற்றியஅக்கறையற்றவர்களாக இருந்துகொண்டு மதத்திலிருந்து 'ஆகுமாக்கப்பட்ட' ஆதாரங்களையும் 'தடுக்கப்பட்ட' ஆதாரங்களையும் காண்பித்துத் தங்களுக்குள்ளே முரண்பட்டுக் கொண்டிருப்பவர்கள்.

மனச்சாட்சியை உலுக்குகின்ற ஒரு செயற்பாட்டைத் தடுப்பதற்குக் கூட மூவாயிரம் ஆண்டுகள் பழைமையான கோப்புகளுக்குள்தான் ஆதாரம் தேடியாக வேண்டிய கண்மூடித்தனமான பாதையில்தான் நவீன நூற்றாண்டு பயணித்துக் கொண்டிருக்கின்றது. தங்கள் கால்களில் முள் குத்தினால்கூட எடுத்து விடுவதா வேண்டாமா என்று மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த மேற்கோள்களிலிருந்தே தீர்மானம் எடுப்போம் என்பதாகப் பிடிவாதமாக இருக்கும் பழைமைவாதிகளிடம் வேறென்ன மாதிரியான எதிர்வினையைநாம் எதிர்பார்க்க முடியும்? மனசாட்சியின் நரம்புகள் அறுந்து 'மதம்' முற்றிய பித்தர்களைச் சகித்துக் கொண்டுதான் பல காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆப்பிரிக்க நாடுகளில் மட்டுமல்ல, மத்திய கிழக்கு நாடுகள், ஆசிய நாடுகள், லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து நாடுகளில் குடியேறிய மக்களிடத்திலும் கிளிட்டோரிஸ் நீக்கம் செய்யும் வன் கொடுமை இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது.

பெண்ணுறுப்பின் உள் உதடுகளில் சிதைப்பை ஏற்படுத்துவதனால் மருத்துவ ரீதியான நன்மைகள் ஏதும் உண்டா? இதனால் பெண் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கோ உடல் நலனுக்கோ நன்மைகள் விளையுமா? இதைக் குறித்த எந்தவொரு தெளிவும் விளக்கமும் ஒய்த்தா மாமிகளுக்குத்தெரியாது. கூர் மினுங்கும் புதிய பிளேட்டும், வெண்ணிற துணித்துண்டும் கையுமாக வந்து இந்தக் கடமையைச் செய்கிறவர்களை இலங்கை, கிழக்குமுஸ்லிம்கள் இப்படித்தான் அழைக்கிறார்கள். சில பிரதேசங்களில் 'ஒஸ்தாமாமி' என்றும் சில பிரதேசங்களில் 'ஒய்த்தா மாமி' என்றும்அழைக்கப்படுகின்ற இவர்கள் சந்ததி வழியாக இதே தொழிலைச் செய்கிறவர்கள். பெண் குழந்தை பிறந்த நாற்பதாவது நாளில்பெரும்பாலும் முடி நீக்கம் செய்து, குளிப்பாட்டிப் புத்தாடை அணிவித்து இந்தச் சடங்குக்குக் குழந்தையைத் தயார்ப்படுத்துகிறார்கள்.


இந்தச் சடங்கு பெரும்பாலும் பெண்களை உள்வாங்கிய செயற்பாடாக இருப்பதனாலேயே இது இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்றும் சொல்லலாம். தாயோ, தாயின் தாயோ வெள்ளைத் துணி விரித்த பித்தளை வட்டாவின் மீது குழந்தையின் பிஞ்சுத் தொடைகளை அகல ஊன்றிப் பிடிக்க 'ஒய்த்தா மாமி' குழந்தையின் பிறப்புறுப்பில் பிளேட்டினால் இரத்தம் கசியக் கீறிச் சுத்தமான வெண்ணிறச்சாம்பலைக் கிள்ளிக் காயத்தில் போட்டு விடுவாள்.

குழந்தை வீறிட்டு அழும். இந்தப் பெண்களோ அழுகின்ற குழந்தையை அரவணைத்துக் கொண்டே சிரித்து மகிழ்வார்கள். இவர்களைப் பொறுத்த மட்டில்மிகமுக்கியமான மத பண்பாட்டுக் கடமைகளிலொன்றை நிறைவேற்றி விட்டார்கள். 'பாலியல் ஒழுக்கம்' மிக்க பெண்ணாக குழந்தை வளர்ந்துவாழ்வதற்கு அடித்தளமிட்டுள்ளார்கள். 'கிளிட்டோரிஸ் துண்டிப்புச்'சடங்கினால் இப்படியான 'நன்மைகளை' நிலைநாட்டிவிட முடியும் என்பதே இவர்களது நம்பிக்கை. இவர்களுக்கு இது இனத்தின் கௌரவத்தைக் காப்பாற்றும் பெருந்தியாகம்.

இப்படிக் கிளிட்டோரிஸ் நீக்கம் செய்வதால் எப்படிப் பெண்ணின் 'பாலியல் ஒழுக்கத்தை'(?) இவர்கள் காப்பாற்றுகிறார்கள்? கிளிட்டோரிஸ் என்பது பெண்ணுறுப்பில் காணப்படும் உணர் குவியம் அல்லது மையம். பெண்ணுறுப்பின் இப்பகுதியே ஒரு பெண்ணினது பாலியல் உணர்வுகளைத் தீர்மானிப்பதாக காலங்காலமாக நம்புகிற மக்கள் இதனை நீக்கிவிடுவதன் அரசியல் என்ன?பால் உறவின் போதாமையை உணர்கின்ற ஒரு பெண்ணுக்கு ஓர் ஆணைநிராகரிக்க வேறு காரணங்கள் தேவையில்லைஎன்கின்ற அச்ச உணர்வே,கிளிட்டோரிஸை நீக்குவதற்கு அல்லது சிதைப்பதற்குப் பின்னாலுள்ள ஆண்களின் அரசியல். பெண்ணை எப்போதும் 'ஒருவனுக்கு ஒருத்தியாக' சவக்கிடங்காகக் கிடக்கச் செய்வதற்காகவே இந்தச் சடங்குகொண்டுவரப்பட்டது. எளிதாகச் சொல்வதென்றால் பந்தயத்தில் தான் மட்டுமே சாம்பியனாக இருக்க வேண்டுமென்று சக போட்டியாளரின் கால்களை ஒடித்துவிடுவதுதான் இது.

இந்த நம்பிக்கை மத ரீதியானது என்றாலும், மத ரீதியானது இல்லை என்றாலும் இது பெண் குழந்தைகள் மீதான அப்பட்டமான மனித உரிமை மீறும் வன்முறைச் செயல். இந்த இடத்தில் இன்னுமொன்றையும் கவனிக்கவேண்டும். அதாவது ஆண் உறுப்பில் முன் தோல் அகற்றுதல். 'கத்னா' என்று அழைக்கப்படுகின்ற இந்த வழக்கம் இஸ்லாமியர்கள் மத்தியில் 'சுன்னத்' ஆன கடமை. உங்களில் யாராவது கேட்கலாம், ஆண் பிறப்புறுப்பில் முன்தோலை நீக்குவது வன்கொடுமை இல்லையா, மனித உரிமை மீறல் கிடையாதா? அது என்ன பெண்ணுறுப்புச் சிதைப்பை மட்டும் வன்கொடுமை என்றும் உரிமை மீறல் என்றும் சொல்கிறீர்கள் என்று. ஆண் பிறப்பு உறுப்பில் முன் தோல் நீக்கம் செய்வது மருத்துவ ரீதியாகச் சரி காணப்பட்ட ஒரு செயற்பாடு. இது இஸ்லாமியர்களின் பண்பாடுஎன்ற போதிலும், சுகாதார நோக்கத்துடனும், குறி விறைப்பின்போது பின்னுக்குத் தள்ளப்படாத நிலையிலும் எந்தவொரு ஆணும் அதாவது எந்த இனத்தை மதத்தைச் சேர்ந்தவராயினும் முன்தோலை அறுவைச் சிகிச்சை செய்து அகற்றிக் கொள்ள முடியும். கிராமப் புறங்களில்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...




JUST BECAUSE HE'S TOO YOUNG TO SAY NO DOESN'T MEAN HIS VOICE SHOULDN'T BE HEARD. DON'T TAKE AWAY HIS VOICE.

SAY "NO!" TO ROUTINE INFANT CIRCUMCISION. SAY "YES!" TO EQUAL RIGHTS!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

# ரத்தம் கொடுத்து படம் பார்த்த ரசிகர்கள்!



மாபெரும் சபைகளில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழவேண்டும் என்கிறாரோ? 'நான் ஆணையிட்டால்' படத்தில் எம்.ஜி.ஆர்.

**எம்.ஜி.ஆர்.** தன் ரசிகர்களை எந்த அளவுக்கு நேசித்தாரோ, அதேபோல அவர் மீதும் ரசிகர்கள் உயிரையே வைத்திருந்தனர். உயிருக்கு ஆதாரமான ரத்தத்தைக் கொடுத்து அதன்மூலம் கிடைத்த பணத்தில் படம் பார்த்த வெறி பிடித்த ரசிகர்களும், உயிரைப் பற்றி கவலைப்படாமல் அவரை பார்க்கத் துடித்த, அளவுக்கு மீறிய பாசக்கார ரசிகர்களும் உண்டு.

எம்.ஜி.ஆர் இருவேடங்களில் நடித்த 'நாளை நமதே' படத்தின் சில காட்சிகள் பெங்களூர் விமான நிலையத்துக்கு உள்ளேயும் வெளியேயும் படமாக்கப் பட்டன. எம்.ஜி.ஆரை பார்ப்பதற்காக ஏராளமான கூட்டம். எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் தன்னைச் சுற்றி நடப்பவற்றில் எம்.ஜி.ஆர் ஒரு கண் வைத்திருப்பார். திடீரென, கமரா இருந்த இடத்தைத் தாண்டி ஓடிய எம்.ஜி.ஆர் மேலே பார்த்தபடி, "இறங்கு... இறங்கு" என்று சத்தம் போட்டார். எல்லோரும் மேலே பார்த்தால், அங்கே ஒரு ரசிகர் மின்சாரக் கம்பத்தில் ஏறிக் கொண்டிருந்தார்.

உதவியாளர்களை அனுப்பி அந்த ரசிகரை கீழே இறக்கி அழைத்துவரச் சொன்ன எம்.ஜி.ஆர், அவரிடம் விசாரித்தார். குதிரை வண்டி ஓட்டும் தொழில் செய்பவர் அவர். கூட்டம் சூழ்ந்திருந்ததால் அதைத் தாண்டி வர முடியவில்லை. எம்.ஜி.ஆரை பார்க்க வேண்டும் என்ற ஆவலில் ஆபத்தை உணராமல் மின்சாரக் கம்பத்தின் மீது ஏறியுள்ளார்.

அந்த ரசிகரை அணைத்துக் கொண்ட எம்.ஜி.ஆர், படப்பிடிப்பு நடக்கும் இடத்திலேயே ஒரு நாற் காலி போடச் சொல்லி அவரை உட்காரச் சொன்னார். படப்பிடிப்பு குழுவினருக்கு அளிக்கப்பட்ட மதிய உணவை அவருக்கும் கொடுக்கச் சொன்னார். அன்று முழுவதும் நாற்காலியில் அமர்ந்தபடி படப்பிடிப்பைக் கண்டு ரசித்தார் அந்த ரசிகர். படப்பிடிப்பு முடிந்ததும் அவரோடு புகைப்படம் எடுத்துக் கொண்ட எம்.ஜி.ஆர், 500 ரூபாயையும் அன்பளிப்பாகக் கொடுத்தார். நடப்பது கனவா? நனவா? என்று புரியாத நிலையில் எம்.ஜி.ஆரை வணங்கி விடைபெற்றார் அந்த ரசிகர். படப்பிடிப்பை காண வந்த ஏராளமான ரசிகர்களோடும் எம்.ஜி.ஆர் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

'நாடோடி மன்னன்' திரைப்படம் எப்போது திரையிடப்பட்டாலும் அரங்கு நிறையும். அந்தப் படத்தை மீண்டும் மீண்டும் பார்ப்பதற்காக ஏழை ரசிகர்கள் தங்கள் ரத்தத்தை ஆஸ்பத்திரியில் கொடுத்து, அதன் மூலம் கிடைக்கும் பணத்தை வாங்கி படம் பார்ப்பதாகவும் அடிக்கடி ரத்தம் கொடுப்பது அவர்களுக்கே ஆபத்தாகிவிடும் என்றும் போடிநாயக்கனூரைச் சேர்ந்த டாக்டர் ஒருவர், எம்.ஜி.ஆரின் குடும்ப டாக்டர் பி.ஆர்.சுப்பிரமணியத்துக்கு கடிதம் எழுதினார். இதைத் தடுக்க எம்.ஜி.ஆரிடம் சொல்லி ஏதாவது செய்யுமாறும் கடிதத்தில் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

பி.ஆர்.சுப்பிரமணியம் மூலம் இதை அறிந்த எம்.ஜி.ஆர் மிகவும் வேதனைப் பட்டார். போடிநாயக்கனூரில் ரசிகர் மன்ற கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னையில் இருந்து இதற்காகவே போடி நாயக்கனூருக்கு எம்.ஜி.ஆர் சென்றார். ரசிகர் மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய எம்.ஜி.ஆர், "நீங்கள் என் படத்தை பார்ப்பது மகிழ்ச்சி. ஆனாலும் உங்களை உடன் பிறப்புகளாக நினைக்கும் நான், உங்களுக்கு பாதிப்பு ஏற்பட விடமாட்டேன். என் படங்களை பார்ப்பதற்காக உடலை வருத்திக் கொள்ளக்கூடாது" என்றார்.

கூட்டத்தில் இருந்த பலர், "உங்கள் படத்தை தினமும் பார்க்கத் தோன்று கிறது. ஆனால், எங்களிடம் பணம் இல்லை. அதனால்தான் இப்படி செய்கிறோம்" என்றனர். அதற்கு எம்.ஜி.ஆர், "பணம் இருக்கும் போது பாருங்கள். என்னை நேசிப்பது உண்மையாக இருந்தால் உங்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் எந்த செயலையும் செய்யாதீர்கள். பணம் தேவை என்றால் எனக்கு கடிதம் எழுதுங்கள். நான் மணியார்டரில் பணம் அனுப்பி வைக்கிறேன்" என்றார். கூட்டம் நடந்த மண்டபமே இடிந்துவிழும் அளவுக்கு ரசிகர்கள் கரகோஷம் செய்தனர்.

பின்னர், ஏராளமான ரசிகர்கள் பணம் தேவை என்று எம்.ஜி.ஆருக்கு கடிதம் எழுதி, அவர்களுக்கெல்லாம் உதவியாளர்களை விட்டு மணியார்டர் மூலம் எம்.ஜி.ஆர் பணம் அனுப்பச் சொன்னார்.

> **எம்.ஜி.ஆர் புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த போது, 1950ம் ஆண்டிலேயே மதுரையில் முதன்முதலாக எம்.ஜி.ஆருக்கு ரசிகர் மன்றம் தொடங்கப்பட்டது. பின்னர், எம்.ஜி.ஆர் பெயரில் பல்வேறு அமைப்புகள் தொடங்கப்பட்டன. 1960களில் இவற்றை ஆர்.எம்.வீரப்பன் ஒருங்கிணைத்து 'எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றங்கள்' என்று பெயர் சூட்டினார். பிறகு, திமுக தலைமையின் அங்கீகாரத்தோடு, 'அனைத்துலக எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றம்' உருவானது.**

ஒருமுறை ஒரு பத்திரிகையில் ரசிகர்களின் கேள்விக்கு எம்.ஜி.ஆர் பதிலளித்தார். அதில் ஒரு ரசிகர், "நான் மீண்டும் மீண்டும் உங்கள் படங்களைப் பார்க்கிறேன். எனக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?" என்று கேட்டிருந்தார். 'மிக்க மகிழ்ச்சி. எவ்வளவு முடியமோ அவ்வளவு முறை பாருங்கள்' என்று எம்.ஜி.ஆர் பதிலளிக்கவில்லை. அந்தக் கேள்விக்கு பதிலளித்த எம்.ஜி.ஆர், "உங்கள் வருமானம் எவ்வளவு?" என்று நறுக்கென மூன்றே வார்த்தைகளில் பொருள் பொதிந்த கேள்வியையே பதிலாக அளித்தார்.

தனது படங்களைப் பார்ப்பதற்காக ரசிகர்கள் வரவுக்கு அதிகமாக செலவு செய்வதையோ, உடலை வருத்திக் கொள்வதையோ எம்.ஜி.ஆர் விரும்பியதில்லை. தங்களுக்கு பிடித்தமான நடிகர் என்பதைத் தாண்டி, தங்கள் மீது எம்.ஜி.ஆர் காட்டிய இந்த அக்கறையும் அன்பும்தான், அவர் மீது ரசிகர்களுக்கு மேலும் பற்றை ஏற்படுத்தின.

நடிகரும் பத்திரிகையாளருமான சோ ஒருமுறை கூறினார்... "எல்லா நடிகர்களுக்கும் ரசிகர்கள் உண்டு. எம்.ஜி.ஆருக்கு மட்டுமே பக்தர்கள் உண்டு!" **தொடரும்...**


1978ம் ஆண்டு வெளிநாட்டு சுற்றுப் பயணம் முடிந்து சென்னை திரும்பிய முதல்வர் எம்.ஜி.ஆரை பொதுமக்கள் வரவேற்கின்றனர்.


விழாவில் எம்.ஜி.ஆருக்கு பரிசளிக்கப்பட்ட வாள்.

---

'ஒய்த்தா மாமா' என்று அழைக்கப்படும் சந்ததி வழியாக இதனைச் செய்வதில் புலமைத்துவம்பெற்றவர்களால் இந்தச் சடங்கு செய்யப்பட்டு வருகின்றது. நகர்ப் புறங்களில் வைத்தியசாலைகளில் வலி தெரியாதவண்ணம் மருத்துவக் கண்காணிப்பில் மிக நூதனமாகவே ஆண் உறுப்பு முன் தோல் நீக்கம் நடைமுறையில் உள்ளது.


ஆண் பிள்ளைகளுக்கு 'சுத்னா' செய்யும் நிகழ்வு இலங்கை கிழக்கு மாகாண மக்களின் பண்பாட்டில் ஒரு கொண்டாட்டமாக இருந்த காலமொன்று இருந்தது. அயலார், உறவினர் மற்றும் ஊர்க்காரர்களை அழைத்து , மாடு வெட்டி விருந்தளித்துக் கோலாகலமாக இச்சடங்கு நடக்கும். சுத்னா செய்யப்பட்ட ஆணுறுப்பு பூரண சுகம் பெறும் வரையிலும் நாலைந்துபேர் அந்தச் சிறுவனைச் சுற்றிக் காவல் இருப்பார்கள். உறக்கத்தில் கால்களைப் பிணைத்துக் கொண்டாலோ குப்புறப் புரண்டாலோ மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்த கதையாக்கிவிடும். உறக்கம் விழித்துக் கண்ணும் கருத்துமாக நாலைந்து பேர் சீட்டாடிக் கொண்டும் கேரம்போர்ட் விளையாடிக் கொண்டுமிருப்பார்கள். ஈக்கள், கொசுக்கள் அண்டாதிருக்கக் கூரையின் மேல் விட்டத்தில் கயிறு இழுத்து ஒரு வெள்ளைத் துணியைத் தொங்க விட்டுக் கால்கள் விரித்துக் கிடக்கும் சிறுவனது உடலின் கீழ்ப்பாகத்தை மூடச் செய்திருப்பார்கள். கிட்டத்தட்ட கொசு வலையை ஒத்த இந்த வெண்ணிறத் துணி வலை புண் முழுவதும் ஆறுகிற வரையும் தொங்கிக் கொண்டிருக்கும். கடந்த பத்தாண்டு காலத்திற்குள்தான் இந்தக் கொண்டாட்டம் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இப்போதெல்லாம் ஆண் குழந்தை பிறந்த ஏழாவதோ பதினைந்தாவதோ நாளில் டாக்டர்களிடம் தூக்கிச் சென்று காதும் காதும் வைத்தாற்போல 'நாகரீகமாகக்' காரியத்தை முடித்துவிடுகிறார்கள்.

'கிளிட்டோரிஸ்' எனப்படும் பெண்ணுறுப்புத் துண்டிப்புச் சடங்கு பெரும்பாலும் குழந்தை பிறந்து நாற்பதாவது நாள் செய்யப்படுகின்றது. குழந்தைகள் வளர்வதற்கு முன்பே உடலில் செய்யப்படுகின்ற மாறுதல் 'இதுவே தனது உடல்' என்பதாக நம்பும்படியும், பருவ உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியாதபடியும் செய்துவிடுகின்றது.


கிளிட்டோரிஸ் சிதைக்கப்பட்ட பெண்களின் பாலியல் இன்பம் மட்டுப் படுத்தப்பட்டதா என்பதை ஆராயும் பல ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வுகள், தன் வரலாற்று நூல்கள், ஆவணப்படங்கள் வெளிவந்துள்ளன.

கிளிட்டோரிஸ் நீக்கும் சடங்கு குழந்தைகளை மரணிக்கச் செய்யவும் கூடியது. சில குழந்தைகள் திகைப்பு (Hemorrhaging) என்கிற உள அதிர்விலிருந்து மீள்வதற்கு நாளெடுக்கும். இந்தக் குழந்தைகள் உளப்பிறழ்வு, மூளைப் பாதிப்புக்கு ஆளாகவும் இடமுண்டு. தொடர் இரத்த ஒழுக்கு (Vaginal Bleeding), சிறுநீர் எரிச்சல், பிறப்புறுப்பில் நீர்கட்டிகள் உருவாக்கம், தொற்றுகள், தோல் அரிப்பு மற்றும் மலட்டுத்தன்மை போன்ற நோய்கள் உருவாகுவதற்கும் இது காரணமாகக் கூடியது என்று சில மருத்துவ ஆய்வுகள் நிரூபணம் செய்கின்றன. **(தொடரும்)**



## ஸ்ரோமானிற்கு தடைபோடுவது யார்?

Payback நிகழ்வின் பிரதான போட்டி றோமன்ரிங்ஸ் மற்றும் ஸ்ரோமன் இடையேயான போட்டிதான். இன்றைய திகதியில் WWE அரங்கில் கெத்து றோமன்ரிங்ஸ்தான். கடந்த மாத ஆரம்பத்தில்தான் மல்யுத்த ராஜா அண்டரேக்கரை தோற்கடித்து செம போர்மில் இருப்பவர். Wrestlemania நிகழ்விற்கு முன்பிருந்தே றோமன்ரிங்ஸ் ஸ்ரோமன் மோதல் பிரபலம். றோமன்ரிங்சுடன் அப்போது மோத ஸ்ரோமன் முயன்றார். எனினும், அண்டரேக்கருடனான போட்டியாக அமைந்ததால், அவருக்கு இடம் கிடைக்கவில்லை. Payback இல் இருவரும் மோதுவது உறுதியான பின், சிலவாரங்களின் முன் றோமன்ரிங்ஸ் மீது எதிர்பாராத முரட்டு தாக்குதல் ஒன்றை ஸ்ரோமன் மேற்கொண்டிருந்தார். இதனால் றோமன்ரிங்ஸின் இடதுதோள் மூட்டில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அப்படியிருந்தும் இந்த போட்டியில் கலந்து கொள்வேன் என கலந்து கொண்டார். காயத்துடன் அவரால் சிறப்பாக போட்டியிட முடியவில்லை. ஸ்ரோமானின் முரட்டுதனத்தை எதிர்கொள்ள முடியாமல் றோமன்ரிங்ஸ் தோல்வியடைந்தார். போட்டியின் பின் மேடைப்படியால் தாக்கப்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல ஆயத்தப்படுத்தப்பட்டபோது, மேடையின் பின்பகுதியில் ஒரு தாக்குதல் முயற்சியை ஸ்ரோமான் செய்தார். இது வெற்றியடையவில்லை. மருத்துவமனை வாகன கதவால் கடுமையாக தாக்கப்பட்ட ஸ்ரோமானின் இடதுதோள் மூட்டிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அடுத்தடுத்த வாரங்களில் RAW அரங்கில் சுவாரஸ்யங்கள் காத்திருக்கும்!



## புதிய சம்பியன்!


RAW பெண்கள் பிரிவில் எதிர்பார்க்கப்பட்ட போட்டி சம்பியன்ஷிப் போட்டி. அலெக்ஷா பிலிஸ் மற்றும் பெய்லிக்கு இடையில் நடந்தது. அலெக்ஷா பிலிசுடன் கடந்த சில வாரங்களாக பெய்லி உரசல்களில் ஈடுபட்டு வந்தார். பெய்லியின் சொந்த நகரான கலிபோர்னியாவில் நடந்த இந்த போட்டியில், அவர் தனது சம்பியன்ஷிப் பட்டத்தை தக்கவைப்பார் என்றுதான் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்தப்போட்டியில் அலெக்ஷா பிலிஸ் வென்று புதிய RAW சம்பியன் ஆகியுள்ளார். RAW மற்றும் SAMCKDOWN சம்பியன்ஷிப்பை தனித்தனியாக நடத்த ஆரம்பித்த பின்னர், இரண்டு பட்டங்களையும் வென்ற முதல்வீராங்கனையாகியுள்ளார் அலெக்ஷா பிலிஸ்.




WWE அரங்கில் wrestlemania நிகழ்வுதான் ஒலிம்பிக். Wrestlemania என்றால் மொத்த WWE உலகத்திற்குமே திருவிழாதான். இப்பொழுது இரண்டாவது திருவிழாவை WWE நிர்வாகம் ஆரம்பித்துள்ளது. Payback நிகழ்வுகளை 2013 இலிருந்து நடத்தி வருகிறது. Wrestlemania நிகழ்வுகளிற்கு ஈடான நிகழ்வாக இதனையும் மாற்றும் எண்ணம் WWE நிர்வாகத்திற்கு உள்ளது. இந்த வருடத்திற்கான Payback நிகழ்வுகள் கடந்த ஏப்ரல் 30ம் திகதி நடந்தன. RAW பிரிவில் கையெழுத்திட்ட வீரர்களிற்கான போட்டியாவே தற்பொழுது உள்ளது. இந்த போட்டிகளின் முடிவுகள் இவை.

## மயிரிழையில் வென்ற செத்!


அண்மைநாட்களாக RAW அரங்கை கலக்கும் இன்னொரு வில்லன் சமோ ஆ ஜோ. இன்னொரு மல்யுத்த பிரிவான TNA இல் 16 வருடங்கள் விளையாடிவிட்டு இந்த வருடம்தான் RAW பிரிவில் ஒப்பந்தமாகியுள்ளார். வந்ததும் வராததுமாக செத் ரோலிங்சுடன் லடாய். இவர் விளையாடும்போது அவர், அவர் விளையாடும்போது இவர் என மாறிமாறி குழப்பம் விளைவித்தவர்களை Payback இல் மோதவிட்டது நிர்வாகம். ஏற்கனவே ரோலிங்சின் முழங்காலில் உபாதையிருந்தது. முழங்காலை குறிவைத்துதான் சமோஆ ஆடினார். ஆனால் ஒரு மயிரிழை வெற்றியை ரோலிங்ஸ் பெற்றுள்ளார்.





## கார்டி பையன்கள்!

வயசானாலும் அழகும் ஸ்டைலும் மட்டுமல்ல பழைய வேகமும் குறையவில்லையென மீண்டும் வந்து கலக்கிக் கொண்டிருக்கிறார்கள் ஜெவ் கார்டி, மற் கார்டி சகோதரர்கள். மல்யுத்த அரங்கின் பல்வேறு பிரிவுகளிலும் ஒரு சுற்றி சுற்றிவிட்டு, மீண்டும் இந்த வருடம் RAW பிரிவிற்கு திரும்பியிருக்கிறார்கள். வந்ததும் வராததுமாக RAW இணை சம்பியன்ஷிப்பை வென்றார்கள். Payback நிகழ்வில் சேமஸ், சிசாரோவுடன் இணைச்சம்பியன்ஷிப்பிற்காக மோதி வென்றிருக்கிறார்கள். நாற்பது வயதை கடந்தாலும் இன்னும் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



## ஜெரிக்கோ வெற்றி!

எந்த சண்டையையும் முடிக்கலாம். இந்த பங்காளி சண்டையை முடிக்க முடியாது. கெவின் ஓவின்ஸ் மற்றும் கிரிஸ் ஜெரிக்கோவிற்கு இடையிலான மோதல் இதற்கு உதாரணம். சில மாதங்களின் முன் ஒன்றாக சுற்றித்திரிந்தவர்கள் இன்று பரம எதிரிகள். Payback நிகழ்வில் கெவினை வீழ்த்தி United states சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் ஜெரிக்கோ.





▶ யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் வீதிப்போக்குவரத்து கடமையில் ஈடுபடும் மாணவர்களுக்கான வீதிப்போக்குவரத்து அங்கிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் நடந்தது. வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன் இதில் கலந்து கொண்டிருந்தார். கல்லூரியின் அதிபர் வேனுகா சண்முகரத்தினம், உப அதிபர், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ மட்டக்களப்பு தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் கொடியேற்றமானது கடந்த 01.050.2017 காலை ஆரம்பமானது. களுதாவளை சுயம்பு லிங்க பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மாட்டு வண்டியில் கொடி சிலை எடுத்து வரப்பட்டு கொடியேற்றம் ஆரம்பித்தது.



விளம்பரத் தொடர்புகளுக்கு
076 825 5567, 077 152 1586

Anna & Co (Pvt) Ltd.
- Travels & Tours
- International Courier Services
- Educational Consultancy
- Bus & Guest House Booking
- Visa Assistance for all Categories
- Personalized Gift Making
- Real Estate Business
- Marketing




021 221 5656
070 330 5500
No: 976, K.K.S Road, Jaffna.
annaandco.jaffna@gmail.com
akathamarks.com

KTT travels
கொழும்பு - யாழ்ப்பாணம்




இளவாலை இருந்து பண்டத்தரிப்பு ஊடக மானிப்பாய் வீதி ஊடக யாழ்ப்பாணம் உங்கள் முற்பதிவுக்கு எங்களை அழையுங்கள்
யாழ்ப்பாணம் : 077 44 80 216
கொழும்பு : 077 54 84 963
முறைப்பாடு : 077 40 19 227
65 uduvil Road manipay.

SARAS
SARAS CONSTRUCTION
engineers and contractors
We strive to meet and exceed our client's expectations to foster long term partnership.



- Building constructions
- Building consultancy
- Bridge construction
- Architectural designs
- Interior design
- Road construction
- Cladding works
- Renovation works
- Molding works
- Landscaping
- Aluminium works

Office 1 : Madaththady thellipalai
Phone : 021 412 4656 / 0777 19 6000
Office 2. School lane mathanai , pulloly north , point pedro
Email : Sarasjaffna@gmail.com FB: SarasEngineering



யாழ். மண்ணில் முதல்தர ஆங்கிலக்கல்லூரியுடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
சர்வதேச தரத்திலான ஆங்கிலக் கற்கைநெறிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2017/05/02

IELTS (DURATION 60H WEEK, WEEKEND)
STUDENT VISA, SKILLED MIGRATION, SPOUSE VISA

- தங்களது பெறுமதியான "Band" க்கு நாங்கள் முற்று முழுதாக வழிகாட்டுவோம்
- யாழ்நகரில் IELTS கற்கை நெறி வழிகாட்டலில் முன்னிலையில் திகழும் நிறுவனத்துடன் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
- மாணவர்களின் நேர வசதிக்கேற்ப வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
- Lisitening, Reading, Writing, Speaking என்பன ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பயிற்றுவிக்கப்படும்.
- ஒவ்வொரு பிரிவிலும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

ENGLISH MEDIUM CLASS ஆரம்பம்

GRADE 2-5
- SPEAKING
- READING
- WRITING
- LISTENING

3 MONTH DURATION

GRADE 6-11
ENGLISH MEDIUM
MATHS, SCIENCE AND ENGLISH

- அனுபவம் மிக்க ஆசிரியர்களால் மேற்குறிப்பிட்ட பாடங்கள் கற்பிக்கப்படும்.
- ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- ஆங்கிலப் பாடத்திட்டத்திற்கு அமைவாக கல்வி கற்பிக்கப்படும்.
- குறிப்பிட்டளவு மாணவர்களே உள்வாங்கப்படுவதால் தங்கள் வருகையை உடனடியாக உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- மாணவர்களின் ஆங்கில அறிவுக்கு ஏற்றபடி தனிப்பட்ட வகுப்புக்கள் ஒழுங்குபடுத்தப்படும்.

இதற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

LMC
LONDON METROPOLITAN COLLEGE
LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.
திரேஸ் பேக்கரியின் மேல்புறம்

HOTLINE : 0764190327 I 021 753 8395



இணுவில்

# திருப்பதி ஜீவல்லறி

எண்ணம் போல் தங்க ஆபரணங்களை செய்து பெற்றுக்கொள்ள ஒரே இடம்

கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம்.

**ISHANI**

Jewel Casting and Laser Marking

Gold Work Shop

517/7, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Web: www.korajewells.com T.P:077 7245965, 072 6993737

கணினி வரைகலைஞர்

# GRAPHIC DESIGNER WANTED

| | |
|---|---|
| Qualification | : Diploma in Graphic Design or Equal |
| Experience | : Atleast 1 year |
| Skills | : Adobe Photoshop, Adobe Illustrator, Adobe Indesign, CorealDraw |
| **Salary** | : Rs. 20,000/- (Basic) |

மேலதிக தகைமைக்காக இலவசமாக பயிற்சிகள் வழங்கப்படும்.

Submit your CV's and work samples before 15/04/2017
Email: antsment@gmail.com
Male or Female candidates can apply

**தொடர்பு இலக்கம்: 077 50 111 60**

தொழில் வாய்ப்புக கருத்தரங்கு
LEARNING ABOUT Advertising, Graphic Design, Animation, Marketing, etc...
உங்கள் பதிவுகளுக்கு CALL : 077 50 111 60, 021 753 8395

# Green Dream Engineering

உயர் தரம்... குறைந்த செலவு...

- தகுதி பெற்ற நிபுணர்களின் மேற்பார்வை
- பாரம்பரிய தொழிநுட்பத்துடன் கூடிய நவீன கட்டமைப்புகள்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்.
- தவணை முறை கொடுப்பனவுகள்
- தரமான மூலப்பொருட்கள்.
- வாடிக்கையாளர் திருப்திக்கமைவான தெரிவுகள்.

**We providing**

- Dream House
- School building
- Office building
- Hotels & restaurants
- Gardening and landscaping
- Repairing & modifying



உங்கள் கனவுக்கு உயிர் கொடுக்க நாங்கள் உங்கள் உடன் இணைகிறோம்



யாழ்ப்பாணத்தில் உயர் தொழிநுட்பத்துடன் கூடிய கட்டிடங்களை நிர்மாணிக்கும் ஸ்தாபனம்.

Phone : 0774166859 ,0775952346 ,0771439777
Email : greendreamengineer@gmail.com
FB: @greendreams.engineers




# PARAMESWARY REST INN

WIFI / TV / AC / Non AC / 5Bed Rooms / 4 bed Rooms / 3 Bed Rooms / Double Bed rooms / Single rooms/ Hall kitchen facility / Parking


என சகல வசதிகளுடனும் யாழ்ப்பாணத்தின் மையத்தில் மருதனார்மடத்தில் அமைந்துள்ளது

**வசதிகள் மற்றும் அமைவிடம்**

1. சுற்றுலா பயணிகளுக்கான சகல ஒழுங்குகளும் செய்துகொடுக்கப்படும்
2. யாழ்ப்பாணத்தின் மத்தியில் அமைந்துஉள்ளதால் அனைத்து பகுதிகளுக்கும் இலகுவாக பிரயாணிக்க முடியும்
3. சமைத்து சாப்பிடுவதற்கன வசதிகள் மற்றும் அமைவிடம்
4. மிகவும் அமைதியான மற்றும் இயற்கையான சூழல்
5. யாழ்ப்பாணத்தில் பிரசித்தமான அனுமார் கோவிலுக்கு மிக அருகாமையிலும் மற்றும் யாழ் நுண்கலை பிடத்துக்கு மிக அருகிலும் அமைந்து உள்ளது.
6. சுற்றுலா பிரயாணிகளுக்கு சைக்கிள் வசதிகள் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்
7. ஒடியல் கூழ் சுவைத்து மகிழலாம்







யாழ்ப்பாணத்து சுவையில் தரமான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப சுவைத்து மகிழ இன்றே நாடுங்கள்.

நியாயமான கட்டனத்தில் தரமான சேவை

Parameswary rest inn
Kaithady Road maruthanarmadam jaffna
(opposite to education department )
Phone number : 778919367 , 0767060095

10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

Bright Inn

# BRIGHT INN

பிறையிட் இன் ஹோட்டல்



அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
|---|---|---|
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | | |

இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் BRIGHT INN

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு

0112 329664, 0117 242233, 0117 242244

E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com

HOT LINE 0777 983933


இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 30.04.2017 அன்று வெளியிடப்பட்டது.